கோகுலம்

GOKULAM

ஜனவரி '93 ரூ. 3.00




போலச்
சிரியுங்க;
அழகாய்
போட்டோ
அமையுங்க!



கோகுலம்

1993 ஜனவரி மாத இதழ்
மலர் : 10 இதழ் : 12



அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் இனிய புத்தாண்டு பொங்கல் வாழ்த்துகள்.


அறிவியல் கண்டுபிடிப்புகள் அமைதியான மனித வாழ்க்கைக்குத் துணையாக இருந்து, போர் அபாயம் நீங்கி, பசிப்பிணி மறைந்து, மனிதகுலம் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட இந்தப் புத்தாண்டு உதவ வேண்டும் என இறைவனை வேண்டுவோம்.

கோகுலத்தில் வாசகர் பங்கு இன்னும் அதிகமாக வேண்டும். பேட்டி களில் மற்ற ஊர்க் குழந்தைகளுக்கும் அதிக வாய்ப்புத் தர வேண்டும் என்று பலரும் கேட்டு வந்த நீண்ட நாள் கோரிக்கை, இப்பொழுது நிறைவேறுகிறது. இந்த இதழில் புத்தாண்டைப் பற்றிய பேட்டி தந்திருப்பவர்கள், கீழச்சீவல்பட்டிக் குழந்தைகள். உங்களுக்கு மகிழ்ச்சிதானே?



கதையரங்கத்திற்கும், பாட்டரங்கத்திற்கும் தங்கள் படைப்புகளை அனுப்புவோர் தவறாமல் தங்கள் வயதைக் குறிப்பிட வேண்டும். முழு முகவரியையும் தர வேண்டும். பேப்பரின் ஒரு பக்கம் மட்டுமே எழுத வேண்டும்.

கேளுங்கள் சொல்லப்படும் பகுதியின் பக்கங்களை அதிகமாக்க வேண்டும் என்ற வேண்டுகோள் அதிகரித்து வருகிறது. இது இப்போதைக்கு இயலாது. போகப் போகப் பார்க்கலாம்.



நூறு ரூபாய் இரகசியத்தின் கதாநாயகன் பரதன், உங்கள் மனதைப் பெரிதும் கவர்ந்து விட்டதை உங்கள் கடிதங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இதழுடன் உங்கள் கோகுலத்திற்குப் பத்து வயது பூர்த்தியாகிறது. வரும் ஆண்டில் இன்னும் புதிய மாற்றங்களை நீங்கள் எதிர்பார்க்கலாம் என்பதை மட்டும் பணிவோடு கூறிக் கொள்கிறேன்.

உங்கள் அபிமான கோகுலம் பதினோராவது ஆண்டில் உங்கள் அன்பாலும், ஆதரவாலும் அடியெடுத்து வைக்கிறது. கோகுலத்தின் பெருமை, வாசகர்களின் பெருமை.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)





உயிர்களிடத்தில் அன்பு வேணும்
தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

கோகுலம்

ஜனவரி 1993


இந்த இதழில்....



❄ மந்திர மணி – பக்கம் 41

❄ பிராணிகளின் இடப் பெயர்ச்சி – பக்கம் 17






❋ தும்பி சிறகை மடக்குமா?
- பக்கம் 93



விடுகதைப் போட்டி
- பக்கம் 31

❋ ஹைடர் ஜக்கு
- பக்கம் 81





புலியைக் கொன்ற பழனி!

அந்தக் கிராமத்திற்கு அடிக்கடி புலி ஒன்று வர ஆரம்பித்தது. மனிதர்களையும் விலங்குகளையும் பிடித்துச் சாப்பிட ஆரம்பித்தது. யாராலும் எதுவும் செய்ய முடிய வில்லை. கிராமத்துச் சிறுவன் பழனிவேல் புலியை எப்படியாவது அடக்க முடிவு செய்தான்.

ஒரு டப்பாவில் கொஞ்சம் சர்க்கரையைப் போட்டு மூலையில் வைத்தான். அதில் நிறைய எறும்புகள் மொய்க்க ஆரம்பித்தன. பழனிவேல் அந்த டப்பாவை இறுக மூடித் தன் இடுப்பில் செருகிக் கொண்டு புலி வரும் பாதையில் காத்திருந்தான்.

புலி வந்தது. புலியின் பெரிய உருவம் கண்டு பழனிவேல் சிறிது பயம் கொண்டான். இருப்பினும் தைரியப்படுத்திக் கொண்டு புலியை 'மகாராஜா வாழ்க' என்று கூறி வணங்கினான்.

புலி அவனைப் பார்த்து உறுமியது. ''மனிதப் பதரே, உன்னைச் சாப்பிடப் போகிறேன். 'வாழ்க' எல்லாம் போட்டு வணங்கி எனக்கு ஐஸ் வைக்காதே. நீ தப்ப முடியாது. உன்னைச் சாப்பிடப் போகிறேன்'' என்றது.

''என்னைத் தாராளமாக நீங்கள் சாப்பிடலாம். மனிதர்களைச் சாப்பிடும் முன்பு, காட்டில் இருக்கும் இல்லா இலையின் சாற்றை அவர்கள் மேல் தடவிச் சாப்பிட்டால் ரொம்பச் சுவையாயிருக்கும். என்னைக் காட்டிற்கு இழுத்து சென்று சாறு தடவிச் சாப்பிடுங்கள்'' என்றான் பழனிவேல்.

புலியும் சரியென்று அவனை இழுத்துச் சென்றது. புதர் வழியாகச் செல்கையில் டப்பாவைத் திறந்து புலி அறியாமல் புலியின் காதில் உதறினான். அதில் இருந்த எறும்புகள் சர்க்கரையோடு புலியின் காதில் விழுந்தன. எறும்புகள் காதுக்குள் புகுந்து புலியைக் கடிக்க ஆரம்பித்தன. புலி வேதனை தாளாது உடலைப் போட்டு நெளித்து உதறியது. புதர்முட்கள் அதன் உடலைக் கிழித்தன.

''என் காதில் என்னவோ நுழைந்து விட்டது. எடுத்து விடு'' என்றது புலி.


அப்பொழுதுதான் பார்ப்பவன் போல் நடித்த பழனிவேல், 'மகாராஜா, இதற்கு அதோ இருக்கும் கிணற்றில் குதித்துக் குளித்தால் சரியாகி விடும்' என்றான்.

அவசரத்தில் வலி பொறுக்காத புலியும் அந்தப் பாழுங் கிணற்றில் குதித்தது. பட்டினியால் இறந்தது.

கிராமத்தார் பழனிவேலுக்குப் பரிசு அளித்துப் பாராட்டினர்.

– எஸ். சண்முகப்பிரியா,
மன்னார்குடி.

முதன் முதலாக....



முதன் முதலாக முதல் அமெரிக்க அம்பாசிடர்...

முதன் முதலாக ஆடும் நாற்காலியைக் கண்டவர்..

முதன் முதலாக ஹார் மோனியத்தை கண்டு பிடித்தவர்..

முதன் முதலாக தெரு விளக்கை போட்டவர்...

முதன் முதலாக அரசியல் கார்டூனை வரைந்தவர்..

முதன் முதலாக சர்கு லேஷன் லைப்ரேரியை உருவாக்கியவர்...

முதன் முதலாக இடி தாங்கியைக் கண்டுபிடித்தவர்...

முதன் முதலாக செய்தித்தாளை தபால் மூலம் அனுப்பினவர்..

முதன் முதலாக தெருவை சுத்தம் செய்யும் டிபார்ட்மென்டை ஏற்படுத்தியவர்..

முதன் முதலாக நீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தியவர்..

முதன் முதலாக நவீனமுறை தபால் நிலைய திட்டத்தை இயக்கி வைத்தவர்..

முதன் முதலாக விளம்பரங்களில் படங்களையும் போடச் செய்தவர்...

முதன் முதலாக இரு கண்ணாடிகள் உள்ள மூக்கு கண்ணாடியை கண்டுபிடித்தவர்..

முதன் முதலாக மின்சாரத்துக்கும் மின்னலுக்கும் ஒற்றுமை இருக்கிறது என்பதைக் கண்டவர்..

முதன் முதலாக டெமாக்ரடிக் கட்சியை ஆரம்பித்தவர்...

இத்தனை முதன் முதல்களையும் கண்டு பிடித்துச் சாதனை செய்தவர் யார் தெரியுமா? பெஞ்சமின் ஃபிராங்களின்தான்!

- மு. பூபாலன்.



இறையுணர்வோடு இணைந்த வாழ்க்கை - ஆர். லட்சுமி நாராயணன் - பக். 80 - ரூ. 11/- விசாலாட்சி நிலையம், 17, அம்மையப்பன் சந்து, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

தலைப்பைப் பார்த்ததும் ஏதோ பெரியவர்களுக்கான ஆன்மிக நூல் என்று எண்ணத் தோன்றினாலும் உண்மையில் இது சிறுவர்களுக்கான நூலே! இறைவன் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொள்ள வைக்கும் அறநெறிகளை வலியுறுத்தும் பன்னிரண்டு கதைகளின் தொகுப்பு. பெரும்பாலும் ஏற்கெனவே கேட்ட வாய்மொழிக் கதைகள். ஆனால் சுவை குன்றாது தந்திருப்பதை நன்கு பாராட்டலாம். குழந்தைகள் விரும்பிப் படிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. சிறுவர் நூல் என்பதால் ஒருசில படங்களையாவது சேர்த்திருக்கலாம்.

தாத்தாவுக்குத் தாத்தா - டாக்டர். ஆலந்தூர் கோ. மோகனரங்கன் - பக். 160 - ரூ. 20/- மீனாகோபால் பதிப்பகம், 4, ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை- 600 088.

தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யரின் குருநாதர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரின் வாழ்க்கை வரலாறு இந்த நூல். மகாவித்துவானின் தமிழ்ப்பற்று, மனிதநேயம், மாணவர்களை அவர் நடத்தியவிதம், மற்ற பெரியவர்கள் அவருக்கு அளித்த சிறப்புகள் போன்றவற்றை எல்லாம் மிகவும் சுவையாக சிறுவர்களுக்குக் கூறியிருக்கிறார் ஆசிரியர். ஒரு வாழ்க்கை வரலாறு நூலைப் படிக்கிறோம் என்ற எண்ணமே எழாத வகையில் சுவையாக எழுதியிருப்பதை எத்தனை பாராட்டினாலும் தகும். பாராட்ட வேண்டிய படைப்பு.

மழலைத் தமிழ் - சா. பாத்திமா யாஸ்மின் - பக். 82 - ரூ 10/- பாத்திமா பதிப்பகம், 67, காஜியார் வீதி, காரைக்கால் - 609 602.

பன்னிரண்டே வயது நிரம்பப் பெற்ற குட்டிக் கவிஞர் ஒருவரின் சாதனைப் படைப்பு இது. குழந்தைகளுக்கான பொருள்களில் ஐம்பது பாடல்கள் இதில் உள்ளன. ஒரு குழந்தையே பாடியுள்ளதால் நல்ல சந்தமும், கற்பனை நயமும் நிறைந்துள்ளது. மாதிரிக்கு இதோ :

குவா குவா வாத்து
குள்ள மான வாத்து!
மெதுவாக மெதுவாக நடந்து
மேனி அசைக்கும் வாத்து!

எதிர்காலத்தில் பெரிய கவிஞராக வரக்கூடிய இந்த குட்டிக் கவிஞரை இப்பொழுதே வாழ்த்துவோம்!

கதை சொல்லும் கணக்கு! டாக்டர் பூவண்ணன் - பக் - 68 - ரூ.9/- உதயா புக் சென்டர் பிரைவேட் லிமிடெட், 6, சிவப்பிரகாசம் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை - 2.

திறமை இருந்தால் கணக்குகளைக் கூட எத்தனை சுவையாகக் கதை போல் கூறிப் புரிய வைக்கலாம் என்பதை பூவண்ணன் காட்டியிருக்கிறார். கணக்கு என்றாலே காக்கும் குழந்தைகளும் எல்லா வயதினரும் படித்து இன்பம் கொள்ளத் தக்க சாதனைப் படைப்பு. ஓரிரு படங்கள் இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

வாகனங்கள் வளர்ந்த கதை - முல்லை முத்தையா - பக். 40 - ரூ.6/- உதயா புக் சென்டர், பிரைவேட் லிமிடெட், 6, சிவப்பிரகாசம் தெரு, மவுண்ட்ரோடு, சென்னை - 2.

மத்திய அரசின் "National Book Trust of India,". "The story of our transport" என்று அருமையான ஆங்கிலப் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதைப் பார்க்கும்போதெல்லாம் இப்படிப்பட்ட ஒரு நூல் குழந்தைகளுக்காகத் தமிழில் யாரும் வெளியிடவில்லையே என்று பலமுறை ஏங்கியிருக்கிறேன். அந்த ஏக்கத்தை ஆசிரியரும் பதிப்பாளரும் தீர்த்து வைத்திருக்கிறார்கள். போக்குவரத்தும், வாகனங்களும் எப்படி வளர்ந்தன என்பதை மிகவும் சுவைபட நூலில் கூறியுள்ளார்கள். படங்கள் நூலுக்கு மேலும் அழகு சேர்க்கின்றன. பயன்மிக்க பரிசு.

வித்தை புரியும் சிந்தைக் கதைகள் - அசோக் குமார் - பக். 120 - ரூ.15/- விசாலாட்சி நிலையம், 17, அம்மையப்பன் சந்து, இராயப்பேட்டை, சென்னை - 14.

சிறுவர்களுக்கான சுவைமிக்க பதிமூன்று கதைகள் இதில் உள்ளன. ஒவ்வொன்றும் செவிவழிக் கேட்ட பாரம்பரைக் கதைகளின் புதிய உருவம். தீண்டாமையை அர்த்தமற்றது என்று இறைவன் ஆதிசங்கரருக்குப் புரிய வைத்த கதையும் உள்ளது. குற்றம் செய்த கடல் அரசனை, குருவிகள் அகஸ்தியரின் துணைகொண்டு அடக்க வைக்கும் கதை நன்கு சுவைக்கக்கூடியது. சிங்கத்தை ஏமாற்ற முயன்ற செம்மறியாட்டின் கதை சிரிப்பை வரவழைக்கிறது. சிறுவர் நூலாக இருப்பதால் ஒன்றிரண்டு படங்களைச் சேர்த்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

நினைவிலே நிலைத்து நிற்கும் நீதிக் கதைகள் - மலர்க் கொடி - பக். 180 - ரூ. 23/- விசாலாட்சி நிலையம், 17, அம்மையப்பன் சந்து, இராயப் பேட்டை, சென்னை - 600 014.

பறவைகளையும் விலங்குகளையும் வைத்து எழுதப்பட்ட சுவைமிக்க பதினெட்டு கதைகள் உள்ள தொகுப்பு. ஒவ்வொன்றும் தனியான கதை; அறிவுரை தருகிறது. ஒரு கதைத் தலைப்பின் முடிவும் பெயர், அடுத்த கதையின் தொடக்கத் தலைப்பாக வைத்து ஒரு புதுமையைச் செய்துள்ளார் ஆசிரியர். கதைகளுக்குப் படங்களும் இருந்திருந்தால் குழந்தைகளை இன்னும் அதிக அளவுக்கு ஈர்க்கும்.

மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். சிறுவர் நூல்களும் பொது நூல்களும் மட்டுமே மதிப்புரை செய்யப்படும். கட்டணம் கிடையாது.



பந்து எங்கே குறியுங்கள் – போட்டி முடிவு

அடேே அப்பா! இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள்! ஆனாலும் கூட, பந்து எங்கே உள்ளது என்பதை சரியாகக் குறித்து அனுப்பியுள்ளவர்கள் பதினோரு பேர்கள் மட்டுமே!

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. ஆர். சுரேஷ், சென்னை – 15
2. எம். சேகர், கெந்தளம் அஞ்சல், சேலம் மாவட்டம்
3. ஆர். நிஷா, நாகர்கோவில் – 4
4. ஏ. ஷம்ஷாத் பேகம், கருங்குழி அஞ்சல்
5. எல். பாலகிருஷ்ணன், கொமரபாளையம்
6. உ. பார்த்தசாரதி, பொத்தனூர்
7. எஸ். சாதிக் அலி, சின்கமண்டா அஞ்சல்
8. என். ராமகிருஷ்ணன், கிருஷ்ணகிரி – 2
9. எஸ்.வி. மணிவண்ணன், கடலூர் – 1
10. முகம்மது சாதிக், பாண்டிச்சேரி – 1
11. கே. முகமது ஜாவித், வேலூர் – 3

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்ட நூற்றுக் கணக்கான வாசகர்களுக்கு நன்றி. பந்து எங்கே உள்ளது என்பதைப் படத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்.

எங்கள் ஊரில்

எமபெருமான்!

நான் ஆறாம் வகுப்பில் படிக்கிறேன். என் தமிழ்ப் புத்தகத்தில் வாழ்த்துப் பகுதியில் ''எம்பெருமான் திருநடனம் புரியும் இடம்'' என்று இருந்தது. ஒருநாள் ஆசிரியர், ஒரு மாணவியை



அழைத்து, ''எம்பெருமான் திருநடனம் புரியும் இடம் என்று தொடங்கும் பாடலை கரும்பலகையில் எழுது'' என்று பணித்தார். அந்தப் பெண் எம்பெருமான் என்று எழுதுவதற்குப் பதில் எமபெருமான் திருநடனம் புரியும் இடம் என்று எழுதியவுடன் வகுப்பே சிரிப்பொலியால் வழிந்தது.

– பி. ராமேஸ்வரி, பட்டீச்சுரம்.

நிலாவே...

ஒருமுறை எங்கள் தமிழ் ஆசிரியர், அழ. வள்ளியப்பா அவர்கள் எழுதிய, ''பிறை நிலா'' என்ற பாடலை நடத்தினார். அவர் நடத்தி முடித்ததும், ஒவ்வொரு மாணவனாக எழுந்து அந்தப் பாடலைப் படித்து விட்டு உட்காருமாறு




பணித்தார். அப்பொழுது சற்றுப் பருமனாக உள்ள மாணவனின் முறை வந்தது. அவன் எழுந்து அந்தப் பாட்டில் உள்ள, ''பிறை நிலாவே - நான் உன் மேல் ஏறிக் கொள்ளலாமா சொல்லு நிலாவே'', என்ற வரியைப் படித்தான். ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, ''வேணாண்டா, நிலா தாங்காது...!'' என்று சொல்ல, ஆசிரியர் உட்பட அனைவரும் 'கொல்'லென்று சிரித்தோம்.


– ப. கணேஷ், சென்னை 18.

காற்றாடியைப் போடு!

வீட்டில் நாங்கள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். கரண்ட் கட்டாகி விடவே விளக்கை ஏற்றி வைத்தி



நடந்தது



ருந்தோம். என் தாயார் நகைச்சுவையாக ''காற்றாடியைப் போடுங்கள். மிகவும் புழுக்கமாக இருக்கிறது'' என்று கூற, உடனே என் தம்பி, ''காற்றாடியைப் போடாதீர்கள். விளக்கு அணைந்து விடும்'' என்று கூற, தம்பி, நான், தந்தை, தாய் எல்லோரும் கொல் லென்று சிரித்து விட்டோம்.

– கு. தமிழ்ச்செல்வி,சோழன்மாளிகை.

'என்ஏபி' என்பது என்ன?

நான் ஏழுமலை பாலிடெக்னிக் கில் எலெக்ட்ரானிக்ஸ் படித்து வருகி றேன். எங்களுக்கு ''நெட் ஒர்க் ஆன் டனா புராபகேஷன்'' என்று ஒரு பாடம் உள்ளது. அதை நாங்கள் 'NAP' என்று அழைப்போம். அது மிகவும் கடினமான



பாடம். பாஸ் பண்ணுவது கடினம். ஒரு நாள் ஆசிரியர் மாணவன் ஒருவனை எழுப்பி, "N.A.P என்றால் என்ன?'' என்று கேட்டார். அதற்கு அவன், ''நாட் ஏபிள் டு பாஸ்'' (Not Able to Pass) என் றான். அதை கேட்டு ஆசிரியர் உட்பட, அனைவரும் 'கொல்'லென்று சிரித்து விட்டோம்.

– எஸ். செந்தில்குமார், விழுப்புரம்.

ஸ்டாம்ப் எங்கே?

நான் எட்டாம் வகுப்பு படிக்கின் றேன். கோகுலம் பத்திரிகைக்கு சிறு கதை அனுப்புவதற்காக கவரும், ஸ்டாம் பும் வாங்கி வந்தேன். வீட்டிற்கு வந்த வுடன் கவரினுள் கதையைப் போட்டு ஒட்டி விட்டு ஸ்டாம்பைத் தேடினேன் காணவில்லை. ஆகா ஒரு ரூபாய் ஸ்டாம்பு காணாமல் போய் விட்டதே என்ற வருத்தத்துடன் மற்றொரு ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்கி ஒட்டி கவரை தபால் பெட்டியில் போட்டு விட்டேன். வீட்டிற்கு வந்தவுடன் தண் ணீர் குடிக்கலாமென்று நினைத்து ஒரு மடக்கு நீர் குடித்தவுடன் நாக்கில் ஏதோ தட்டுப்படுவது போல இருந்தது. என்ன வென்று எடுத்துப் பார்த்தால் காணாமல் போன ஸ்டாம்புதான் அது. பிறகுதான் தெரிந்தது எச்சில் பசைக்காக நாக்கில் நனைத்ததை எடுக்கவில்லையென்று. இதை எங்கள் வீட்டில் சொல்ல அனை வரும் நெடுநேரம் சிரித்தனர்.

– சு. துர்காதேவி, குடந்தை.


பிங்பாங்கில் ஒரு டிங்டாங் போட்டி!



"பிங் பாங்" என்று சொன்னாலே ஏதோ சீன மொழி போல் தோன்றவில்லையா? டேபிள் டென்னிஸ் என்றும் பரவலாக அழைக்கப்படும் 'பிங்பாங்' ஆட்டத்தில் ஆசிய சாம்பியன்கள் சீனர்கள்தாம். சமீபத்தில் புது தில்லியில் முடிவுற்ற பதினோராவது ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் ஷிப் போட்டிகளில் ஏழு பிரிவுகளில் ஐந்தில் சீனாதான் தங்கப் பதக்கங்களைத் தட்டிக் கொண்டு போயிருக்கிறது.

1950 வரை ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக ஹங்கேரி, ஆதிக்கம் செலுத்திய இந்த விளையாட்டில் இன்று வெளுத்துக் கட்டிக் கொண்டிருப்பவர்கள் ஜப்பானியரும் சீனர்களுமே.

டேபிள் டென்னிஸ் எப்போது, எங்கே, முதலில் விளையாடப்பட்டது என்பதற்குக் குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் 1880லேயே இங்கிலாந்து ஸ்போர்ட்ஸ் கடைகளில் இந்த விளையாட்டுக்கான உபகரணங்கள் விற்கப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது. திறந்தவெளியில் ஆடப்படும் டென்னிஸிலிருந்துதான் கட்டடத்தின் உள்ளே ஆட வசதியாக டேபிள் டென்னிஸ் உருமாறி வந்திருக்க வேண்டும் என்றும் நம்பப்படுகிறது. முதன் முதலில் செலுலாய்ட் டேபிள் டென்னிஸ் பந்தை உருவாக்கியவர் இங்கிலாந்தின் ஜேம்ஸ் கிப்ஸ். டேபிள் டென்னிஸ் மட்டைகளுக்கு முத்து முத்தான pimpled ரப்பர் ஷீட் ஒட்ட ஆரம்பித்தது இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்தான்.



● சந்திரசேகர்

டேபிள் டென்னிஸ் ஆட்டத்தை முறைப்படுத்தி உலக நாடுகளிடையே பந்தயங்களை நடத்தும் சர்வதேச டேபிள் டென்னிஸ் ஃபெடரேஷன் 1926ல் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் இங்கிலாந்தில் உள்ளது. சுமார் 150 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

டேபிள் டென்னிஸை எப்படி ஆடுவது என்று பார்க்கலாமா? டாஸில் வெற்றி பெறும் வீரர், முதலில் ஸர்வ் செய்யவோ அல்லது தாம் ஆடும் பக்கத்தைத் தேர்ந்தெடுக்கவோ உரிமை பெறுகிறார். டி.டி. 'சர்வ்'வுக்கும் டென்னிஸ் 'ஸர்வ்'வுக்கும் வித்தியாசம் உண்டு. ஸர்வ் செய்பவரின் கோர்ட்டில் வந்து விழுந்து, பிறகு நெட்டுக்கு மேலே சென்று மறுபக்கக் கோர்ட்டில் விழ வேண்டும். அதுவே திருப்பி அடிக்கப்படும் போது, அடிப்பவர் கோர்ட்டில் விழாமல் நேரே எதிராளி கோர்ட்டுக்குப் போய் விழ வேண்டும். இப்படியே ஆட்டம் தொடரும். முதலில் சர்வ் செய்பவர் தொடர்ந்து ஐந்து புள்ளிகளுக்கு ஸர்வ் செய்வார். அடுத்த ஐந்து புள்ளிகளுக்கு எதிராளி ஸர்வ் செய்வார். பிறகு மறுபடி மாற்றம் கொள்ள வேண்டும். 21 புள்ளிகள் கொண்டது ஒரு கேம். யார் முதலில் 21 புள்ளிகள் எடுக்கிறாரோ அவரே கேமை வென்றவர்.

ஸ்கோர் 20 - 20 என்று சமநிலையில் இருக்குமானால், ஒருவர் மாறி ஒருவர் தலா ஒவ்வொரு புள்ளிக்கு சர்வ் செய்ய வேண்டும். யார் முதலில் இரு புள்ளிகள் வித்தியாசம் காட்டுகிறாரோ அவரே அந்த கேமை வென்றவர்.

டேபிள் டென்னிஸில் இரட்டையர் ஆட்டமும் உண்டு.

சர்வதேச சாம்பியன் ஷிப் போட்டிகள் முதன் முதலில் 1926ல் பெர்லின் நகரில் நடைபெற்றன. ஆறே நாடுகள் தாம் பங்கேற்றன. தற்போது 150க்கும் மேற்பட்ட நாடுகளில் டி.டி. விளையாடப்பட்டு வருகிறது.

1926ல் ஐரோப்பிய சாம்பியன் ஷிப் என்று ஆரம்பித்தது, நாளடைவில் உலக சாம்பியன் ஷிப் என பெயர் மாற்றம் கொள்ளும் வகையில், டி.டி. பல நாடுகளுக்கும் பரவியது. உலக சாம்பியன் ஷிப் போட்டிகள் இப்போது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கின்றன. ஆண்கள் பிரிவு, மகளிர் பிரிவு என்றும் இரட்டையர், கலப்பு இரட்டையர் என்றும் தங்கப் பதக்கங்களுக்காகப் போட்டிகள் நடக்கின்றன.

வேடி ஸ்வேத்லிங் என்பவர்தான் முதன் முதலாக டி.டி.க்கு ஒரு வெற்றிக்

★ ஷோமா பரிக், மோனாலிசா.





★ நியாதி ஷா

கோப்பையை அளித்தார். அவர் பெயரால் இன்றைக்கும் ஸ்வேத்லிங் கப் உலக சாம்பியன் பட்டம் பெறும் நாட்டின் வீரர்களுக்கு வழங்கப்படுகிறது.

கடந்த 41 ஆண்டுகளில் ஸ்வேத்லிங் கோப்பையை அதிகமாக வென்ற நாடு ஹங்கேரி - 12 முறை! அடுத்து வருவது சீனா - 10 முறை. சென்ற வருடம் நடந்த உலகப் போட்டியில் வென்றது ஸ்வீடன். (மூன்றாவது தடவையாக.)

உலக சாம்பியனாக விளங்கும் பெண்கள் அணிக்கு கார்பிலான் கோப்பை வழங்கப்படுகிறது. இதை நிறுவியவர் பிரெஞ்சு டி.டி. சங்கத் தலைவர் மார்ஸெல் கார்பிலான். இந்தக் கோப்பையை இதுவரை அதிக முறை வென்ற நாடு சீனா - 9 தடவை. அடுத்து ஜப்பான் - 8 தடவை. சென்ற ஆண்டு இக் கோப்பையை வென்ற நாடு ஒருங்கிணைந்த கொரியா.

சமீப காலமாக டி.டி., ஒலிம்பிக் போட்டிகளிலும் ஆசிய விளையாட்டுக்களிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.


இந்தியா, உலகக் கோப்பை பெறுவது இருக்கட்டும்; ஆசிய அளவில் கூட இதுவரை பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. 1978ல் கோலாலம்பூரில் நடந்த ஆசிய சாம்பியன் ஷிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் ஆறாவதாகவும் பெண்கள் பிரிவில் நான்காவதாகவும் வந்ததே இதுவரை இந்தியா புரிந்துள்ள பெரிய சாதனை.

இந்திய டேபிள் டென்னிஸ் வீரர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், வி. சந்திர சேகர், கமலேஷ் மேத்தா, மஞ்சித் துவா, மன்மீட் சிங் ஆகியோர். பெண்களில் இந்து பூரி, நியாதி ஷா.

இந்திய டி.டி.யின் எதிர்காலம் நம்பிக்கை அளிப்பதாகவே உள்ளது. இதற்கு முக்கிய காரணம், முதன் முதலாக வெளிநாட்டு 'கோச்' ஒருவர் நம் அணிகளைக் கவனிக்க நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்தான் சீனாவின் லி டியாங்.

சேதன் பாபூர், அரூப் பஸாக், எஸ். ராமன், புவனேசுவரி போன்ற நமது இளம் ஆட்டக்காரர்கள் நன்றாகவே ஆடி வருகிறார்கள். சிறந்த கோச் இப்போது கிடைத்திருப்பதால் நமது ஆட்டத் திறன் உயரும் என்பதை நம்பிக்கையோடு எதிர்பார்க்கலாம்!

– ராகவ்



உங்களில் பெரும்பாலோர் தபால் தலை சேகரிப்பைப் பொழுது போக்காக வைத்துக் கொண்டிருப்பீர்கள். தபால் தலை சேகரிப்பு உலகெங்கும் பரவியுள்ள பயன் மிக்க பொழுது போக்கு. அதே நேரத்தில் இது அதிகச் செலவு வைக்கும் பொழுது போக்கும் கூட. சில வகைத் தபால் தலைகளை இலட்சக் கணக்கான ரூபாய் கொடுத்து வாங்கவும் உலகில், பலர் தயாராக இருக்கிறார்கள். அவை மிக... மிக... நெருக்கடியான சந்தர்ப்பங்களில் வித்தியாசமாக வெளியிடப்பட்டவையாக இருப்பதே இதற்குக் காரணம்.

இதோ அப்படிப்பட்ட சில ஸ்டாம்புகளைப் பற்றிய சுவையான செய்திகள்......

பிரிட்டிஷ் கயானாவின் ஒரு சென்ட் தபால் தலை :

1856 - ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த ஸ்டாம்பானது உலகிலேயே மிகவும் விலை அதிகமான அரிய தபால் தலைகளின் பட்டியலில் முக்கிய இடம் பெற்று ஆண்டுக்கு ஆண்டு தன் மதிப்பை ஏற்றிக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் கயானாவைச் சேர்ந்த ஸ்டாம்புகள் எல்லாமே வழக்கமாக இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் அரசு அச்சகத்திலிருந்துதான் வந்து கொண்டிருந்தன. ஒரு சமயம் கயானாவில் திடீரென்று ''ஸ்டாம்ப் ஸ்டாக்'' தீர்ந்து விட, ஒரு சென்ட் மற்றும் நன்கு சென்ட் மதிப்புள்ள ஸ்டாம்புகளுக்கு தீவிரமான தட்டுப்பாடு வந்துவிட்டது. இங்கிலாந்துக்கும் செய்தி அனுப்பப் பட்டு, உடனே ஸ்டாம்புகளை அனுப்ப வேண்டியிருந்தார்கள். ஆனால் அங்கே அவர்களுக்கு ஏதோ பிரச்னை. அதனால் அங்கிருந்து உடனடியாக தபால் தலைகள் வருவது போலத் தெரியவில்லை.

எனவே தேவையைச் சமாளிக்க அப்போது போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஆகப் பதவியில் இருந்த இ.டி. விட்

என்பவர் தற்காலிகமாக கயானாவிலிருந்த தனியார் அச்சகம் ஒன்றில் ஸ்டாம்புகள் அச்சிட ஆர்டர் கொடுத்தார். இவை சாதாரண அச்சகத்தில் சாதாரண காகிதத்தில் அச்சிடப்பட்டன. அதனால் வேறு சில அச்சக உரிமையாளர்களும் இதே போன்று 'போலி' ஸ்டாம்புகளைத் தயாரித்து உடனேயே விற்கத் தொடங்கி விட்டார்கள்! இதனைக் கட்டுப்படுத்த அந்தந்தப் பகுதி போஸ்ட் மாஸ்டர்களின் கையெழுத்து அந்த ஸ்டாம்புகளில் இருந்தால்தான் அவை செல்லுபடியாகும் என அரசு அறிவித்தது. இத்தனை களேபரத்துடன் இந்த விற்பனை துவங்கிய ஓரிரு நாட்களிலேயே தபால் தலைகள் இங்கிலாந்திருந்து வந்து விடவே, அரசு அவசர அவசரமாக, தான் வெளியிட்ட மீதியிருந்த 'சாதா', தபால் தலைகள் எல்லாவற்றையும் அழித்தது. அதுவரை விற்பனையாகியிருந்த ஸ்டாம்புகளுக்குப் பிடித்ததே கிராக்கி! ஆண்டுக்கு ஆண்டு இதன் மதிப்பு உயர்ந்தது. இன்றும் உயர்கிறது! ஒரு ஸ்டாம்பு பல இலட்ச ரூபாய்களுக்கு ஏலம் போகிறது. இப்படி ஏழு ஸ்டாம்புகள் இன்று உள்ளனவாம். இவற்றின் மொத்த மதிப்பு சுமார் 50 இலட்சம் ரூபாய்! இவை பலத்த தொகைக்கு இன்ஷ்யூர் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பாக உள்ளன!

போஸ்ட் ஆபீஸ் மரீஸஸ் ஸ்டாம்ப் : இது வெளியான கதையும் மிகவும் சுவையானயானது.

அக்காலத்தில் மரீஸஸ் நாட்டில் தபால் தலை வெளியிடப்படவில்லை. அப்போதய கவர்னரின் மனைவி ஒரு விருந்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். விருந்துக்கு வந்திருந்த பிரமுகர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, ''உங்கள் கணவரிடம் கூறி, நம் நாட்டிலும் ஸ்டாம்பு வெளியிட ஏற்பாடு செய்யுங்களேன்!'' என்று கேட்டுக் கொண்டனர். கவர்னரின் காதில் அவர் மனைவி விஷயத்தைப் போட்டாள். உடனடியாக அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தார் கவர்னர். போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அழைக்கப்பட்டு ஸ்டாம்பு தயாரிக்கும் பணியை ஆரம்பிக்கும்படி உத்திரவிடப் பட்டது..

போஸ்ட் மாஸ்டர் ஜெனரலும் தபால் தலையை வடிவமைத்து, பர்னர் என்பவரிடம் ஆர்டர் கொடுத்து விட்டார். அவரும் ஒரு பென்ஸ், இரண்டு பென்ஸ் மதிப்புள்ள பல்வேறு நிறங்களால் ஆன ஸ்டாம்புகளை ஆயிரக்கணக்கில் அடித்து, குறித்த காலத்தில் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலிடம் கொண்டு வந்து தந்தார். அதை ஆவலோடு பிரித்துப் பார்த்ததும் அதிர்ச்சியடைய நேரிட்டது, ஏனெனில்... Post-paid என்று அச்சடிப் பதற்குப் பதிலாக ''போஸ்ட் ஆபீஸ் மரீஸஸ்'' என்று அச்சிடப்பட்டிருந்தது. ''என்னப்பா இப்படி செய்து விட்டாய்?'' என்று விளக்கம் கேட்ட போது ''உங்க ஆபீஸ் முன்னாடி போர்டுல இப்படித் தானே எழுதியிருக்கிறது? அதனால் நானும் அதையே ஸ்டாம்பில் போட்டு விட்டேன்'' என்றார் பர்னர்.

பாரசீக மக்களின் உடையே பைஜாமா. பாரசீக மொழியில் பை என்பதற்கு கால்கள் எனப் பொருள். ஜாமாக் என்றால் துணியாகும். அவர்கள் "பைஜாமாக்'' என்று இவ்வகை உடைக்கு வைத்த பெயரே "பைஜாமா'' என்றாகியது.

- ஆறுபாதி புகழேந்தி





மக்களைக் காப்பது!

அணு ஆற்றலைக் கண்டு பிடித்த ஐன்ஸ்டீனை நிருபர்கள் பேட்டி கண்டனர். "உலகத்தையே அழிக்கக்கூடிய அணு ஆற்றலைக் கண்டு பிடித்து விட்டார்கள். அதிலிருந்து மக்களை காப்பாற்ற ஏதேனும் வழி உள்ளதா?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

"ஏன் இல்லை?" என்றார் ஐன்ஸ்டீன்.

"என்ன அது?" என்று ஆர்வத்துடன் கேட்டனர் நிருபர்கள்.

"அதுதான் சமாதானம்" என்றார் ஐன்ஸ்டீன்.

– ஆறுபாதி புகழேந்தி

இதைக் கேட்டுத் தலையிலடித்துக் கொண்ட போஸ்ட் மாஸ்டர் ஜெனரல், கவர்னரின் அனுமதியின் பேரில் வேறு வழியின்றி அவற்றை அப்படியே விற்பனை செய்ய ஆரம்பித்து விட்டார். பின்னர் இத்தவறு திருத்தப்பட்டாலும் 1847 - ஆம் வருடம் செப்டம்பர் 20 - ஆம் தேதி வெளியான இத்தபால் தலைகள் இன்றும் அரிதாகக் கருதப்படுகின்றன.

இந்தியாவின் முதல் தபால் தலை
சிந்து மாகாண ஸ்டாம்ப்


தற்சமயம் பாகிஸ்தானில் இருக்கும் சிந்து மாகாணம், பிரிவினைக்கு முன் இந்தியாவில் அடங்கியிருந்தது. அப்போது கமிஷனராக இருந்த சர் வார்டர் பிரேயர் என்பவருக்கு பிரிட்டன் 'பெனி பிளாக்' எனும் தபால்களை வெளியிடும் விஷயம் தெரிய வந்தது. இதைக் கேள்விப்பட்டதும், இந்தியாவிலும் அதுபோன்றே ஸ்டாம்பு வெளியிட வேண்டும் என அவர் விரும்பினார். இதை கராச்சி போஸ்ட் மாஸ்டர் எட்வர்டிடம் அவர் வெளிப்படுத்த அவர் தனி கவனம் செலுத்தி மேலிடத்தில் அனுமதி பெற்று 1852 - ஆம் வருடம் ஜூலை முதல் தேதி இந்தியாவின் பெருமை வாய்ந்த முதல் தபால் தலையை வெளியிட்டார். அரையணா மதிப்பு வாய்ந்த இது வட்டவடிவமாக காவி நிறத்தில் இருந்தது. சிந்து மாகாண தபால் என்று ஆங்கிலத்தில் ஓரங்களில் அச்சிடப்பட்டிருந்தது. நடுவே கிழக்கிந்தியக் கம்பெனியைக் குறிக்கும் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. சமீபத்தில் இது போன்றதோர் தபால்தலை 4,80,000 ரூபாய்களுக்கு விலைபோனது என்றால் பாருங்களேன்!

நேதாஜி வெளியிட்ட
ஆஜாத் ஹிந்த் தபால்தலை :

சுபாஷ் சந்திர போஸ் 1943 - ல் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பெர்லின் அச்சகத்திலிருந்து ஆங்கில அரசுக்கு எதிராக பத்து வகை தபால் தலைகளை வெளியிட்டார். ஒரு ஸ்டாம்பில் இராட்டை சுற்றும் பெண்ணின் படம், மற்றொன்றில் இராணுவ வீரனுக்கு வைத்தியம் பார்க்கும் நர்ஸ் சித்திரம் இடம் பெற்றிருந்தது. இவை தவிர அடிமைச் சங்கிலி உடைக்கப்படுவது போன்றும், செங்கோட்டையின் படம் வரைந்ததுமான ஒரு பைசா மற்றும் ஒரு அணா மதிப்புள்ள ஸ்டாம்புகளையும் வெளியிட்டார் நேதாஜி. என்றாலும் பிரிட்டிஷ் அரசின் அதிரடி நடவடிக்கையின் காரணமாக இவை அழிக்கப்பட்டு விட்டன. இதன் தற்போதைய மதிப்பும் பல இலட்சம் ரூபாய்களாகும்.

இப்படி இன்னும் எவ்வளவோ அரிய தபால் தலைகள் விலைமிக்க பொக்கிஷங்களாக இன்ஷ்யூர் செய்யப்பட்டு * பாதுகாப்புப் பெட்டகங்களில் இருந்து வருகின்றன.

– சத்தி. ஏ.ஜே. ஜப்பார்.





சின்னச் சின்னத் தேர் இது! சீனிவாசர் தேர் இது!

திருவிழா என்றாலே குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான். பத்து நாட்களும் சாமி விதம்விதமான அலங்காரங்களுடன் வீதிவலம் வரும். வாண வேடிக்கை, குடை ராட்டினம், பொம்மலாட்டம், விளையாட்டுப் பொருள் கடைகள் எல்லாம் இருக்கும்.

பெரிய ஆலயங்களில் திருவிழா நடக்கும் போது குழந்தைகள் கொண்டாடவென்றே சின்னத் திருவிழாவும் நடக்கும். கோவிலில் பத்து நாட்களும் என்ன வாகனம் அலங்காரமோ, அதே போல் சிறிய வாகனங்களில் சின்னதாக சாமி வைத்து அலங்காரம் செய்து குழந்தைகளே வீதிகளில் எடுத்து வருவார்கள். இதில் பல குழுக்கள் இருக்கும். சில குழுக்களில் பத்து நாள் அலங்காரத்திற்கான பொருள்கள், வாகனங்கள் எல்லாம் இருக்கும். இவர்கள் பெரும்பாலும் வசதியானவர்களாக இருப்பார்கள். இன்னும் சில குழுக்களில் ஒரு நாள் வாகனமும் அலங்காரப் பொருள்களும் மட்டும் இருக்கும். இப்படிப்பட்டவர்கள் ஒன்றுகூடி பத்து நாள் திருவிழாவையும் ஒற்றுமையாக நடத்துவார்கள். எல்லாம் குழந்தைகள்தான். இந்தச் சின்ன சாமிகள் உலா வருவதைப் பார்த்தாலே அன்று ஆலயத்தில் என்ன வாகனம் என்ன அலங்காரம் என்பதை அறிந்து கொள்ளலாம். இம்மாதிரி குழந்தைகள் ஒன்றுகூடி சின்னத் திருவிழா நடத்துவதால் ஒற்றுமை உணர்வும், விட்டுக் கொடுக்கும் குணமும் பொறுப்புகளைப் பகிர்ந்து செய்யும் வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைக்கிறது. இது எத்தனை அரிய வாய்ப்பு!

நகரங்களை விட கிராமங்களில் உள்ள குழந்தைகளே அதிக அளவுக்கு திருவிழாக் கொண்டாட்டங்களில் பங்கு கொண்டு உற்சாகமடைகிறார்கள். நகரங்களில் காலையில் எழுந்ததுமே பள்ளிக்குச் செல்லத்தான் நேரம் இருக்கும். வீடு திரும்பியதும் வீட்டுப் பாடம் எழுதவே சரியாகிவிடும். அப்புறம் திருவிழாக் கொண்டாட்டங்களில் எப்படி ஈடுபட முடியும்? அத்துடன் தொலைக்காட்சிப் பெருக்கமும் திருவிழாக்களில் குழந்தைகள் பங்கு கொள்வதைப் பாதித்து விடுகிறது.

இருந்தாலும் இன்னமும் சில பழமையான குடும்பங்களில் சின்னத் திருவிழாவை வீட்டுக்குள்ளேயாவது சிறப்பாக நடத்தும் வழக்கம் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு சின்னத் திருவிழாவுக்கான அலங்காரத் தேரைத்தான் அட்டையில் பார்க்கிறீர்கள். இந்தத் தேர் தெருவில் ஓடக்கூடியது. சிறுவர்கள் சேர்ந்து இழுத்து வருவார்கள். புத்தாண்டில் எல்லோரும் எல்லா நலன்களும் பெற தேருக்குள் வீற்றிருக்கும் சீனிவாசப் பெருமாளை வேண்டிக் கொள்பவன் சிறுவன் ஸ்ரீநாத்.


அட்டை வண்ணப்படம் : யோகா


பிராணிகளின் இடப்பெயர்ச்சி

ஆழி


பருவ மாற்றங்கள், உணவுப் பற்றாக் குறை, இனப்பெருக்கம், உடலில் ஏற் படும் சில மாறுதல்கள், முதலிய காரணங்களால், சில பிராணிகள் ஆண்டுதோறும் குறிப்பிட்ட பருவங் களில் இடம் பெயர்ந்து சென்று, வேறு பருவங்களில் திரும்பி வருகின்றன. இதை 'வலசை போதல்' என்றும் குறிப் பிடுவார்கள். சில பிராணிகள் இப்படிப் போய், திரும்பி வருவதே யில்லை!

கடல் ஆமைகள், முட்டையிடும் பருவத்தில், வெப்பக் கடல் பகுதிகளுக்கும், மற்ற சமயங்களில் மித வெப்பக் கடல் பகுதி களுக்கும் இடம் பெயர்ந்து செல்லுகின் றன. இதில் வியப்பு என்ன தெரியுமா? ஒரு வருடம் ஒரு குறிப்பிட்ட கடற்கரைப் பகுதிக்கு முட்டையிட வரும் பெண் ஆமைகள், அடுத்த வருடம் அதே இடத் திற்குச் சரியாக அதே நேரத்திற்கு வந்து, மணலில் குழிபறித்து முட்டை யிட்டுவிட்டுப் போகின்றன!







ஈல் என்னும் விலாங்கு மீன், கடலில் இடம் பெயர்ந்து முட்டையிட சுமார் 6400 கி.மீ. தூரம் கூட பிரயாணம் செய்கிறது. முட்டையிட்டதும், அது அங்கேயே இறந்துவிடுகிறது. பழைய இடத்திற்குத் திரும்புவதில்லை. ஆனால், அது இட்ட முட்டைகள், குஞ்சாகி, தாய் மீன் வாழ்ந்த இடத்திற்குப் போய்விடு கின்றன!



பசிபிக் கடலில் வாழும் சால்மன் மீனும் இப்படித்தான். வருடம் தோறும் மார்ச் மாதம், அது கடலி லிருந்து ஆறுகளை நோக்கி 2000 கி.மீ. தூரம் கூட எதிர்த்து வந்து அங்கே முட்டையிடுகிறது. முட்டை யிட்டதும் ஆற்றிலேயே இறந்து விடுகிறது. குஞ்சுகள்தாம் கடலை நோக்கி நீந்திப்போய் வாழ்கின் றன.

'லோகஸ்ட்' என்னும் பாலைவன வெட்டுக் கிளிகள் வசந்த காலத்தில், முட்டையிடும் பருவத்தில், வட ஆப்பிரிக்காவிலிருந்து தெற்கு சகாராவுக்கு ஆயிரக்கணக்கான கி.மீ. தூரம் பறந்து போய், மறுபடியும் இலையுதிர் காலத்தில் திரும்புகின்றன. அவை பறக்கும்போது, மேக மூட்டம்போல் மறைத்து, சூரிய ஒளி பூமியில் படுவது இல்லை! அப்போது வெட்டுக்கிளி கூட்டம் ஒன்று ஒரு நாளைக்கு 20 டன் உணவைத் தின்று தீர்த்து விடும்!








வண்ணத்துப் பூச்சிகளும் வலசை போகின்றன. குளிர்காலத்தில், வெள்ளை வண்ணத்துப் பூச்சிகள் ஐரோப்பாவிலிருந்து பிரிட்டனுக்குப் பறந்து போகின்றன. இந்த வண்ணத்துப் பூச்சிகள் கூட்டமாகப் பறக்கும் போது, வானத்தில் பனி பெய்வது போல இருக்கும்! 1846-ஆம் ஆண்டு, இந்த வண்ணத்துப் பூச்சிகள் பறந்து போகும் பாதையில் பூமியில் 1 கி.மீ. அளவுக்குச் சூரிய ஒளி மறைக்கப்பட்டு இருளாகி விட்டது!

பெயின்ட்டட் லேடி என்னும் வண்ணத்துப் பூச்சிகள், வட ஆப்பிரிக்காவில், அட்லாஸ் மலைகளிலிருந்து கூட்டங்கூட்டமாக மார்ச் மாதம் புறப்பட்டு, ஐரோப்பா வழியாக மத்தியதரைக் கடலோரம் 1600 கி.மீ. தூரம் பறந்து, மே, அல்லது ஜூன் மாதம் இங்கிலாந்தை அடைகின்றன!






மோனார்க் என்னும் வண்ணத்துப் பூச்சிகள் ஆண்டு தோறும் கிழக்குக் கனடாவிலிருந்து தெற்கு மெக்ஸிகோவுக்குச் சுமார் 3200 கி.மீ. தூரம் பறந்து செல்லுகின்றன. சராசரியாக மணிக்கு 18 கி.மீ. தூரம் பறக்கின்றன. காற்று பலமாக வீசாவிட்டால், எங்கேயும் உட்காராமல், தொடர்ந்தாற்போல் 1000 கி.மீ. தூரம் கூடப் பறப்பது உண்டு!




உலகில், தொடர்ச்சியாக அதிகத் தூரம் பறந்து வலசை போகும் பறவை ஆர்க்டிக் டெர்ன். அது குளிர்காலத்தில் வட துருவத்திலிருந்து தென்துருவத்திற்குப் போய் திரும்புகிறது! மொத்த தூரம் 35,000 கி.மீ!

‘ஸ்வாலோ’ பறவைகள், தென் ஆப்பிரிக்காவில், மாரிக்காலத்தில் இடம் பெயர்ந்து மார்ச் மாதக் கடைசியில் இங்கிலாந்துக்குப் போய்ச் சேருகின்றன. அவை எந்தப் பகுதியில் எந்த மாவட்டத்தில் வசித்தனவோ அங்கேயே போய்ச் சேர்ந்து விடுகின்றன!




மாஸ்கோவில் உள்ள மார்ட்டின் பறவைகள், ஆண்டு தோறும் மே மாதம் 17-ஆம் நாள் புறப்பட்டு, ஆகஸ்ட் மாதம் 11-ஆம் நாள் அதே இடத்திற்குத் திரும்பி வருகின்றன. இதில் மாற்றமே இருப்பதில்லை!




குளிர்காலத்தைக் கழிப்பதற்காகச் செல்லும் கொக்குகள் ஒரு குறிப்பிட்ட மாதத்தில், குறிப்பிட்ட நாளில் திரும்பவும் வந்து சேர்ந்துவிடுகின்றன— அதாவது மார்ச் மாதம் 8-ஆம் நாள்!




‘வுட்காக்’ என்னும் பறவை, இமயமலையிலிருந்து நீலகிரிக்கு 2400 கி.மீ. தூரம் எங்கும் நில்லாமல் ஒரே மூச்சில் பறந்து வருகிறது!







வட அமெரிக்காவில் உள்ள ‘கோல்டன் ப்ளோவர்’ என்னும் பறவை, தென் அமெரிக்காவுக்கு, அட்லாண்டிக் பெருங்கடலின் குறுக்கே, 3200 கி.மீ. தூரம் பறந்து போகிறது!

காட்டு வாத்து, மத்திய ஆசியாவிலிருந்தும், சைபீரியாவிலிருந்தும் 3200 முதல், 4800 கி.மீ. தூரம் வரை இமயமலைச் சிகரங்கள் வழியே பறந்து வந்து, இந்திய ஏரிகளை அடைகிறது!




கட்டைவிரல் அளவே உள்ள, உலகிலேயே மிகச்சிறிய பறவையான, ‘ஹம்மிங் சிட்டு, மெக்ஸிகோ வளைகுடாவின் குறுக்கே 800 கி.மீ. தூரம், ஓரிடத்திலும் நில்லாமல், பறந்து கடந்து போகிறது!





இவையெல்லாம் இந்தப் பிராணிகளுக்கு எப்படிச் சாத்தியமாகின்றன? இவற்றின் மூளையில் உள்ள காந்தத் தன்மையுள்ள நுகள்கள் மூலம் ஓர் இடத்தைப் பற்றிய நில காந்த அளவீடுகளைக் கொண்டு அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள். மேலும், பூமியின் காந்த சக்தி, சூரியன் உதிக்கும் திசை அறிதல், தங்கள் மூதாதைகளிடமிருந்து பெற்ற 'இயல்பூக்கம்' — இவை காரணமாகவும் சாத்தியமாகலாம் என்கிறார்கள் அவர்கள்!


நியூபவுண்ட் லாந்தில், ரெய்ன்டீர் மான்கள் குளிர் காலத்தில், தெற்கு நோக்கி இடம் பெயர்கின்றன. ஆனால், கோடையில் மறுபடியும் புறப்பட்ட வடக்குப் பகுதிக்கே திரும்பி வந்துவிடுகின்றன!



இப்படிச் சென்று திரும்பும் பறவைகளை ஆராய்ச்சியாளர்கள் எப்படி கண்டு கொள்கிறார்கள்? ஆராய்ச்சிக்கான பறவையின் காலில், அது எங்கே பிடிக்கப்பட்டது? எந்த நாளில் பறக்கவிடப்பட்டது? அது எங்கேயாவது பிடிபட்டால் அந்த விவரத்தை எந்த முகவரிக்குத் தெரிவிப்பது என்பதையெல்லாம் ஒரு வளையத்தில் பதித்து மாட்டியிருப்பார்கள். அது பிடிபடும் இடத்திலிருந்து தலைமைக் காரியாலயத்திற்குச் செய்திகள் கிடைத்துவிடும்!

இன்னும் ஓர் அசாதாரணமான இடப் பெயர்ச்சியும் இருக்கிறது. 'லெமிங்' என்னும் 12 செ.மீ. நீளம் உள்ள பிராணி நார்வேயிலும் ஆர்க்டிக் பிரதேசங்களிலும் வாழக்கூடியது. இது இடம் பெயர்ந்து போனால் திரும்பி வருவதேயில்லை! இந்தப் பிராணிகளின் எண்ணிக்கை அதிகமாகும் போதெல்லாம், ஏராளமானவை ஒன்று சேர்ந்து ஒரே நேர்க்கோட்டில், ஆறுகள், மலைகள், வயல்கள் எல்லாவற்றையும் கடந்து போகின்றன. கிடைக்கும் இரையைத் தின்கின்றன. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து போய், வழியில் இறந்தவை போக, மீதி உள்ளவையும் கடலில் விழுந்து மடிகின்றன!






இதே மாதிரி உரோம முசுக்கட்டைகளும் ஒன்றாக வரிசையாக ஓர் ஏரியை நோக்கிப் போகின்றன. பிறகு அதிலேயே விழுந்து மூழ்கி இறக்கின்றன. இது இயற்கையின் அதிசயம்தானே!

சின்னபாபு

பயில்வான் பட்டாபி!



பயில்வான் பட்டாபி என்றால் அழுத பிள்ளை வாயை மூடிக் கொள்ளும்! பாதிப் பனைமர உயரம். பலகை போன்ற உறுதியான உடல். ஒரு காரை ஸ்டார்ட் செய்ய வைத்து, பின்னால் இருந்து, ஒரே கையால் இழுத்து அதை நகர விடாது செய்து வைப்பார்! கயிறு இழுக்கும் போட்டியில் யானையும் அவரும் எதிரெதிராக இருந்து கயிறு இழுத்த போது தோற்றது யானைதான்!

பட்டாபியின் வீடு நிறைய அவர் தனது வீரத்தைக் காட்டிப் பெற்ற பரிசுகளாக, தங்கப் பதக்கங்களும் வெள்ளிக் கோப்பைகளும் நிறைந்திருக்கும். அவர் வசித்த பகுதியில் ஒரு துரும்பு கூடத் திருட்டுப் போனது கிடையாது. திருடர்களுக்கு அவர் பெயரைக் கேட்டாலே சிம்ம சொப்பனம்!


பட்டாபி யாருக்குமே எதற்குமே அஞ்சாதவர் என்றுதான் எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால் அவருக்கு எலியைக் கண்டால் கிலி பிடிக்கும் என்ற உண்மை பல பேருக்குத் தெரியாது. தெரியாத அளவுக்கு அவர் திறமையாக நடந்து கொண்டார்.

எலி என்ற பெயரைச் சொன்னாலே பட்டாபியின் உடல் நடுங்கும். அவரது சிஷ்யர்களில் யாராவது ஒருவர் எலி

யைப் பற்றி ஏதாவது ஒரு பழமொழி யைக்கூறினால்கூட பட்டாபியின் உடல் தாளம் போடும்! முகம் வெளுத்து விடும். ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி வீட்டுக்குள் ஓடி வந்து விடு வார்!

ஒருமுறை பட்டாபியின் மனைவி வெளியூர் போயிருந்தாள். வீட்டில் பட்டாபி மட்டும்தான். திடீரென்று சமையல் அறையில் ஏதோ சத்தம் கேட்டது. பட்டாபி சென்று பார்த்தார். அரிசிப் பானைக்கு மேல் ஒரு பெரிய எலி உட்கார்ந்து அவரைப் பார்த்துச் சிரித்து வாலை ஆட்டிக் காட்டியது! அவ்வளவுதான். பட்டாபி ஒரே எட்டில் தெருவுக்கு ஓடி வந்து நின்று கொண் டார்! உள்ளே போகப் பயம். எலி இருக்கிறதே!

''சனியன். மனைவி ஊரில் இல் லாத போதுதானா இது வரவேண் டும்?'' என்று கலங்கினார் பட்டாபி. அவர் வீட்டுக்கு பலமுறை எலி விஜயம் செய்த போது அவர் மனைவிதான் சமாளித்தாள். பட்டாபி ஓடியே போய் விட்டார்.



இப்பொழுது என்ன செய்வது என்று அவருக்குத் தோன்றவில்லை. பேசாமல் வீட்டைப் பூட்டிக் கொண்டு மனைவி போயிருக்கும் ஊருக்கே தானும் போய் விடலாமா என்று கூட எண்ணினார். அன்று மாலை ஜமீன்தார் வீட்டில் ஒரு விழா. அதற்கு ஆஸ்தான பயில்வானான அவர் போக விட்டால் பெரிய பிரச்னை எழுந்து விடும். அதனால் பேசாது நின்று கொண்டிருந்தார்.


பட்டாபி தவித்துக் கொண்டு தெருவிலேயே நின்று கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்து எதிர் வீட்டு ஏகாம்பரம் வந்தார். பட்டாபியின் எதிர் வீட்டுக் காரர் அவர். பட்டாபியின் செல்வாக்கைப் பார்த்துப் பொறாமைப் பட்டவர்களில் அவரும் ஒருவர்.

பட்டாபிக்கு எலியைக் கண்டால் கிலி என்பது அவருக்குக் கூடத் தெரியாது. அதை அவ்வளவு இரகசியமாக; திறமையாக பட்டாபியின் மனைவி பாது காத்து வந்தாள்.

பட்டாபி, வீட்டு வாசலில் நடுத் தெருவில் நின்று கொண்டு தவிப்பதைப் பார்த்ததும், ''என்ன பட்டாபி, கூண்டில் சிக்கிய எலி மாதிரித் தவித்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் ஏகாம்பரம்.

ஏற்கெனவே நடுங்கிக் கொண்டிருந்த பட்டாபி மேலும் நடுங்கினார்.





அந்த வைத்தியர் ஒரு போலி டாக்டர். முதுகில வலிக்குதுன்னு போனால் திமிலைப் பார்த்துட்டு கட்டியிருக்கு, ஆபரேஷன் செய்துக்கோன்னு சொல்றார்.

எதற்குமே அஞ்சாத பயில்வானான அவர் அப்படி நடுங்கியது, ஏகாம்பரத்திற்கு வேடிக்கையாக இருந்தது.

"ஏகாம்பரம், எங்க வீட்டுச் சமையலறையில் ஒரு எலி இருக்கு..." என்று கூறும்போதே பட்டாபியின் குரல் நடுங்கியது.

ஏகாம்பரத்திற்கு எல்லாம் புரிந்து விட்டது. பட்டாபிக்கு தைரியம் கூறி விட்டு, ஒரு கழியுடன் பட்டாபியின் வீட்டுக்குள் புகுந்தார். அரை மணியில் அடித்த செத்த எலியுடன் வெளியே வந்தார் ஏகாம்பரம்.

"ஏகாம்பரம் இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்" என்று நன்றிக் கண்ணீர் விட்டார் பட்டாபி.

அந்த ஆண்டு தசராவின் போது ஜமீன்தார் சபையைக் கூட்டினார். ஆஸ்தான பயில்வான் பட்டாபியை வெல்வோருக்கு தக்க பரிசு தரப்படும் என்று வழக்கமான அறிவிப்பைச் செய்தார். ஒவ்வொரு ஆண்டும் வழக்கமாகச் செய்யும் அறிவிப்புத்தான் அது. ஆனால் அந்த சவாலை ஏற்க சாதாரணமாக யாருமே முன்வர மாட்டார்கள். ஆனால் இந்த ஆண்டு, ஜமீன்தார் அறிவிப்புச் செய்ததும், பூபதி என்ற இளைஞன் பட்டாபியுடன் போட்டியிட முன்வந்தான். எல்லோருக்கும் அது அதிசயமாகவும் ஆவலைத் தூண்டுவதாகவும் இருந்தது.

பட்டாபி இந்தப் போட்டியைப் பெரிதாகவே எ ண் ண வி ல் லை. பூபதியை ஒரு துரும்பாக எண்ணினார் பட்டாபி. போட்டி நாள் வந்தது. மல் யுத்த சண்டையில் தனது சீடர்கள் வாழ்த்துக் கூற ஏறினார் பட்டாபி. மேடைக்குக் கீழே அபிமானிகள் கூட்டத்தில், முன் வரிசையில் ஏகாம்பரம் அமர்ந்திருந்தார். போட்டி ஆரம்பமாகியது. பூபதியால் பட்டாபியின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. மண்ணைக் கௌவி விடுவார் போல் தோன்றியது. அந்த நிலையில், தற்செயலாக, மேடைக்குக் கீழே அமர்ந்திருந்த அபிமானிகள் பக்கம் பட்டாபி பார்த்தார். ஏகாம்பரம் ஒரு குச்சியைப் பிடித்திருந்தார். அதில் உயிருடன் ஒரு எலி கட்டப்பட்டிருந்தது.

அவ்வளவுதான்! பட்டாபியின் வீரம் போன இடம் தெரியவில்லை. தவித்தார். முகம் பயத்தால் வெளிறிப் போய் விட்டது. பூபதி, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, பட்டாபியைத் தாக்கி மண்ணைக் கௌவ வைத்தார். போட்டி அடுத்த நாளும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது.

"ஊரை விட்டே ஓடிப் போய் விடலாம்," என்று தவித்தார் பட்டாபி.

பட்டாபியை திகைப்புடன் நோக்கினாள் அவர் மனைவி.

எதற்குமே அஞ்சாத மாவீரரான அவர் எப்படி இத்தனை கோழையானார்! "உங்களுக்கு என்ன வந்து விட்டது! நீங்கள் பலமாகத் தும்பினால் கூட பறந்து போய் விடும் பூச்சியைப் போன்றவன் அந்த பூபதி! அவனிடம் தோற்றதும் அல்லாது ஊரை விட்டே ஓடலாம் என்கிறீர்களே!" என்று வெடித்தாள்.

"பூபதி எனக்குத் துரும்புதான். ஆனால் எதிரே ஏகாம்பரம் உயிருடன் ஒரு எலியை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் போது எனக்கு எதுவுமே ஓட மாட்டேன் என்கிறதே!" என்று அழுதார் பட்டாபி.

எண் விளையாட்டு

96	11	89	68
88	69	91	16
61	86	18	99
19	98	66	81

இந்த எண்களை எளிதில் அறிய இப்படி வைத்துக் கொள்ளுங்கள் :

A	I	J	B
E	M	N	G
F	O	P	H
C	K	L	D

இவற்றை கீழுள்ளபடி எப்படிக் கூட்டினாலும் 264!

1. A + I + J + B
2. E + M + N + G
3. F + O + P + H
4. C + K + L + D
5. A + E + F + C
6. I + M + O + K
7. J + N + P + L
8. B + G + H + D
9. A + I + E + M
10. F + O + C + K
11. J + B + N + G
12. P + H + L + D
13. A + M + P + D
14. B + N + O + C
15. E + F + G + H
16. I + J + K + L
17. E + I + H + L
18. F + K + J + G
19. M + N + O + P

– எஸ். நடராஜன், சென்னை – 8.

''கவலைப்படாதீர்கள். நாளை நீங்கள் சண்டையிடும் போது பட்டாபியின் எலி என்ன கதிக்கு ஆளாகப் போகிறது என்பதைப் பாருங்கள்'' என்று நம்பிக்கையூட்டினாள் அவர் மனைவி.


அடுத்த நாள். போட்டி தொடங்கியது. பெரும் உற்சாகத்துடன் பட்டாபி தனது சீடர்களுடன் வந்து மேடையில் ஏறினார். குச்சியில் கட்டப்பட்டிருந்த ஒரு எலியுடன் முன் வரிசையில் ஏகாம்பரம். அவருக்கு அருகே பட்டாபியின் மனைவி. அவளும் கையில் எதையோ வைத்திருந்தாள். பட்டாபி பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவர் மனைவி தன் கையில் மறைத்து வைத்திருந்ததை வெளியே எடுத்து விட்டாள். அது ஒரு பெரிய பூனை! எலியைப் பார்த்ததும், பாய்ந்து கௌவிக் கொண்ட பூனை, வெளியே ஓடி விட்டது.

வெற்றி பட்டாபிக்குத்தான் கிடைத்தது என்பதைக் கூறவா வேண்டும்!



* சுமத்திரா தீவின் அருகில் கிரகொற் றோவர் என்ற தீவு உள்ளது. இந்த தீவிலுள்ள எரிமலை ஒன்று 1883 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 – ஆம் தேதி பயங்கர ஓசையுடன் வெடித்தது. இந்த ஒலி மூவாயிரம் மைல் களுக்கு அப்பாலும் கேட்டது. இது வரையிலும் உலகில் கேட்ட ஒலிகளிலேயே மிகப் பெரிய ஒலி இதுதான்!

– குமரி பைரவி, திருவட்டார்.



அமுதா, திருவாய்மூர்.

? ஜூலை 'கோகுல'த்தில் சகோதரி நித்திலாவின் கேள்வியில் 'Rh Factor' என்ற வார்த்தை இடம்பெற்றிருந்தது. அப்படியென்றால் என்ன, டாக்டர்?

! 'Rh Factor' என்பது ரத்தத்திலுள்ள ஒருவகை ஆன்டிஜென். லான்ஸ்டீனர் (LANDSTEINER), வீயனர் (WIENER) என்ற இரு விஞ்ஞானிகள் முதன் முதலில் 'Rhesus' எனும் குரங்கு இனத்தில் இந்த ஆன்டிஜென் இருப்பதைக் கண்டுபிடித்தனர். பின்பு, இதே ஆன்டிஜென் மனித ரத்தத்திலும் இருப்பது தெரியவந்தது. எனவே, இதற்கு பெயரிடும் போது 'Rhesus' வார்த்தையிலிருந்து முதல் இரண்டு எழுத்துக்களை மட்டும் எடுத்து 'Rh Factor' எனப் பெயரிட்டனர். இந்த ஆன்டிஜென் சுமார் 85% மக்களின் ரத்தத்தில் இருக்கிறது. மீதி 15% மக்களிடத்தில் இல்லை. ஆகவே, Rh Factor உள்ள ரத்தத்தை 'Rh Positive' எனவும், அது இல்லாத ரத்தத்தை 'Rh Negative' எனவும் அழைக்கின்றனர். நோயாளிகளுக்கு ரத்தம் செலுத்தும் போது சம்பந்தப்பட்டவரின் ரத்தம் Rh Positive NI, Rh Negative வா எனத் தெரிந்து கொண்ட பின்னரே, அவருக்குரிய ரத்த வகையைச் செலுத்துவார்கள். பெண்களுக்கு பிரசவ காலத்தில் அவர்களுடைய ரத்த வகை Rh பாசிட்டிவா, நெகட்டிவா எனத் தெரிந்து கொண்டால், பின்னால் நேரும் சில ஆபத்துக்களை மருத்துவர்கள் எளிதில் தடுத்து விடுவார்கள். Rh Factor ஐத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியத்தை இப்போது நீ உணர்ந்திருப்பாயே!



கே. நடராஜன், பரங்கிப்பேட்டை.

? குடல்வால் நோய் ஏன் உண்டாகிறது? அதைத் தடுக்க எளிய வழி சொல்லுங்கள், டாக்டர்?

! குடல்வால் நோய் (APPENDICITIS) வருவதற்கு பல காரணங்களைச் சொல்லலாம். குடல் வாலில் பாக்டீரியா




கிருமித் தாக்குதல், குடல் புழுக்களின் பாதிப்பு, தொடர்ச்சியான மலச்சிக்கல், மலம் கல் போல் இறுகி குடல் வாலை அடைத்துக் கொள்ளுதல், குடல்வால் சுருங்குதல், அடிக்கடி மலமிளக்கி மாத்திரைகளை உட்கொள்ளுதல் போன்றவை குடல்வால் நோயை வரவழைக்

கும். இந் நோயைத் தவிர்க்கும் சில எளிய வழிகள். 1. சுயசுகாதாரம் பேணுதல், 2. மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்ளுதல், 3. நார்ச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல், 4. இரவில் அதிகமாக தண்ணீர் குடித்தல், 5. மருத்துவர் ஆலோசனையின்றி மலமிளக்கி மாத்திரைகளை சாப்பிடுவதைத் தவிர்த்தல்.

எம். சரவணன், வேதாரண்யம்.

? முருங்கைக் கீரை சாப்பிடுவது உடம்புக்கு நல்லதா?

! மிகவும் நல்லது சரவணன். முருங்கைக் கீரையில் உடல் வளர்ச்சிக்கு உதவும் வைட்டமின்கள் ஏ, பி, சி, ஈ, அமினோ அமிலங்கள், இரும்புச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், சோடியம் போன்ற தாதுச் சத்துக்கள் நிரம்பி உள்ளன. முருங்கைக் கீரையை தினமும் உட்கொண்டால் உடம்பில் நல்ல வளர்ச்சியைக் காணலாம். மிகுந்த வலிமையைப்



பெறலாம்!

கே. அரங்கநாதன், தொப்பூர்.

? சிலர் தூங்கும் போது குறட்டை விடுகிறார்களே, அது ஏன் டாக்டர்?

! தூங்கும் போது உடலின் தசைகள் எல்லாம் தளர்வாக இருக்கும். நாக்கு தளர்ந்து பின்பக்கமாகச் சரியும். அப்போது நாக்கு தொண்டைப் பகுதியை அடைத்துக் கொள்வதால் காற்று தடைப்படும். இதனால் நுரையீரல்கள் மிகுந்த பலத்துடன் தடையை மீறிக்



கொண்டு காற்றை உள்ளிழுக்கின்றன. அப்போது மெல்லிய மேல் அண்ணம் அதிர்வதால் உண்டாகும் சத்தமே குறட்டை. கொழுத்த உடல், மூக்கடைப்பு, ஜலதோஷம், அடினாய்டு வீக்கம், டான்சில் வீக்கம், மூக்கில் சதை வளர்தல், மூக்கெலும்பில் வளைவு, ஒவ்வாமை, புகைபிடித்தல், மூக்குப் பொடி போடுதல், அளவுக்கு மீறிய மது போதை போன்றவை குறட்டையை வரவழைக்கும் காரண கர்த்தாக்கள்.

ந. நவமணி, நல்லாலம்.

வே. ச. சிவகுமார், சிதம்பரம் – 1.

? நான் பள்ளி மாணவன். எனக்கு ஒன்றரை மணிக்கு ஒரு தடவை சிறுநீர் வருகிறது. இதனால் வகுப்பில் உட்கார்ந்து பாடங்களைக் கவனிக்க முடியவில்லை. இத்தொல்லையிலிருந்து நிவாரணம் பெற வழி கூறுங்கள், டாக்டர்!

! அடிக்கடி சிறுநீர் வருவதற்கு முக்கியமான மூன்று காரணங்கள் வருமாறு: 1. நீரிழிவு நோய், 2. சிறுநீர்ப் பாதையில் கிருமித் தொற்று, 3. முதுகு நரம்புக் குறைபாடு. உங்களுக்கு எக்காரணத்தினால் அடிக்கடி சிறுநீர் வருகிறது என்பதை மருத்துவரிடம் பரிசோதித்து அறிந்து கொள்ளுங்கள். அதற்கேற்ப



அவருடைய ஆலோசனையைப் பின்பற்றுங்கள். நிச்சயம் நிவாரணம் கிடைக்கும்.

ஆர். விவேகானந்தன், கோயம்புத்தூர் – 1.

? அதிக சூடுள்ள தண்ணீரில் குளித்தால் நரம்புத் தளர்ச்சி வரும் என்கிறார்களே! உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை, விவேகானந்தன். நரம்புத் தளர்ச்சிக்கும் அதிக சூடுள்ள நீரில் குளிப்பதற்கும் தொடர்பில்லை.



அதிக மொழி சாதனை!



★ இத்தாலியைச் சேர்ந்த அறிஞர் கார்டினால் மேசோ பான்டி என்பவருக்கு 27 மொழிகள் நன்கு தெரியும். உலகிலேயே அதிக மொழிகளில் புலமை பெற்றவர் என்ற பெருமைக்குரியவர் இவரே!

- ஆர்.எஸ். நாதன், குடந்தை.

மிண்ட்



★ நாணயங்களைத் தயாரிக்கும் இடத்தை ஆங்கிலத்தில் மிண்ட் என்பார்கள். இச்சொல் ரோமானிய மொழியில் இருந்து வந்தது. அக்காலத்தில் ரோமானியர்கள் மோனிடா என்னும் ஆலயத்தில்தான் முதன் முதலாக நாணயங்களைத் தயாரித்தனர். இதன் அடிப்படையில் மோனிடா என்ற சொல்லிலிருந்து மிண்ட் எனும் சொல் உருவானது.

- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.



இரண்டு மொழி தேசிய கீதம்

★ செக்கோஸ்லோவேகியா நாட்டின் தேசிய கீதம் இரண்டு மொழிகளில் உள்ளது. இந்த நாட்டின் தேசிய கீதத்தின்

முதற்பகுதி "செக்" மொழி யிலும், இரண்டாம் பகுதி "ஸ்லோ வேக்" மொழியிலும் உள்ளது.

- என்.ஆர். சுப்பிரமணியம், பூனாம்பாளையம்.



★ மாணிக்கம் - சூரியன், முத்து - சந்திரன், பவளம் - செவ்வாய், மரகதம் - புதன், புஷ்பராகம் - வியாழன், வைரம் - சுக்கிரன், நீலம் - சனி, கோமேதகம் - ராகு, வைடூரியம் - கேது.

- ஆ. முருகன், சங்கராபுரம்.



★ நேருஜியின் வருமான வரியைக் கணக்கிடுவதற்காக, 'ஆனந்த பவன்' மாளிகையின் மதிப்பை 36,000 ரூபாய் என்று வருமான வரி இலாகாவினர் குறித்திருந்தனர். இது நேருஜிக்குத் தெரிய வந்ததும் அந்தக் குறிப்பை வாங்கித் தன் கையினாலேயே மதிப்புத் தொகையை 1,75,000 ரூபாய் என்று மாற்றி எழுதினார்.

- அ. முஸ்தபா, தக்கோலம்.



★ இலண்டனில் நாய்களுக்கும் இரத்த சேமிப்பு நிலையம் உள்ளது! இதை டாக்டர் ரோமாண்ட் லாங்க் என்பவர் ஏற்படுத்தி உள்ளார். விபத்தில் சிக்கிக் கொள்ளும் நாய்களின் எண்ணிக்கை அதிகமாகி வருவதால், நாய்களின் உயிரைக் காப்பாற்ற நல்ல ஆரோக்கியமான நாய்களின் இரத்தத்தைச் சேமித்து வைக்கத் தொடங்கப்பட்டது இது. இரத்த தானம் செய்யும் நாய் குறைந்த பட்சம் 50 பவுண்டு எடையுள்ளதாக இருக்க வேண்டும்.

- விழிஒளி, சங்கமங்கலம்.



★ இங்கிலாந்து நீதி மன்றங்களில் நீதி மன்ற அலுவலர்கள் இருக்க வேண்டிய இடத்தையும், வழக்குரைஞர், பொது மக்கள், குற்றவாளி இருக்க வேண்டிய இடத்தையும் இரண்டாகப் பிரித்து வைப்பது வழக்கம். இவ்வாறு தடுக்கும் பொருளை 'பார்' என்பார்கள்.

இதிலிருந்து வழக்குரைஞர் கூட்டத்தையே பார் என்று குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது. இதைக் கொண்டே இங்கிலாந்தில் அவர்கள் பாரிஸ்டர்கள் எனப் படுகிறார்கள்.

- நா. ஷேக் உசேன், செஞ்சி.

பெயர் உட்பல்லோ நேஷனல் பார்க் என்பது. இது ஆல்பாடா என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 17,870 சதுர மைல்கள். உலகத்திலுள்ள எல்லா விதமான மலர்ச் செடிகளும் இந்தப் பூங்காவில் இருக்கின்றன.

- என். ராஜு,
நெய்வாசல்.





★ நெருப்புக் கோழியின் பார்வை மிகவும் கூர்மையானது. 10 கிலோ மீட்டர் தூரத்தில் எது வந்தாலும் அதன் பார்வையில் பட்டு விடும்! நெருப்புக் கோழியின் முட்டைகள் மிகவும் உறுதியானவை. ஒரு ஆள் முட்டையின் மீது ஏறி நின்றாலும் உடையாது! பூமியில் இருக்கும் பறவைகளில் மிகப் பெரியது நெருப்புக் கோழிதான். எடை 120 கிலோ!


இது வேகமாய் நடக்கும் போது மூன்று மீட்டர் நீளத்திற்கு அடிவைக்கும். இதே வேகத்தில் மணிக்கு 80 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்கும்.

- எஸ். விஜயா, திருச்சி - 14.

★ டா, டா, டா, டா, டா, டா. அது மரத்திலே 5, 5, 5, 5, 5, 5 பழம் பறிக்கிறது டா, டா, வரேன்.

டா, டா, டா, டா, டா, டா, டா, டா, டா, டா அவனை! என்ன புரிகிறதா. இதன் விளக்கம் ஆரடா அது மரத்திலே ஆரஞ்சு பழம் பறிக்கிறது. இருடா வரேன். பத்துடா (பிடிடா) அவனை.

- கே.பி.என். சிவகுமார்,
பாலவிடுதி.





★ உலகிலேயே மிகப் பெரிய பூங்கா கனடா நாட்டில் உள்ளது. இதன்

★ நம்முடைய நாட்டில் பிராட் கேஜ், நேரோ கேஜ், மீட்டர் கேஜ் என்று

மூன்று வகை இருப்புப் பாதைகளும் உள்ளன. ஆனால் இந்த மூன்றும் அமைந்துள்ள ஒரே ரயில்வே ஸ்டேஷன் பெங்களூர் ரயில்வே ஸ்டேஷன்தான்.

- என்.ஆர். சுப்பிரமணியம்,
பூனாம்பாளையம்.

நவீன அபாய அறிவிப்பு



★ 'இராயல் கவ்ஸ்லிப்' என்று ஒரு செடி உள்ளது. இந்தச் செடி, உலகத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டுந்தான் வளர் கின்றது. ஜாவாவில் உள்ள பங்கரங்கே என்னும் எரிமலையின் உயரம் பத்தா யிரம் அடிகள். இந்த எரிமலையின் உச்சி தான் அந்தச் செடி வளரும் இடம்.

அங்கு உள்ள மக்கள், அந்தச் செடியை ஓர் அபாய அறிவிப்பாக - அழிவுக்கு அறிகுறியாகக் கருதுகின்றார் கள். அந்தச் செடி தோன்றும் போதெல் லாம் எரிமலை தவறாது குமுறுமாம்.. ஆகையால் ஜாவா மக்கள் அந்தச் செடியைக் கவனமாகத் தேடு கின்றார்கள். அந்தச் செடி தங்கள் கண்ணில் பட்டதுமே பாதுகாப்பான வேறு இடத்திற்குச் சென்று விடு கிறார்கள்..

- பி.எஸ். மணிமாறன்,
பரங்கிப்பேட்டை.

விடுகதைப் போட்டி!



"விடுகதைப் போட்டி வைத்து எத்தனையோ மாதங்களாகி விட்டன. மறுபடி விடுகதைப் போட்டி வையுங் கள்" என்று ஏராளமான சிறுவர் சிறுமியர் எழுதிக் கேட்டுள்ளதன் காரணமாக, இதோ, 'விடுகதைப் போட்டி' வெளியாகிறது. விடுகதை 'தொலைபேசி' என்ற டெலி போனைப் பற்றியதாக இருக்க வேண்டும். சிறந்த பதினைந்து விடு கதைகளுக்கு பத்து ரூபாய் பரிசளிக் கப்படும். கூப்பன் அவசியம் இருக்க வேண்டும். ஆசிரியரின் தீர்ப்பே முடி வானது. அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர், 'கோகுலம் விடுகதைப் போட்டி', 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

விடுகதைப் போட்டி

பெயர் : ....

வயது : ....


முகவரி : ....

....

....

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.1.1993



அப்பாவுக்குப் பதிலாக!

அந்தப் பையன் முகத்தை சோகம் கப்பியிருந்தது. விரைந்து வந்த அவன் அந்த வீட்டின் முன்னே நின்றான். 'சித்தூர் மாவட்ட நீதிபதி' என்ற பெயர்ப் பலகையைப் படித்து அவன் தேடி வந்த வீடு அதுதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான்.

பன்னிரண்டு வயதான அந்தச் சிறுவன் ஒரு விவசாயியின் மகன். நீதிபதியின் வீட்டுக் கதவைத் தட்டினான். நீதிபதி அந்தச் சிறுவனிடம் அவன் வந்த காரணத்தைக் கேட்கிறார்.

தன் சோகக் கதையை சிறுவன் அவருக்குக் கூறினான். அப்பா ஒரு விவசாயி. அரசு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்தார். மழையின்மை காரணமாகப் பயிர்கள் நாசமாயின. நஷ்டம் ஏற்பட்டதால் குத்தகையச் செலுத்த இயலவில்லை. குறித்த காலத்தில் குத்தகைப் பணத்தை அரசுக்குச் செலுத்தாததால் விவசாயியை ஜெயிலில் அடைத்து விட்டார்கள்.

அன்று அந்தச் சிறுவனின் அப்பாவுக்குப் பிறந்த நாள். ஒவ்வொரு வருடமும் அம்மாவுடன் இருந்து பிறந்த நாளைக் கொண்டாடுவார். இந்த வருடம் அவர் ஜெயிலில் இருப்பதால் அம்மாவுடன் இருந்து கொண்டாட முடியவில்லை. அம்மா வருந்தி அழுது கொண்டிருப்பதாகச் சொல்லி சிறுவன் கண்ணீர் வடித்தான்.

'உன் கதை வருத்தம் அளித்தாலும் உன் தந்தையை செக்யூரிடி இல்லாமல் என்னால் விட முடியாது. அவர் மீண்டும் ஜெயிலுக்குத் திரும்ப பிணை ஏதாவது வேண்டுமே' என்றார் நீதிபதி.

"ஆனால் எங்களிடம் பணம் இல்லையே! அது இருந்திருந்தால் அப்பா ஜெயிலுக்கே வந்திருக்க மாட்டாரே. அப்பாவுக்குப் பிணையாகத் தர நான் சொல்லும் யோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள், சார்!" என்று கண்ணீருடன் சிறுவன் வேண்டினான்.

"என்ன அது?"

"அப்பாவுக்குப் பதிலாக என்னை ஜெயிலில் அடைத்து வையுங்கள். அவர் திரும்பி வந்ததும் என்னை விடுவிக்கலாம்" என்றான் சிறுவன்.

சிறுவன் கேட்டது நீதிபதியை உருக்கி விட்டது. ஒரு பேப்பரில் ஏதோ எழுதி ஜெயில் அதிகாரியிடம் கொடுக்கச் சொன்னார் நீதிபதி. அந்த பேப்பரோடு மான் போல் துள்ளி ஓடினான் சிறுவன்.

அப்பாவுடன் வீட்டுக்குச் சென்று அப்பாவின் பிறந்த நாளை அம்மாவுடன் கொண்டாடி விட்டு மாலையில் மீண்டும் அப்பாவை ஜெயிலுக்குக் கொண்டு வந்து சேர்த்தான், அந்தச் சிறுவன்.

பின்னாளில் பதினைந்து மொழிகளில் சரளமாகப் பேசும் திறமை வாய்ந்த ரங்கநாத சாஸ்திரிதான் அந்தச் சிறுவன்.

க. இராமலிங்கம்,
புதுப்பேட்டை.



* குழந்தைகள் நிகழ்ச்சி

ஏற்றம் மிக்க இலக்கிய விழா!

கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரிய

கலைக் கொண்ட நிகழ்ச்சிகளை அமைத்து

அயல்நாட்டுக் கதை

நெருப்பில் வாடிய குழம்பு!

பல ஆண்டுகளுக்கு முன்பு மொரீஷியஸ் கிராமம் ஒன்றில் ஒரு கிழவன் ஆசையாக ஒரு பசுவை வளர்த்து வந்தான். அதன் பாலே அவனது வருமானம். ஒருநாள் அந்தப் பசு செத்து விட்டது. கிழவன் வருந்தினான். வருமானத்துக்கு வேறு வழி இல்லை.

'சரி. பசுவின் தோலை விற்று, கிடைப்பதைக் கொண்டு காலம் கழிக்கலாம்' என்று நினைத்தான். செத்த மாட்டின் தோலை உரிப்பதும் அதைப் பக்குவப்படுத்துவதும் கடினமான வேலை. கிழவன் பொறுமையாகத் தோலைப் பிரித்து, அதை உள்புறம் தேய்த்து வெயிலில் காயவைத்தான். காய்ந்ததும் சுருட்டி எடுத்துக் கொண்டு பட்டணத்துக்குப் போனான்.

கடை கடையாக ஏறி இறங்கினான். ஒருவரும் அந்த மாட்டுத் தோலை வாங்க முன்வரவில்லை. அவ்வளவு ஏன், அது என்ன விலை என்று கூட யாரும் கேட்கவில்லை! கிழவன் வேறு வழியில்லாது அடுத்த நாள் வேறு ஒரு பட்டணத்துக்குப் போனான். அங்கேயும் யாரும் இதைச் சட்டை செய்யவில்லை. இப்படியே பல பட்டணங்களுக்குப் போன கிழவன், யாருமே அதை வாங்க முன்வராததைக் கண்டு அலுத்துப் போனான்.

இனி என்ன செய்வது என்று புரியாமல் வீடு திரும்பிய போது இருட்டு வேளை. காட்டு வழியே வந்த போது பின்னால் குதிரைகள் வரும் குளம்போசை கேட்டது. பயந்து போன கிழவன் அருகே இருந்த ஒரு ஆலமரத்தின் மேலே ஏறி அடர்ந்த கிளைகளின் நடுவே ஒளிந்து கொண்டான்.

சற்று நேரத்தில் நாலைந்து குதிரைகள் வந்து அதே ஆலமரத்தின் கீழே நின்றன. கிழவன் கண்கொட்டாமல் பார்த்தான்.

குதிரையிலிருந்து குதித்தவர்கள் தரையிலே ஒரு துணியை விரித்தார்கள். முதல் ஆள் தனது அங்கியிலிருந்து வெள்ளிக் காசுகளை எடுத்துக் கொட்டினான். அடுத்தடுத்து இப்படியே ஒவ்வொருவரும் செய்யவும் அங்கே ஒரு சிறு குவியலாகத் தங்க வெள்ளி நாணயங்கள் குவிந்தன!

அத்தனை பேரும் திருடர்கள். தாங்கள் கொள்ளையடித்த பணத்தை எடுத்து வந்து தலைவன் முன்னே இவ்வாறு ஒன்றாகக் கொட்டி சமமாகப் பங்கிட்டுக் கொள்வது அவர்கள் வழக்கம். தலைவன் வந்து பணத்தை எண்ணி ஆளுக்கு இவ்வளவு என்று சொல்ல வேண்டும்.

ஆலமரத்தின் மேலே கிளைகள் நடுவே இருந்த கிழவன் மெதுவாகக் கீழே எட்டிப் பார்த்தான். அவன் கண்

தமிழில் : தம்பி சீனிவாசன்



பிதுங்கிப் போயிற்று. அவன் வாழ் நாளில் அத்தனை தங்க வெள்ளிக் காசு களை மொத்தமாகப் பார்த்தது கூட இல்லை. அந்த பிரமிப்பில் அவன் உட லெல்லாம் வெடவெடத்தது. அந்த நடுக் கத்தில் அவன் கையிலிருந்த மாட்டுத் தோல் மூட்டை நழுவியது. மரத்தின் கீழே, அமர்ந்திருந்த கொள்ளையர் தலைவன் தலையிலே 'படேர்' என்ற சப்தத்துடன் விழுந்தது!

அது நன்கு பதப்படுத்தப்பட்ட தோலானதால் உறுதியாக, வலுவாக, மொடமொடப்பாக இருந்தது. தன் மீது திடீரென்று ஏதோ தாக்கியதும் திடுக் கிட்டு அரண்டு போன தலைவன் 'தப் பித்தோம் பிழைத்தோம்' என்று தன் குதிரை மீது தாவிப் பறந்தான். அரண் மனை வீரர்கள்தான் தாக்க வந்து விட் டார்கள் என்று அவன் பயந்தான். எதற் கும் அஞ்சாத தங்கள் தலைவனே பயந்து மாய்ந்து ஓடவும், ஏதோ விபரீதம்தான் நடக்கப் போகிறது. தலைவனே, கொள் ளைப் பணப் பங்கைக் கூட விட்டு

விட்டு மிரண்டு ஓடும் போது, நாம் மட்டும் இருப்பது முட்டாள் தனம். நாமும் தப்பி விடுவோம் என்று மற்ற கொள்ளையர்களும் மின்னல் வேகத்தில் தங்கள் குதிரைகளில் ஏறி அந்த இடத்தி லிருந்து ஓட்டமாக ஓடி விட்டார்கள்!

எல்லோரும் போனதும் மரத்தி லிருந்து இறங்கிய கிழவன் அனாதை யாகக் கிடந்த நாணயக் குவியலை ஒரு மூட் டையாகக் கட்டினான். தலையில் வைத்துக் கொண்டு வீடு திரும்பி னான்.

அந்தக் கிராமத்திலேயே அவனைப் போலப் பணக்காரன் யாரும் இல்லை என்று சொல்லும்படி கிழவன் வசதி யான வாழ்க்கையை வாழத் தொடங்கி னான். எந்தப் பொருள் வேண்டுமா னாலும் பட்டணத்துக்குத்தான் செல் வான். செலவு செய்வதில் அளவுக்கு மீறி தாராளமாக இருந்தான். எட்டுப் பொன் னுக்கு ஏதாவது ஒரு சாமான் வாங்கி னால், பத்துப் பொன் காசு நாணயத்தைத் தருவான். ''மீதி சில்லறையை நீயே வைத்துக் கொள்'' என்பான் தாராள மனத்துடன்!

சோற்றுக்கே தாளம் போட்ட கிழ வன், திடீரென்று பெரும் பணக்கார னாகி, தாராளமாகச் செலவும் செய்யும் விவரம் மன்னனின் காதுக்கும் எட்டி யது. ஒற்றர்கள் கிழவனைக் கவனிக்க ஆரம்பித்தனர். 'பரம்பரை பணக்காரர் களும் அரச குடும்பத்தாரும் கூட இவ் வளவு தாராளமாக இருக்க மாட்டார் களே!' என்று இந்த விவரங்களை மன்ன னிடம் தெரிவித்தார்கள்.



மன்னன் பெரிய ராஜா அல்ல. சாதாரணமான ஒரு குறுநில மன்னன்தான். அதுவும் வருமானம் குறைவு. கிழவவின் தாராளமான செலவு பற்றி ஒற்றர்கள் மன்னரிடம் தெரிவித்தனர். அவன் கிழவனுக்குச் சொல்லி அனுப்பினான்.

''உனக்கு இத்தனை பணம் ஏது?'' என்று மன்னன் அதட்டிக் கேட்கவும், ''மன்னரே! எனது ஒரே பசுவை இழந்து விட்ட நான், அதன் தோலை உரித்து விற்றுச் சாப்பிடப் பயணமானேன். அப்படிக் கிடைத்ததே இந்தப் பணம்'' என்றான் கிழவன்.

''ஒரு பசுத் தோலுக்கு இத்தனை செல்வம் கிடைக்குமா?'' என்று ஆச்சரியப்பட்ட மன்னன், தன்னிடம் இருந்த நூறு பசுக்களையும் கொல்லச் செய்தான். அவசர அவசரமாக எல்லாவற்றையும் தோலுரித்து பதமாகாததற்கு முன்னதாகவே அவசர அவசரமாக வண்டியில் ஏற்றிக் கடைத் தெருவுக்கு அனுப்பினான். அந்தத் தோலை வாங்குவோர் யாரும் இல்லை. அந்த ஊரிலும் இல்லை. அடுத்த ஊரிலும் இல்லை. வண்டிகளை எடுத்துச் சென்ற வீரர்கள் அலுத்து விட்டார்கள். நன்கு பதமாகாத தோலின் துர்நாற்றம் நாளுக்கு நாள் சகிக்க முடியவில்லை. நெடி வேறு. அதோடு விஷப் புழுக்கள் வேறு சேர்ந்து விட்டன. ஆவது ஆகட்டும் என்று மாட்டுத் தோல் எல்லாவற்றையும் ஆற்றிலே எறிந்து விட்டார்கள்! மன்னனுக்கு இதனால் வருமானம் ஒன்றும் கிட்டவில்லை. நூறு பசுவும் நஷ்டம்தான்.

வீரர்கள் வந்து நடந்த விஷயத்தைச் சொன்னதும் நூறு பசுக்களை நஷ்டமாக இழந்ததை எண்ணி மன்னன் வருத்தப்பட்டான். இவ்வளவு மட்டமான யோசனை தனக்குத் தோன்றக் காரணமான கிழவனை மன்னன் மறக்கவில்லை. அவனைத் தேடிப் பிடித்து நன்கு விசாரிக்க எண்ணம் கொண்டான். யாரையும் அனுப்பாமல் தானே

குதிரை ஏறிக் கிழவன் வாழும் இடத்திற்கு விரைந்தான். வீரர்கள் பின் தொடர்ந்தனர்.

மன்னனும் அவன் ஆட்களும் வருவதை தூர இருந்தே பார்த்து விட்ட கிழவன் பயந்து பதைபதைத்தான். ஆனாலும் தந்திரசாலியான அவன், தனது பயத்தைக் காட்டிக் கொள்ளாமல் விடுவிடுவென்று விநோதமான காரியம் ஒன்றைச் செய்தான். வீட்டு அடுப்பிலே கொதித்துக் கொண்டிருந்த அவியல் குழம்புப் பாத்திரத்தை எடுத்து முற்றத்திலே தரையில் வைத்தான். ஒரு மாட்டுச் சாட்டையைக் கையிலே பிடித்து, பாத்திரத்தை அடி அடி என்று அடிக்க ஆரம்பித்தான்.

மன்னனும் அவனது வீரர்களும் உள்ளே வந்த வேளையில் இந்தக் காட்சியைப் பார்த்துத் திகைத்தனர்.

''நீ என்ன செய்கிறாய்?'' என்று மன்னன் கேட்டான்.

''சமையல் ஆகிறது மன்னவா. இந்த அவியல் குழம்பு கொதித்தால் சமையல் தயார். அதற்குத்தான் சாட்டையால் அடிக்கிறேன். சாட்டையால் அடிக்க அடிக்கக் குழம்பு கொதிக்கும்'' என்றான் கிழவன்.

கிழவன் கூறிய பதிலைக் கேட்டதும் அப்பாவி மன்னனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. இதோ கண்ணெதிரே குழம்பு கொதிக்கிறதே, அடுப்பு இல்லாமல் விறகு இல்லாமல் சாட்டை வீச்சுக்குக் கட்டுப்பட்டு குழம்பு கொதிக்கிறதே! இவ்வளவு வல்லமை உள்ள கிழவனை எப்படிக் கோபிப்பது? பேசாமல் நாமும் நாளை முதல் இவனைப் போலவே அடுப்புச் செலவு இல்லாமல் சமையல் செய்வோம் என்று திரும்பி விட்டான்.

அரண்மனை சமையற்காரரை அழைத்து பெரிய பாத்திரத்திலே குழம்பு வைக்கச் சொல்லி, அதை அடுப்பிலே ஏற்றாமல், சாட்டை அடியாலே கொதிக்க வைக்கச் சொன்னான். மன்ன



வின் கட்டளையாயிற்றே! மீற முடியுமா? குழம்பிப் போன சமையற்காரர் நம்பிக்கையே இன்றி சாட்டையால் வேக வேகமாக அடித்த அடியில், குழம்புப் பாத்திரம் கவிழ்ந்து குழம்பு கீழே கொட்டியதுதான் மிச்சம்!

நஷ்டம் ஒரு பக்கம். அவமானம் ஒரு பக்கம். மன்னன் ஆலோசனை செய்தான். கிழவன் மீது கோபமான கோபம் வந்தது! நாலு தடியர்களை அழைத்து, கிழவனைப் பிடித்து வரச் சொன்னான்.

நாலு தடியர்களும் கிழவனைப் பிடித்தார்கள். குண்டுக் கட்டாகக் கட்டினார்கள். அப்படியும் கிழவன் திமிறியதால் கிழவனின் கை கால்களைக் கட்டி விட்டு ஒரு கோணியிலே இறக்கினார்கள். நாலு தடியர்களில் ஒரு தடியன் அந்தக் கோணி மூட்டையை முதுகிலே சுமக்க நாலு பேரும் நடந்தனர்.

வழியிலே ஒரு பானக் கடை. மூட்டை சுமந்த தடியன், ''இந்தக் கிழ வனைச் சுமந்து சுமந்து முதுகுவலி கண்டுபோச்சு. வாங்க ஏதாவது குடித்து விட்டு மறுபடி கிளம்பலாம்'' என்றான். மூட்டையைத் தெருவோரம் சுவரிலே சாத்தி விட்டு நாலு பேரும் உள்ளே போனார்கள். அவர்கள் மன்னனின் அடியாட்கள் என்று தெரிந்தும் கடைக்காரன் அவர்களுக்கு பானகத்துடன் டிபனும் தாராளமாகக் கொடுத்தான். இஷ்டத்திற்கு சாப்பிட்டு பானகத்தைக் குடித்து விட்டுத் திரும்ப நேரமாயிற்று.

இதனிடையே தெருவோரம் சுவரிலே சாத்தி வைத்த மூட்டைக்குள் இருந்த தந்திரக் கிழவன் தப்பிக்க வழி தேடினான். வெளியே என்ன நடக்கிறது என்று கவனித்தபடி இருந்தான்.

ஒரு ஆட்டிடையன் 'தானானா' பாடிக் கொண்டு வந்தான். கிழவன் மூட்டைக்குள் இருந்தபடி ஆடு மேய்ப்பவன் வருவதை அறிந்து விட்டான். உடனே மூட்டைக்குள்ளிருந்து ''நான் மாட்டேன். மன்னன் மகளை மணக்க மாட்டேன். அவள் சிறியவள். நான் கிழவன்'' என்று உரக்கச் சொன்னான். திரும்பத் திரும்ப அதையே சொன்னான்.

ஆடு மேய்ப்பவன் மூட்டை அருகே வந்து இந்த விநோத வேண்டுகோளைக் கேட்டான். ''உள்ளே யார்?'' என்றான்.

''முதலில் கோணியை அவிழ்த்துப் பார்!'' என்றான் தந்திரக்காரக் கிழவன்.

ஆடு மேய்ப்பவன் கோணிக் கயிறை அவிழ்த்தான். கிழவன் வெளியே வந்து, ''தம்பி! நாலு பேர் மன்னனின் ஆட்கள் என்னைக் கட்டி விட்டார்கள். மன்னர் மகளை மணக்க வேண்டுமாம். என்னால் முடியாது என்றால் பலாத்காரமாக மூட்டை கட்டி அழைத்துப் போகிறார்கள். என்ன செய்வது? நல்லவேளை நீ இளைஞனாக இருக்கிறாய். நீதான் மன்னன் மகளை மணந்து கொள்



''பரீட்சை ரிசல்ட் வந்ததும் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கணும்னுதானே சொல்லியிருந்தே! பின்னே ஏன் வேறே ஆள் உடைச்ச சிதறுகாயைப் பொறுக்கிக்கிட்டிருக்கே?''

''பாஸாயிட்டா உடைக்கிறதாகவும் ஃபெயிலாயிட்டா பொறுக்கிக்கிறதாகவும் வேண்டிக்கிட்டேனே?''

– எஸ். சரவணன், சேலம்.



ளேன்?'' என்றான். அவன் மகிழ்ச்சியுடன் சம்மதிக்கவே ஆடு மேய்ப்பவனைக் கோணியுள் கட்டினான் கிழவன். அவனது முந்நூறு ஆடுகளையும் தனது ஊருக்கு ஓட்டிப் போய் விட்டான்!

தின்று பானம் குடித்து விட்டு வந்த நாலு தடியர்களும் சாலையிலே கவரோரம் கிடந்த மூட்டையைத் தூக்கிக் கொண்டு மன்னரிடம் கிளம்பினார்கள். ''மூட்டை இப்போ அதிகமா கனக்கிறதே!'' என்றான் ஒரு தடியன். ''போடா போ. நன்றாக மூக்க முட்டத் தின்றாயே. அதனால்தான் கனமாகத் தோணுது'' என் றனர் அவன் சகாக்கள்.

மன்னன் இவர்களைப் பார்த்தவுடனே ஒன்றும் விசாரியாமல், ''அந்தக் கிழவனை மூட்டையோடு அப்படியே ஆற்றில் தூக்கிப் போட்டு விடுங்கள்!'' என்று கட்டளையிட்டான். அவ்வாறே அவர்களும் அந்த மூட்டையை நதியிலே எறிந்து விட்டனர்.


இரண்டு நாள் கழித்து கிழவன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு போவதை ஒரு தடியன் பார்த்து விட்டான். வியப்பும் பயமும் கொண்டான். ''மூட்டையோடு, தண்ணீரிலே மூழ்கியவன் மறுபடி உயிரோடு வந்து விட்டானே! எப்படி?'' என்று மன்னனிடமே சென்று கேட்டனர்.


மன்னனும் கிழவனை அழைத்து விசாரித்தான்.


''ஒன்றுமில்லை. நீங்கள் நதியிலே என்னை வீசிப் போட்டது நல்லதாயிற்று. இந்த மாதம் இந்த நதியிலே மூழ்கினால் நதி தேவதை முந்நூறு ஆடுகளைத் த ரு வ து வழக்கமாம்!'' என்றான் கிழவன் அமைதியாக.

''அப்படியானால் என்னையும் மூட்டை கட்டி நதியிலே வீசுங்கள்!'' என்றான் அசட்டு மன்னன்!

கட்டளை நிறைவேற்றப்பட்டது!


மந்திர மணி
கதை : ஆனந்தி...
சித்திரம் : லலிதா...
இமய மலைச் சாரலில் வடாக் பகுதி...
மீன்களே! ரொட்டி சாப்பி-டுங்க! எனக்கு ஒரு துண்டு பாக்கி இருந்தாப் போதும்!
ஏண்டா நுவாங்க்! பாலைப் பூனைக்குக் கொடுத்துட்டியே, டீக்கு என்ன பண்றது?
பூனை பாவம்ப்பா!
நாயையும், பூனையை-யும் தான் கவனிக்கிறே, அதில் பாதி கவனமாவது படிப்பில் செலுத்தக் கூடாது!...ஹூம்!
ஒரு நாள்...
நுவாங்க்! எனக்கு உடம்பு சரியா இல்லே.. உனக்கோ படிப்பு ஏறலே. நான் இறந்துட்டா, உன் இரக்க குணம் தான் உன்னைக் காப்பாத்தணும்...!
தந்தை இறந்து விட...
கிராமத் தலைவனைப் பார்த்து என் சொத்தை-யெல்லாம் விற்று விடறேன்!


கிராமத் தலைவர்...
நவாங்க்! சொத்தையெல்லாம் ஏன் விக்கறே?
நான் தேசாந்திரம் போறேன்!
தலைவர் கள்ளத்தனமாக...
என்ன பெரிய சொத்து... இடிந்த வீடு, கிழட்டு மாடு, நல்ல விளைச்சல் இல்லாத நிலம்..., சரி, சரி, என்ன விலை கேட்கிறே...?
நவாங்க் வெறுப்படைந்தான்
என்ன பேராசை!
எனக்கு மூன்று கம்பளிகள் கொடுங்க, போதும்...!
பிழைக்கத் தெரியாதவன்...
மூன்று கம்பளிகளா! அடேயப்பா!... ரொம்ப ஜாஸ்தி! ஆனாலும் உன்னைப் பார்த்தாப் பரிதாபமா இருக்கு... தரேன்...
நவாங்க் புறப்பட்ட போது கிராமத் தலைவரின் மனைவி, ரகசியமாக...
நவாங்க்! என் கணவர் சரியா நடந்துக்கலை. வருத்தப் படறேன். இதிலே இரண்டு சப்பாத்தியும், கிழங்கும் இருக்கு. வழியிலே பசிச்சா சாப்பிடு...!


நவாங் வெகுதூரம் நடந்து மலைகளைக் கடந்தான்... இரவு...
குளிர் தாங்கலையே ... நல்லவேளை கம்பளிகளாவது இருக்கே ... பசிக்கு உணவும் இருக்கு...
மறுநாள் காலை மேலும் நடக்க...
இது என்ன நதி?
சிந்து நதி...
சில சிறுவர்கள் ஒரு குருவி காலில் கயிற்றைக் கட்டி...
எங்கே பற, பார்க்கலாம்! பற, எவ்வளவு தூரம் பறப்பே?
ஐயோ! இப்படி வாயில்லா ஜீவனைத் துன்பப் படுத்தலாமா?
நீ யாருடா சொல்றதுக்கு?
இதோ பார்! என்னிடம் மிக உயர்ந்த கம்பளி இருக்கு. குருவியை விட்டால் ஒரு கம்பளி தர்றேன்...!
சரி!
குருவி ஆனந்தமாய்ப் பறக்க...
சிறகு விரித்து வானில் பறக்கும் சின்னக் குருவியே! பறவையாக நானும் வானில் பறக்க வேணுமே!




நவாங்க் வெகுதூரம் நடந்து... மேலும் நடந்து நடந்து... வேறு ஓர் ஊரில்...
ஏம்பா, காட்டிலே இருக்க வேண்டிய கரடியை இப்படி கட்டிப் போடலாமா?
ஆ! இதைப் பழக்கினா சம்பாதிக்கலாமே!
வேண்டாம், கொடுமைப் படுத்தாதே... அதோ பார், உயர்ந்த கம்பளிப் போர்வை... கரடியை விட்டு விட்டால் இதைத் தருவேன்!
கம்பளிக்கு ஆசைப்பட்டு வித்தைக்காரன் கரடியை விட்டுவிட...
ஓடிப் போயிடு! இந்தப் பக்கமே தலை காட்டாதே!
நவாங்க் சற்று தூரம் நடந்து, ஒரு வீட்டு வாசலில்...
நான் எல்லாத்தையும் பாத்துக்கிட்டுதான் இருந்தேன்! நீ நல்ல பையன்... கரடியைக் காப்பாத்தினே! இந்தா, சப்பாத்தி - சப்ஜி, சாப்பிடு!
வயிறு நிறையவே, நவாங்க் நன்றி கூறி விட்டு மேலும் நடந்தான்... வேறு ஓர் ஊரில்...



குழந்தைகளின் கூட்டத்துக்கு நடுவில்...
குச்சியால ஒரு அடி கொடு அப்பத்தான் இன்னும் வேகமாக ஆடும்!
பாவம்! ஏன் அடிக்கிறீங்க!
எங்க குரங்கு; நாங்க அடிப்போம், ஆட வைப்போம். நீ யாரு கேட்கிறதுக்கு...?
அந்தக் குரங்குக்கு விடுதலை கொடுத்தா, இந்தக் கம்பளி பரிசு!
அட! ஜோரா இருக்கே... குளிருக்கு அடக்கமா...!
குரங்கு மரமேறி...
நன்றி, நவாங்க்!
போய்ட்டு வரேன்!
நவாங்க், நடை பயணத்தைத் தொடர்ந்தான்.
அழகான ஏரி! ஏரிக் கரையில் ஏகப்பட்ட கூடாரங்கள்!


கூடாரங்களை நெருங்கினான்...
உம்ம்ம்... சமையல் மணம்... பசியைக் கிளப்புகிறது...
எட்டிப் பார்க்க, யாருமில்லை. எனவே...
ஆகா! இப்படி வயிறு நிறையச் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு! ராஜாவுக்கு ஏற்ற ருசியான பண்டங்களாக இருக்கே!
கூடாரத்துக்குள் நுழைந்த சமையற்காரன்...
ஐயோ! திருடன்! திருடன்! ராஜாவுக்குச் சமைத்ததை எல்லாம் தின்னுட்டானே!
ரகளை கேட்டு அரசி வர...
ஏரிக்கரையிலே ரெண்டு நாள் கூடாரம் போட்டு நிம்மதியா இருக்கலாம்னு வந்தா இங்கேயும் தொல்லையா... ஹூம்!
இவனை ஒரு பெட்டியில் வைத்து மூடி, ஆற்றிலே எறியுங்கள்!



உமாபட் மிகவும் வருந்தி...
தேவி! பல ஆண்டுகளாக முறையிட்டு வருந்திறேனே? குழந்தைகள் எங்கே? ஒரு வழி காட்டு!
மேலும் சில தினங்கள் சென்று...
குருஜி! உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது!
இதில் சந்தோஷப்பட என்ன இருக்கிறது?
பரமேசுவரி! இவனையாவது காப்பாற்றிக் கொள்!
'மகேச்வர்' என்று பெயரிட்டு வளர்த்தார்கள்...
குழந்தை சற்றுப் பெரியவனானதும்...
மகேஷ்! வெளியே போய் விளையாடாதே!
ஏம்மா?


நான் இந்த மணியின் தேவதை. என்ன வேணுமோ, கேளுங்க!
பசிக்குச் சாப்பிட என்னைத் தண்டித்தாரே அரசி, அவ வாழ்வது போன்ற அரண்மனையும் தோட்டமும் எனக்கும் வேண்டும்...
அடுத்த கணம்...
என்ன ஆச்சர்யம்... இவ்வளவும் என்னுதா?
தோட்டத்தையும் பார்த்து மகிழுங்கள்...
அற்புதம்
கிக்...கீக்...
குர்...குர்...
கீ...கீ!
சமையற்காரர்கள், பணியாட்கள், காவலர்கள் எல்லாமும் உண்டு...
தேவதை மறைய, நவாங்கும் நண்பர்களும் ஆனந்தமாக வாழ்ந்தார்கள்... ஒரு நாள்...
நான் உலகம் சுற்றும் வியாபாரி. பல அபூர்வப் பொருட்கள் உள்ளன. எஜமானிடம் சொல்லுங்க...!
நவாங் ஆவலோடு பார்வையிட்டான்...
இது துருக்கி நாட்டிலிருந்து வந்தது... இது! சீன தேசத்து விசிறி...இது!


நவாங் தனக்கு வேண்டிய பொருட்களை எடுத்துக் கொண்டான்...
ஆக மொத்தம் ஆயிரம் பொன்தான் ஆகிறது, பிரபு!
ஆயிரம் பொன்னா...! என்ன செய்வது...?
மந்திரமணி நினைவுக்கு வருகிறது...
தேவதையே, அந்த வியாபாரி மகிழ, விருந்துடன் நல்ல சங்கீதம் ஒலிக்கட்டும். ஆயிரம் பொன் தரவும்.
அப்படியே!
உலகமெல்லாம் சுற்றி இருக்கிறேன்... இந்த மாதிரி அதிசயத்தை நான் எங்கும் பார்த்ததில்லை...!
எல்லாம் கடவுள் அருள்!
அன்றிரவு...
வாழ்நாள் எல்லாம் நான் வியாபாரம் செய்து சம்பாதிக்கக் கூடிய செல்வம் இந்த மந்திர மணிக்கு ஈடாகாது... இதை எடுத்துக் கொள்கிறேன்.
மறுநாள் அதிகாலை...
காவலர்களே! போய் வருகிறேன். அதிகாலையில் புறப்பட்டால் தான் தோத்தோங் தான் அந்த நகருக்குச் செல்ல முடியும். உங்கள் எஜமானர் எழுந்ததும் என் நன்றி கூறுங்கள்...


அன்று மாலை...
ஆ... அரண்மனை, தோட்டம், காவலர், பணியாட்கள், யாரையும் காணோமே! எல்லாம் எங்கே போச்சு...
கிக்.. கிக்!
நான் மந்திரமணியை இழந்து விட்டதை உணர்ந்து நவாங்க்...
இது அந்த வியாபாரியின் வேலைதான்! அவனிருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்போம்!
குருவி பறந்து திரிந்து...
ஆ... கண்டு பிடிச்சுட்டேன்! நவாங்குக்குத் தெரிவிக்கணும்!
குருவியைப் பின் தொடர்ந்து நவாங்கும் நண்பர்களும் விரைந்தனர்...
ரெண்டே நாளில கண்டு பிடிச்சுட்டியே... குருவி... நீ ரொம்ப சமத்து!
குன்றின் மேல் அரண்மனை... பலத்த காவல்... எப்படி நுழைவது?


குருவி பறந்து போய் ஜன்னல் வழியே பார்த்தது...
அதோ... மந்திரமணி... ஐயோ... காவலுக்கு இரண்டு கடுவன் பூனைகள்!
குருவி திரும்பி வந்து விவரம் சொல்ல...
ஓடையிலிருந்து மீன் பிடிச்சுத் தரேன்... குரங்கே! அடுத்த காரியத்தைக் கவனி!
குரங்கு மீன்களுடன் சென்று...
இதுதான் மந்திரமணி இருக்கும் அறையின் ஜன்னல்... இங்கே வைக்கிறேன்...
மீன் வாசனை உணர்ந்து ஜன்னல் வழியே பூனைகள் வெளியேற...
இதுதான் சமயம்!
மந்திர மணியைக் கொத்திக் கொண்ட குருவி...
திருடனிடம் திருடுவதில் தப்பில்லை!


நவாங்கிடம் மணி திரும்ப வந்து சேர்ந்தது...
வாங்க, போகலாம்!
மந்திர மணியின் உதவியால் அரண்மனை, தோட்டம் முதலியவற்றைத் திரும்பப் பெற்றான் நவாங்க்..
தேவதையே! அந்த வியாபாரியின் உடமை-கள் எல்லாம் இந்த அரண்மனைக்கு வந்துடணும்.
அவ்வாறே நடந்து விட...
ஐயோ! செல்வமெல்லாம் போச்சே! கந்தலை அணிந்து திரியும்படி ஆச்சே!
நவாங்கிடம் வந்து மன்னிப்புக் கேட்டான் வியாபாரி...
உன் உடைமைகளைத் திருப்பித் தர்றேன். ஆனா ஒரு நிபந்தனை... நீ நாடு, நகரமென்று வியாபாரப் பயணம் செய்யும் போது நானும் வருவேன்!
எனக்கு அரண்மனை வாழ்க்கையை விட உலகப் பயணம் தான் பிடிச்சிருக்கு! போய் வரேன், நண்பர்களே! தேவதையே! உனக்கும் விடுதலை!

நூறு ரூபாய் இரகசியம்



8. கூட்டணி

"பரதா, புத்தகத்தை அலமாரியில் இதோ இந்த இடத்தில்தான் வைத்தேன். இப்போது காணவில்லையே!" என்றான், ஞானம்.

"நீ வைத்த பிறகு யாராவது புத்தகத்தை எடுத்திருக்கக்கூடும்."

"அப்படி எடுத்தால் உன் அம்மாவிடம் சொல்லி விட்டுத்தானே எடுப்பார்கள்?"

"ஆமாம். எதற்கும் அம்மாவைக் கேட்கலாம். அம்மா வேலை செய்யும் வீடு எனக்குத் தெரியும். அங்கே போய்க் கேட்கலாம்."

பரதன் சொன்னபடி வீட்டை விட்டு வெளியே வந்தான். ஞானமும் வெளியே வந்தான். கதவை மூடித் தாளிட்டுப் பூட்டிய பரதன், சைக்கிள் பின்னே கேரியரில் உட்கார, ஞானம் சைக்கிளை மிதித்தான். பரதன் சொன்ன வழியே சைக்கிளைச் செலுத்தி, ஒரு பங்களாவின் முன்னே நிறுத்தினான். ஞானம் வெளியே நிற்க, பரதன் அந்தப் பங்களாவுக்குள் போனான்.

அங்கே வேலை செய்து கொண்டிருந்த பரதனின் தாயார் தங்கம்மாள், தன்னைத் தேடி வந்த மகனைப் பார்த்து ஆச்சர்யப்பட்டாள்.

"அம்மா, நேத்து ஞானம் ஒரு புத்தகம் கொண்டு வந்து புத்தக அலமாரியில் வைத்தானாம். அதைக் காணோமே! அதை யாராவது எடுத்தார்களா?"

பரதன் கேட்டான்.

"ஆமாம். ஞானம் வந்து போன கொஞ்ச நேரம் கழிச்சு சுந்தரம் வந்தான். நீ சீக்கிரமா வந்துடுவேன்னு காத்திருந்தான். அப்போ அந்தப் புத்தகத்தை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தான். நீ வரலே. அவன் புறப்பட்டுட்டான். அந்தப் புத்தகத்தைப் படிச்சுட்டுத் தர்றதா சொல்லி எடுத்துக்கிட்டுப் போனான். பேர் கூட, ஏதோ அவர்கள்....னு சொன்னானே...?"

"புத்தகம் ஞானப் பெட்டகத்தின் திறவுகோல்கள். இன்பப் பூங்காவின் நுழைவாயில்கள். நம்மை உயர்த்துவிக்கும் நண்பர்கள்! வாருங்கள் படிப்போம்!" என்பது அறிஞர் அமிலி பௌல்சனின் பொன் மொழி. இதை அடிக்கடி கூறும் பரதனின் குரு வெள்ளியங்கிரி, பரதனிடம் படிக்கும் பழக்கத்தை உண்டாக்கி விட்டார். அவனது புத்தக அலமாரியில் பாடப் புத்தகங்கள் தவிர, பகுத்தறிவையும் பண்பையும் வளர்க்கும் பயனுள்ள புத்தகங்கள் பல இருக்கும். அவை யாவும் வெள்ளியங்கிரி உள்ளம் மகிழ்ந்து வாங்கித் தந்த நூல்கள்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் பரந்த மனோபாவத்துடன், பரதன் தன் புத்தகங்களை நண்பர்களுக்கும் படிக்கக் கொடுப்பான். அவனிடம் புத்தகத்துக்காக வரும் நண்பர்கள் சிலரில் ஒருவன்தான், சுந்தரம். பரதன் எட்டாம் வகுப்பு வரை

டாக்டர் பூவண்ணன்

படித்த பழைய பள்ளியில் அவனுடன் படித்த நண்பன் சுந்தரம். அவன் அடிக்கடி வந்து பரதனிடம் இருக்கும் நல்ல நூல்களை எடுத்துச் செல்வான். இப்போதும் அதே உரிமையோடு வந்து, 'அவர்கள் வாழ்விலே' நூலை எடுத்துச் சென்றுள்ளான்.

அம்மா சொன்னதைக் கேட்டு ஒன்றும் சொல்லாமல் பரதன் சிந்தனையில் ஆழ்ந்தது, அம்மாவுக்கு வியப்பளித்தது. ''என்ன ராசா? என்னமோ மாதிரி நிக்கறே? சுந்தரம் புத்தகம் எடுத்துக்கிட்டுப் போனதை உன்னிடம் சொல்லச் சொன்னான். நான்தான் மறந்துட்டேன். அதனாலே ஏதாவது பிரச்னையா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா. அந்தப் புத்தகம் கொஞ்சம் அவசரமா தேவைப்பட்டது. அவ்வளவுதான். நான் வரேம்மா.''

பரதன் வெளியே வந்து, விஷயத்தை ஞானத்திடம் கூறினான்.

''சுந்தரம் இப்போ எங்கே இருப்பான்?''

ஞானம் கேட்டான்.


''அவன் ஆர். எஸ். புரம் பள்ளியில் சேர்ந்து விட்டான். அங்கே போனால் அவனைப் பிடிக்கலாம்.''

''சரி புறப்படு.''

சரியாகப் பத்து நிமிடங்களில் ஆர்.எஸ்.புரம் பள்ளியின் முன்னே சைக்கிள் நின்றது. பள்ளியில் காலை வகுப்புகள் முடிய இன்னும் பத்து நிமிடங்களே இருந்தன. அதனால் பரதன் சுந்தரத்தைத் தேடி வகுப்புக்குள் நுழையவில்லை. வகுப்பு முடியும் வரை காத்திருந்தான்.

மணி அடித்தது.

சுந்தரம் தனது வகுப்பிலிருந்து வெளியே வந்த போது, அந்த வகுப்பறையின் அருகிலேயே பரதன் அவனை எதிர்கொண்டான். மற்ற மாணவர்கள் பரதனை விசித்திரமாகப் பார்க்க, சிலர் 'குள்ளன்' என்றும் குரல் கொடுத்தார்கள். பரதன் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் சுந்தரத்தை அழைத்துக் கொண்டு வந்து, ஞானத்துக்கு அறிமுகப்



படுத்தினான். பிறகு, ''சுந்தரம், நேத்து நீ என் வீட்டுக்கு வந்த போது 'அவர்கள் வாழ்விலே' புத்தகத்தை எடுத்து வந்தாயாமே?'' என்று கேட்டான்.

''ஆமாம். சொல்லிட்டுத்தானே எடுத்து வந்தேன்?''

''அம்மா சொன்னாங்க. அந்தப் புத்தகத்துக்குள்ளே ஏதாவது இருந்ததா?''

''ஏதாவது என்றால்...''

''ரூபாய் நோட்டு! நூறு ரூபாய் நோட்டு!''

''நூறு ரூபாய் நோட்டா? அப்படி எதுவும் இல்லையே.., புக் மார்க்காக ஒரு தாள் இருந்தது.''

இப்போது ஞானம் குறுக்கிட்டான்.

''அந்த புக்மார்க்குதான் வேண்டும். அதை அதே புத்தகத்தில்தானே வைத்திருக்கிறாய்?''

சுந்தரம் அந்தப் புத்தகத்தைப் புரட்டிய போது அதில் ஒரு தாள் இரண்டாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. அது 'புக் மார்க்' என்று புரிந்து கொண்டான்.

சுந்தரத்தின் தந்தைக்கு ஒரு பதிப்பாளர் நண்பர். அவர் ஒரு புத்தகக் காட்சி நடத்தினார். அதிலே அம்பு வடிவத்தில் ஒரு புக் மார்க் தயாரித்து, காட்சிக்கு வந்தவர்களுக்கு அன்பளிப்பாகத் தந்தார். அதில், புத்தகம் பற்றிய சில பொன்மொழிகளும் அச்சிட்டிருந்தார். அந்த புக் மார்க் சிலவற்றை அவர் சுந்தரத்துக்குக் கொடுத்திருந்தார். பரதனின் புத்தகத்தில் ஒரு சாதாரண தாள் புக் மார்க்காக இருப்பதைக் கண்டவுடன் அதை எடுத்துப் போட்டு விட்டு, பதிப்பாளர் தந்த அழகான புக் மார்க்கை அதிலே வைத்து விட்டான்.

சுந்தரம் இதைச் சொன்னதும், ''அடடா! தப்பு செஞ்சுட்டையே!'' என்று பதறினான், ஞானம்.

''சுந்தரம் அந்தத் தாளை எங்கே போட்டேன்னு ஞாபகம் இருக்கா?'' என்று பரதன் கேட்டான்.

சுந்தரத்தின் வீட்டில், அவனுடைய மேஜை அருகே ஒரு பிளாஸ்டிக் குப்பைக்கூடை இருக்கிறது. அதில்தான் அந்தத் தாளைப் போட்டதாக அவன் தெரிவித்தான். உடனே அவனை அழைத்துக் கொண்டு அவன் வீட்டுக்குச் சென்றனர், ஞானமும் பரதனும்.

மூவரும் சுந்தரத்தின் வீட்டுக்குள் சென்று, சுந்தரத்தின் அறைக்குள் நுழைந்தனர். மேஜையருகே சிவப்பு நிறத்தில் பிளாஸ்டிக் 'டஸ்ட் பின்' இருப்பதைப் பார்த்ததும், ஞானம் அதை நோக்கி ஓடினான். ஆவலோடு அதை எடுத்துப் பார்த்தான்.

குப்பைக் கூடை, சிறிதளவு குப்பையும் இல்லாமல் சுத்தமாக இருந்தது.

அதைக் கண்ட சுந்தரம், ''அம்மா! அம்மா!'' என்று கூவினான்.

சுந்தரத்தின் அம்மா, ''ஏண்டா வீடே இடிஞ்சு விழறாப் போலக் கூவுறே?'' என்று கேட்டபடி அங்கே வந்தாள்.

சுந்தரம், ஞானம் கையிலிருந்து குப்பைக் கூடையை வாங்கி, அம்மாவின் முன்னே நீட்டி, ''அம்மா, இதிலே இருந்த குப்பையெல்லாம் எங்கே?'' என்று கத்தினான்.

''என்னடா வந்தது உனக்கு? கோமேதகம் - வைரம் எங்கேன்னு பதர்றா மாதிரி குப்பையெல்லாம் எங்கேன்னு பதர்றே? குப்பை எங்கே போகும்? குப்பைத் தொட்டிக்குத்தான்! காலையிலே உன் அறையைக் கூட்டித் துடைச்சு சுத்தம் பண்ணப்போ, குப்பைக் கூடையிலிருந்த குப்பையை வெளியே இருக்கிற குப்பைத் தொட்டியிலே கொட்டிட்டேன்.''

அம்மா அமைதியாகச் சொன்னாள்.

''அதுலே முக்கியமான காகிதம் ஒண்ணு இருந்ததும்மா.''

''முக்கியமான காகிதம்னா ஏன் குப்பைக் கூடையிலே போடறே?''

''என்னமோ போட்டுட்டேன். எனக்கு இப்போ அது வேணுமே?''

''ரொம்பவும் பதறாதே! தெருவிலே இருக்கிற குப்பைத் தொட்டியிலேதான் எல்லாத்தையும் கொட்டியிருக்கறேன். கார்ப்பரேஷன் குப்பை வண்டி வந்துதான் அதை எடுத்துப் போகணும். எந்த ஊர் கார்ப்பரேஷனும் அன்றைய குப்பையை அன்றே எடுத்துப் போறதில்லே. வாரத்துக்கு ஒரு நாள் வந்தாலே

அதிகம். வெளியே போய் குப்பைத் தொட்டியிலே தேடு. உன் பொக்கிஷம் கிடைச்சாலும் கிடைக்கும்.''

உடனே மூவரும் வீட்டுக்கு வெளியே ஓடி வந்தனர்.

சுந்தரம் வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளி, வீடு கட்டாத ஒரு காலி மனை. அதை ஒட்டி ஒரு பெரிய சிமெண்ட் குப்பைத் தொட்டி. அதிலே குப்பை நிறைந்திருந்தது. குப்பைத் தொட்டியைச் சுற்றிலும் குப்பை சிதறிக் கிடந்தது.

அப்பாடா! குப்பை எங்கேயும் போகவில்லை!



''ஜப்பானில் ரயிலில் பிரயாணம் செய்யும் போது, அழகிய சிறு பிளாஸ்டிக் பையையும் கொடுப்பார்கள். ரயிலில் சிற்றுண்டி சாப்பிட்டவுடன் அந்தக் காகித தட்டுகளையும், காலியான அட்டைக் கோப் பைகளையும், அந்தப் பிளாஸ்டிக் பையில் போட்டு, ரயிலை விட்டு இறங்கும் போது, அந்தந்த ஸ்டேஷனில் அதற்கென வைக் கப்பட்டுள்ள தொட்டியில் போட்டுவிட வேண்டும்.''

– தக்கோலம் முஸ்தபா.

தேடிய புதையலைக் கண்ட ஒரு திருப்தியுடன் மூவரும் அந்தக் குப்பைத் தொட்டியிடம் சென்றனர். ஞானம் குப்பைத் தொட்டியின் மேலே ஏறி, அதற்குள்ளேயே குந்துக்காலிட்டு உட் கார்ந்து, குப்பையைக் கிளறினான். வெளியே விழுந்து கிடந்த குப்பையை, சுந்தரமும் பரதனும் அலச ஆரம்பித் தனர்.

''ஒரு நூறு ரூபாயை நீளவாக்கில் மடித்தால் கிடைக்கும் வடிவத்தில், வெள்ளை நிறத்தில் இருக்கும். கவனமா தேடுங்க'' என்று தகவல் தந்தான் ஞானம்.

சீருடை அணிந்த பள்ளி மாணவர் கள் குப்பைத் தொட்டியை அலசுவதை அந்த வழியே போகிறவர்கள் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள்.

அரை மணி நேரத்துக்குப் பின்பு, ''யுரேகா'' என்று கத்தியபடி, குப்பைத் தொட்டிக்குள்ளேயே ஒரு குதிகுதித் தான் ஞானம். அவன் கையில் ஒரு சிறு தாள் இருந்தது.

சுந்தரமும் பரதனும் தேடுவதை நிறுத்தினர்.

ஞானம் குப்பைத் தொட்டியி லிருந்து கீழே குதித்தான். பரதன் அவனிடமிருந்த அந்தத் தாளை வாங்கி னான். அது வெள்ளை நிறத்திலிருந்தது. இரண்டாக மடித்திருந்தது. அதைப் பிரித் தான். பிரித்தால் நூறு ரூபாய் நோட்டு!

''என்ன இது! ஒரு பக்கம் மட்டும் அச்சான நூறு ரூபாயாக இருக்கே?'' என்று வியந்து கேட்டான் சுந்தரம்.

''சுந்தரம், இதில் ஒரு பெரிய கதையே அடங்கி இருக்கு. மாலையில் வீட்டுக்கு அவசியம் வா. விரிவா சொல் றேன். இப்போ நாங்க புறப்படறோம்'' என்றான் பரதன்.


''சாப்பிட்டுட்டுப் போகலாமே.''

''தாங்க்ஸ். உடம்பெல்லாம் குப்பை. குளிச்சுட்டுத்தான் சாப் பிடணும். அதனாலே இன்னிக்கு வேண் டாம்.''

பரதனும் ஞானமும் புறப்பட்டனர். அப்போது மணி இரண்டு.

ஞானம் பரதனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். இருவரும் குளித் துச் சாப்பிட்டனர். பிற்பகல் பள்ளிக்குச் செல்லவில்லை. ஞானம் மட்டும் சைக் கிளில் சென்று புத்தகப் பைகளை எடுத்து வந்தான். அது வரை குப்பையில் கண் டெடுத்த ஒரு பக்கம் அச்சிட்ட நூறு ரூபாய் நோட்டையே கையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான், பரதன்.

ஞானம் வந்ததும் அவனை அழைத்து அருகே உட்கார வைத்துக் கொண்ட பரதன், நூறு ரூபாய் நோட்டை புக் மார்க் போல மடித்து வைத்துக் காட்டினான்.




''ஞானம், இந்த புக் மார்க்கைப் புத்தகத்தில் நாதன் வைக்கவில்லை. நான்தான் வைத்தேன். ஜி.சி.டி.யில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தேன். புறப்பட நினைத்த போது கீழே கிடந்த இந்தத் தாளை நான்தான் எடுத்துப் புத்தகத்தில் வைத்தேன்.''

''அப்படியா! உம்... இது யாருடையது என்று தெரிந்தால், அந்த ஆசாமி மூலம் கள்ள நோட்டுக் கும்பலைக் கண்டுபிடிக்க ஒரு வழி கிடைக்கலாம்.''

ஞானம் சொன்னதும், பரதனின் மனம் ஜி.சி.டி.யில் அதைக் கண்டு பிடித்த நாளை நினைத்தது.

ஜி.சி.டிக்குள் நுழையும்போதே, எதிரே புருவம் இல்லாத ஒருவன், டூத் பிரஷ் போல் அடர்த்தியான புருவம் கொண்ட ஒருவன் ஆகிய இருவர் எதிரே வந்தது, அவன் அங்கிருந்து அவன் புறப்பட்ட போது, மீண்டும் அதே இரண்டு பேர் ஜி.சி.டி.க்குள் அவசர அவசரமாக நுழைந்து அவனைக் கடந்து சென்றது, அவன் திரும்பிப் பார்த்த போது, பரதன் உட்கார்ந்திருந்த அதே சிமெண்ட் பெஞ்சு அருகில் எதையோ தேடிக் கொண்டிருந்தது ஆகியவை நினைவுக்கு வந்தன.

இந்தக் குட்டிச்சுவர் மேல் நின்று கூவினால் ரொம்ப தொலைவு கேட்கும்னு கழுதையார் சொன்னதைக் கேட்டு கூவியது தப்பாப் போச்சு. இப்ப எல்லோரும் என்னை சுவர்க் கோழிங்க றாங்க.....!



''ஞானம், அந்த ரெண்டு பேரும் சிமெண்ட் பெஞ்சு அடியில் தேடியது இந்த ஒரு பக்கம் அச்சிட்ட நூறு ரூபாய் தாளைத்தான் என்று நினைக்கிறேன். நான் நினைப்பது உண்மையாக இருந்தால், அந்த ரெண்டு பேரும் கள்ள நோட்டுக் கும்பலைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். என் குருநாதர் வெள்ளியங்கிரி சாருடன் நேற்றிரவு கள்ள நோட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். 'எந்தச் சிக்கலுக்கும் ஒரு முனை தெரியும். அந்த முனை கிடைத்து விட்டால் எப்படியும் சிக்கலை அவிழ்த்து விடலாம்' என்று சொன்னார். இந்த ரெண்டு பேர்தான் அந்த முனை. இவர்களைக் கண்டுபிடித்தால், இவர்கள் கள்ள நோட்டுக் கும்பல் இருக்கும் இடத்துக்கு வழிகாட்டி விடுவார்கள்.''

''உண்மைதான். நாம் முயன்று அவர்களைக் கண்டுபிடிப்பதை விட, போலீஸிடம் சொல்லி விட்டால் அவர்கள் கண்டுபிடிப்பார்களே?''

''சொல்லலாம். ஆனால் அதிசயப் புருவம் கொண்ட இருவர்தான் இந்த ஒரு பக்க நோட்டைப் போட்டவர்கள் என்று உறுதியாகத் தெரியாதே. ஒரு வேளை அவர்கள் பர்ஸ், பேனா என்று வேறு எதையாவது தேடியிருக்கலாம். ஆனால், இந்த நோட்டு அவர்களுடையதுதானா என்று தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்த பிறகு போலீஸில் சொல்லிக் கொள்ளலாம்.''

ஞானம் பரதன் சொன்னதை ஒப்புக் கொண்டான்.

அதிசயப் புருவத்தாரை எப்படிக் கண்டுபிடிப்பது?

பரதனும் ஞானமும் அவர்கள் வகுப்பிலே இருந்த மாணவர்களில் அவர்களுக்கு நெருக்கமான பத்துப் பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடம் ஒரு பக்க நோட்டைப் பற்றியும் அதிசயப் புருவத்தினர் பற்றியும் கூறினர்! ''நீங்கள் பள்ளி நேரம் தவிர மற்ற நேரங்களில் தேடுங்கள். அதிசயப் புருவத்தினரை எங்கேயாவது பார்த்தால், பள்ளி நேரமாயிருந்தால் பள்ளி ஆபீசுக்குப் போன் செய்து பரதனைக் கூப்பிட்டுச் சொல்லுங்கள்.

மற்ற நேரமாயிருந்தால் என் வீட்டுக்குப் போன் செய்து சொல்லுங்கள். உடனே நாங்கள் அங்கே வருகிறோம்'' என்றான் ஞானம்.

''பள்ளி நேரம் தவிர என்று சொல்லி விட்டு, பள்ளிக்குப் போன் செய்யச் சொல்கிறாயே?'' - ஒருவன் கேட்டான்.

''பத்துப் பேரில் ஒரு நாளைக்கு இரண்டு பேர் வீதம் லீவு போட்டு விட்டு, முழு நாளும் இந்தத் தேடல் பணியை மேற்கொள்ள வேண்டும். அப் போது பள்ளி நேரத்தில் அவர்களைப் பார்க்க நேரலாம். அப்படிப் பார்த்தால் பள்ளிக்குப் போன் செய்யுங்கள்'' என்று விளக்கம் தந்தான், ஞானம்.

''நண்பர்களே உங்கள் பத்துப் பேருடன் எங்கள் இருவரையும் சேர்த் தால் பன்னிரெண்டு பேர். நாம் பன்னி ரண்டு பேரும் இன்று ஒரு கூட்டணி அமைத்துள்ளோம். சமூக விரோதி யைக் கண்டுபிடிக்கும் ஒப்பற்ற பணியை மேற் கொண்டுள்ளோம். அதனால் பயப்படாமல், பதட்டமடை யாமல், ஓய்ந்து போகாமல், உற்சாகத் தோடு தேடுங் கள்'' என்றான், பரதன்.


அன்றே தேடல் தொடங்கியது.

பள்ளி அலுவலகத்தில் பரதன் தனக் கொரு முக்கியமான போன் வரும் என்றும், வந்தால் தன்னை அழைக்கு மாறும் வேண்டினான். பரதனிடம் மதிப்புக் கொண்ட அலுவலகத்தினர் அப்படியே செய்வதாக வாக்குறுதி அளித்தனர்.


பள்ளி நேரம் போக மற்ற நேரத்தில் பரதன் ஞானம் வீட்டிலேயே போன் அருகில் இருந்தான். அதிசயப் புருவத் தினரை நகரத்தில் ஏதோ ஒரு இடத்தில் கண்டுபிடித்த செய்தி வரும் என்று பரதன் காத்திருந்தான்.

மூன்றாம் நாள் பிற்பகல். பரதன் வகுப்பில் இருக்கும் போது அந்தச் செய்தி வந்தது.


(தொடரும்)



''ஏய் வௌவால் பசங்களா, தொங்கறதுக்கு வேறே இடமே கிடைக்கலியா....?''




''யாரது..., நீர் யானையாரா...?''
''நான் யானையார் இல்லை. நீர்தான் யானையார்... நான் நீர்யானையாராக்கும்...!''



''ஸ்கூல்ல இன்னிக்கு என்ன சொல்லித் தந்தாங்க...?''
''பா.... பா.... ப்ளாக் ஷிப்....''

பிருந்தாவனக் கவியரங்கம்






மிளகாய்

குண்டு குண்டு மிளகாய்
கூர்மை மூக்கு மிளகாய்
சின்னச் சின்ன விதைகள்
சீராய் நிறைந்த மிளகாய்

அவியல் துவையல் சாம்பார்
அனைத்தும் மணக்க வைக்கும்
தவறிக் கடித்து விட்டால்
தவிக்க வைக்கும் மிளகாய்!

- வே. தாமரைச் செல்வன்,
வடமாதிமங்கலம்.





கடிகாரம்

புத்தம் புதிய கடிகாரம்
புதுமை யான கடிகாரம்
நித்தம் உதவும் கடிகாரம்
நெஞ்சை அள்ளும் கடிகாரம்

நேரம் காட்டும் கடிகாரம்
நேரத்தில் எழுப்பும் கடிகாரம்
யாரும் அணியும் கடிகாரம்
அழகில் உயர்ந்த கடிகாரம்

சுவரில் மாட்டும் கடிகாரம்
சுந்தர மான கடிகாரம்
எவரும் பார்க்கும் கடிகாரம்
ஏற்றம் பெற்ற கடிகாரம்

-வே .பாரதி, வடமாதிமங்கலம்.





பொங்கல்

புதிய ஆண்டு பிறந்தது
பொங்கல் பண்டிகை வந்தது
கட்டுக் கட்டாய் கரும்புகள்
கடையில் வந்து குவிந்தது

மஞ்சள் இஞ்சி வெற்றிலை
மணக்கும் சந்தனம் பாக்குடன்
மங்கலப் பொருள்கள் கூடவே
மாவிலைத் தோரணம் வந்தது

பொங்கல் பொங்கி வழிந்தது
புதிய மணம் எழுந்தது
எங்கும் மகிழ்ச்சி பொங்கிட
எழுந்தோம் சாமி கும்பிட!

- கே. எஸ். கோகுலன்,
சென்னை - 91

மகிழ்ச்சி!

எங்கள் வீட்டுச் செடியைப் பார்
செடியில் பூக்கும் மலரைப் பார்
மலரின் வண்ண அழகைப்பார்
அழகும் மணமும் குலுங்குதுபார்

வண்டுகள் மலரைச் சுற்றுதுபார்
சுற்றித் தேனைக் குடிக்குதுபார்
குதித்து வட்டம் போடுதுபார்
வட்டம் போடும் அழகைப்பார்

பூக்கள் அழகாய்ச் சிரிக்குதுபார்
சிரித்துச் சிரித்து மயக்குதுபார்
மயக்கி மனதை அள்ளுதுபார்
மனதில் மகிழ்ச்சி நிறையுதுபார்!

- நெ. பார்த்திபன்,
அச்சிறுபாக்கம்.





தாத்தா

தாத்தா நல்ல தாத்தா
தாடி உள்ள தாத்தா
சின்னப் பிள்ளை போலே
சிரித்துப் பேசும் தாத்தா

நித்தம் நித்தம் நிறைய
நீதிக் கதைகள் சொல்வார்
புதுமை மிக்க புதிர்கள்
போட்டு அயர வைப்பார்

- இரா. இரத்தினவல்லி,
மதுரை.

நலமாக்கும் பிள்ளையார்


ஆற்றோரம் அமர்ந்திருக்கும்
பிள்ளையாராம்
யானைமுகம் கொண்டிருக்கும்
பிள்ளையாராம்
வெற்றிபெற அருள்கரக்கும்
பிள்ளையாராம்
வினைதீர வரமளிக்கும் பிள்ளையாராம்!

மலைக்கோட்டை மீதுறையும்
பிள்ளையாராம்
முந்திவந்து அருள்புரியும் பிள்ளையாராம்
கலைகளைக் காத்தருளும்
பிள்ளையாராம்
கண்கண்ட தெய்வமாகும் பிள்ளையாராம்

பிணிதீர வரமளிக்கும் பிள்ளையாராம்
போற்றினோர் குறைதீர்க்கும்
பிள்ளையாராம்
பணிந்தோர்க்கு நலமளிக்கும்
பிள்ளையாராம்
புத்தாண்டை நலமாக்கும்
பிள்ளையாராம்!

- சு. துர்க்காதேவி,
சோழன்மாளிகை.

பிருந்தாவனக் கவியரங்கம்








பணியாரம்

பணியாரம் இது பணியாரம்
பாட்டி சுட்ட பணியாரம்
குண்டு குண்டாய் வார்த்து
குழியில் சுட்ட பணியாரம்

பச்ச அரிசிப் பணியாரம்
பசியை ஆற்றும் பணியாரம்
பச்சைக் குழந்தை பெரியோரும்
பலரும் விரும்பும் பணியாரம்

செட்டி நாட்டார் செய்கின்ற
சிறப்பு மிக்க பணியாரம்
சுட்டு சுட்டுத் தந்திட்டால்
சுகமாய் தின்பேன் தந்திடுங்க

- சி. ராமையா, வேலூர்.





எறும்பு

எறும்பு நல்ல எறும்பு
எங்கும் நிறைந்த எறும்பு
சுறு சுறுப்பாய் ஓடி
சேமித் திடும் எறும்பு

ஒற்றுமை யாய் இருந்து
எதையும் உண்ணும் எறும்பு
கற்றுக் கொண்டு வாழ
குணம் நிறைந்த எறும்பு

- ஏ. கே. ஆனந்தப்பிரியா.





எங்கள் நாடு


எங்கள் நாட்டைப் பாருங்கள்
எத்தனை வேற்றுமை காணுங்கள்
எங்கள் ஒற்றுமை இதனாலே
என்றும் சிதையா துணருங்கள்

சாதி பேதம் இங்குண்டு
சண்டை போடும் குணமுண்டு
மொழியால் நாங்கள் மோதிடுவோம்
மூர்க்கர் என்றே காட்டிடுவோம்

இத்தனை வேற்றுமை இருந்தாலும்
இந்தியர் என்பதை மறவாமே!
எத்தனை பிணக்குகள் இருந்தாலும்.
எதையும் பேசித் தீர்த்திடுவோம்!

- மா. ஆசியாதாரா, லால்குடி.





பிருந்தாவனக் கவியரங்கம்





தவளையாரே...!

தவளை என்னும் கலைஞரே
தம்பியின் வணக்கம் கேளுங்க
எவரும் பாடாப் பாட்டினையே
எங்கே நீரும் கற்றீரோ?

தர்பார் ராகம் அறிவீரா?
தபேலா தாளம் புரிந்திடுமோ?
மர்மம் உங்கள் பாட்டையா
மயங்கிப் போறோம் கேட்டையா!

உங்கள் குரலைக் கேட்டதுமே
உழவர் முகமும் மலருதையா.
உங்கள் வருகை என்றாலே
உயர்ந்த மழையாம் அறிவீரோ?

புதிய மொட்டாய் போட்டிடுங்க
பாடிக் காட்ட வந்திடுங்க
எதுக்கும் கொஞ்சம் பஞ்சினையே
எடுத்து அடைச்சேன் காதினிலே!

– எ. எல். சண்முகம், கண்டனூர்.





கொக்குப் பாட்டி!

கொக்குப் பாட்டி வாவா
குழந்தை அழைத்தேன் வாவா
சாக்குப் போக்கு எதுவும்
சொல்லி டாமல் வாவா!

மீனைத் தேடி வானில்
மீண்டும் சுற்றிச் சுற்றி
ஏனோ நீயும் பாட்டி
ஏங்கிப் பறந்து களைத்தாய்!

சுற்றி அலைய வேண்டாம்
சிறுவன் சொல்லைக் கேட்பாய்
சற்று இங்கே வருவாய்
சிறிது டிபன் உண்பாய்!

– மு. பி. சசிமோ, மாத்தூர்.

விஞ்ஞானம்

விஞ்ஞானம் என்ன விஞ்ஞானம்
வீணுக்கு செலவு விஞ்ஞானம்
என்றே அஞ்ஞானி கேட்டிடுறார்
அதற்கே பதிலிது கேளுங்கள்.

நோயின் காரணம் கண்டறிந்து
நலமாய் வாழ்ந்திட உதவிடுது
பாய்ந்து விரையும் வாகனங்கள்
பலபல கண்டது விஞ்ஞானம்


திரைப்படம் வானொலி தொலைபேசி
தினமும் மகிழ்ந்திடும் தொலைக்காட்சி
யாரும் நெருங்காச் சந்திரனை
அழகாய் தொட்டது விஞ்ஞானம்

தொலைவைக் குறைத்தது விஞ்ஞானம்
தொல்லைகள் குறைத்தது விஞ்ஞானம்
மலைக்க வைக்கும் நன்மைகளை
மக்களுக் குதவுது விஞ்ஞானம்!

– ஆர். முகமது மியான்தாத்,
மதுரை – 16.



பிருந்தாவனக் கவியரங்கம்


சிரிப்...
யானைக்கு அல்வா கொடுக்கச் சொன்னா... நீயே சாப்பிடறியே?
யானைக்கு சர்க்கரை வியாதிங்க!
ஏ.ஹரிகிருஷ்ணன்
உன்னுடைய கடிகாரம் சரியான நேரத்தைக் காட்டுமா?
அது காட்டாது. நாம் தான் பார்க்க வேண்டும்!
செந்தில்குமார்
என்ன சார் ஐஸ்கிரீம் விலையைக் கேட்டுட்டு வாங்காம போறீங்க?
விலையைக் கேட்டதுமே குளிர் எடுத்துட்டது!
ஜெலியா
ரௌடி ஒருவர் ஓட்டல் நடத்தினால் கடையில் என்ன போர்டு எழுதி வச்சிருப்பார்?
கடன் எலும்பை முறிக்கும்
ஏ.ஹரிகிருஷ்ணன்
ஆனாலும் உங்க மகனுக்குக் கொழுப்பு அதிகம்! வயிற்று வலிக்கு 'மிக்ஸர்' தரட்டுமான்னு கேட்டா மிக்ஸர் வேண்டாம் 'பகோடா' குடுங்கங்கறான்!
அருகாவூர் ரவிசங்கர்
செ

அண்ணனா அவன்...?

ரமேஷ்

கணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது. பாலாஜியின் மனம் பாடத்தில் செல்லவில்லை.

காலையில் நடந்ததை எண்ணிய போதே மனம் எரிந்தது. அண்ணனா அவன்?

காலையில் நடந்தது இதுதான். பாலாஜி ஹோம்வொர்க்கைச் செய்து முடித்து விட்டுக் குளிக்கக் கிளம்பினான். அந்தப் பரபரப்பான நேரத்தில் அவனுடைய அண்ணன் ஹரி வந்தான்.

''டேய் பாலாஜி. கடைக்குப் போயி இங்க் வாங்கிட்டு வாடா'' என்று அதிகாரமாகக் கூறினான். சாதாரணமாக இருந்தால் பாலாஜி செய்யக்கூடியவன்தான். பெரும்பாலும் அவன்தான் இங்க் வாங்கிக் கொண்டு வருவான். ஆனால் அன்று அவனால் போக முடியவில்லை. பள்ளியில் அன்று செய்தி வாசிக்கும் முறை அவனுடையது. பள்ளியில் போய், நூலகத்தில் செய்தித்தாளைப் படித்து, குறிப்பெடுத்து எழுதிக் கொள்ள வேண்டும். சற்று முன்னதாகப் போனால்தான் முடியும். அதனால், ''எனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு அண்ணா. இப்போ கடைக்குப் போக முடியாது'' என்று சொல்லி விட்டான்.

''முடியாதுன்னா சொல்றே? நிஜமா வேவா முடியாது?'' என்று கோபத்துடன் குதித்தான் ஹரி.

''ஆமாண்ணா. இன்னிக்கு செய்தி வாசிப்பு என்னுடைய முறை. சீக்கிரமா போனால்தான் முடியும்,'' என்றான் பாலாஜி பணிவாக.

''எனக்கு அதைப் பத்தி அக்கறை இல்லே. இனிமே எதுக்காகவாவது என்கிட்டே வந்தே... நடக்கிற சமாசாரமே வேறதான்'' என்று காட்டுக் கத்தலாகக் கத்திய ஹரி, சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியே போனான். போன சுருக்கில் 'இங்க்' வாங்கிக் கொண்டு வந்தான்.

பாலாஜி அவசரம் அவசரமாகக் குளித்து விட்டுக் கிளம்பினான். புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்ட போதுதான், அன்று ஆங்கிலக் கட்டுரை வகுப்பு உள்ளது நினைவுக்கு வந்தது. அந்த வகுப்பு ஆசிரியர் மைக்கேல் கண்டிப்பானவர். கட்டுரையை 'இங்க்' பேனாவில்தான் எழுத வேண்டும்.

பாலாஜி பேனாவைத் திறந்து பார்த்தான். பொட்டு இங்க் கூட இல்லை! இங்க் பாட்டில் நிறைய அண்ணன் ஹரி வாங்கிக் கொண்டு வந்த இங்க் அவனைப் பார்த்துச் சிரித்தது. பாலாஜி, பாட்டிலைத் திறந்து தன் பேனாவுக்கு இங்க் போட்டுக் கொண்டான்.

முடிக்கும் போது ஹரி வந்து விட்டான்.

''ஏண்டா நான் வாங்கிண்டு வந்த இங்கைப் போட்டுண்டே?''



''சாதாரணமா நான்தானே இங்க் வாங்கிக்கிட்டு வருவேன்...? அதைத் தானே இத்தனை நாளும் நீ போட்டுக் கிட்டே? இன்னிக்கு ஒருநாள், ஒரு தடவை நீ வாங்கிட்டு வந்ததை நான் போட்டுக்கக் கூடாதா?''

பாலாஜி நியாயத்தைத்தான் கேட்டான். ஆனால் அதைக் கேட்கக் கூடிய மனநிலையில் ஹரி இல்லை. அவனுக்கு முன் கோபம் பயங்கரம்.

''நான் வாங்கிக்கிட்டு வந்த இங்க்கைப் போட்டுக்கிட்டதும் இல்லாம, என்னை எதிர்த்து வேறயா பேசறே?'' - ஹரி பேயறைவது போல் தம்பியைக் கண்மண் தெரியாது அடித்து விட்டான். பாலாஜியின் முகம் வீங்கிப் போய் விட்டது.

யாரோ உறவினர் இறந்து விட்டார் என்று அம்மாவும் அப்பாவும் வெளியூர் போயிருந்தார்கள். நாளை மாலைதான் வருவார்கள்.

அண்ணனின் அடியைந் தாங்க முடியாது பாலாஜி வெளியே ஓடினான். அவன் முகத்தைப் பார்த்து விட்டு எல்லோரும் பள்ளியில் என்னவாயிற்று என்று கேட்டார்கள். என்னவோ பொய் சொல்லி மழுப்பினான். வகுப்பில் நடந்த பாடத்தை அவனால் கவனிக்க முடியவில்லை.

தவறு செய்தால் தண்டனை நியாயமே. அப்படியே இருந்தாலும் கூட இப்படியா மாட்டை அடிப்பது போல் அடிப்பார்கள்? அண்ணனா அவன்? தான் பெரியவனாகி விட்டதைப் போலவும், அண்ணன் சின்னவனாகி, தான் அவனைப் போட்டு அடிப்பதைப் போலவும் ஒரு கற்பனைக் காட்சி கண்டான் பாலாஜி. அவனுக்கு அது மிகவும் பிடித்திருந்தது.

பிற்பகல். இடைவேளை மணி அடித்தது. எல்லோரும் டிபன் பாக்சுடன் ஓடினார்கள். பாலாஜி யாரிடமும் பேசவோ, தன் துயரச் சுமையைப் பகிர்ந்து கொள்ளவோ விரும்பவில்லை. பள்ளியை அடுத்திருந்த மைதானத்தில் தனியாக இருந்த ஓர் அரச மரத்தடியில் போய்ச் சாய்ந்து கொண்டான்.

காலையில் இருந்து சாப்பிடாததால் தலை சுற்றியது. வயிற்றை என்னவோ செய்தது.

அவன் நண்பன் சங்கரப்பன் டிபன் பாத்திரத்துடன் அவனைத் தேடிக் கொண்டு வந்தான்.

''என்னடா எப்படியோ இருக்கே!'' என்று கேட்ட சங்கரப்பன், அவன் பசி மயக்கத்தில் இருப்பதை உணர்ந்து கொண்டான். ''எனக்கு வயிறை என்னவோ பண்ணுதுடா. நீயாவது வீணாக்காது சாப்பிடு'' என்று கட்டாயப் படுத்திச் சாப்பிட வைத்தான்.

சாப்பிட்டுத் தெம்பு வந்ததும், தன் நிலையை அடைந்த பாலாஜி, நடந்ததையெல்லாம் கூறினான்.

''சங்கரப்பா, எங்கண்ணன் என்னை மனுஷனாகக் கூட மதிக்கலே. இதை நான் சும்மா விடப் போறதில்லே. அவனை என்னவாவது பண்ணியே ஆகணும்'' என்று பல்லைக் கடித்த பாலாஜியை சங்கரப்பன் அமைதியாகப் பார்த்தான்.

''நீயே ஒரு வழி சொல்லு...?'' என்றான் பாலாஜி.

''பாலா, நீ நாயாக இருக்க விரும்பறியா, இல்லே யானையா இருக்க விரும்பறியா?''

புரியாது அவனை நோக்கினான் பாலாஜி.

''நாய்க்கு ஒருவேளை சோறு போட்டால் கூடப் போதும். அப்புறம் அதை வெட்டினால் கூட வாலைக் குழைத்துக் கொண்டுதான் காலைச் சுற்றும். பழிவாங்கவே எண்ணாது. ஆனால் யானை அப்படி இல்லை. அதுக்கு யாராவது தீமை பண்ணிட்டா போச்சு. மனசு

''நரிக்கு மிகவும் பிடித்தமான ஊர் எது?''
'' 'கோழி'க்கோடு''!
- செ. மா. சாந்தி, கறம்பக்குடி.





லயே வைச்சிருக்கும். சமயம் பார்த்துப் பழிவாங்கிடும்.''

பாலாஜி யோசித்தான்.

''நான் யானையா இருக்க விரும்பறேனோ இல்லையோ, நிச்சயம் நாயா இருக்க விரும்பலே'' என்றான் உறுதியாக.

''பாலாஜி, ஒரு தப்பை இன்னொரு தப்பால் என்றைக்குமே சரிபண்ண முடியாது. அது ரெண்டு தப்பாயிடும்.''

''இந்தக் கதையெல்லாம் வேண்டாம். என்னை மாட்டடி அடித்த அண்ணனை நான் ஏதாவது பண்ணியே ஆக வேண்டும்'' என்று கொதித்தான் பாலாஜி.

அவன் இருக்கும் மனநிலையில், நல்ல உபதேசங்கள் எதுவும் அவன் காதில் ஏறாது என்பதை சங்கரப்பன் நன்கு உணர்ந்து கொண்டு விட்டான். அவனை அவன் வழியிலேயே விட்டுப் பிடிப்பதுதான் புத்திசாலித்தனம் என்ற முடிவுக்கு வந்தான்.

''சபாஷ், நல்ல முடிவு. அண்ணனாவது, தம்பியாவது. பழிக்குப் பழி வாங்கி நம்ம ஆத்திரத்தைத் தீர்த்துப் போம். அடிக்கு அடி'' - சங்கரப்பன் சொல்லிக் கொண்டே எழுந்தான்.

''நீ வகுப்புக்கு வரலையா?''

''நான் இப்போ வகுப்புக்கு வரும் மனநிலையில் இல்லை. எங்க அண்ணனை எப்படிப் பழிவாங்கலாம்னு யோசித்து ஒரு முடிவுக்கு வரப் போறேன். நீ போ.''

சங்கரப்பன் அவனைத் தனியே சிந்திக்க வாய்ப்பளித்து விட்டு வகுப்புக்கு விரைந்தான்.

வயிற்றைக் காயப் போட்டு சாப்பிட்டதால் பாலாஜிக்கு அசதியாக இருந்தது. அப்படியே அந்த மரத்தடியில் படுத்தான். தூங்கி விட்டான்.

தூக்கத்தில் ஓர் அருமையான கனவு. பாலாஜி ஒரு யானையாக மாறினான்.

அண்ணன் ஹரி மாவுத்தனாகிறான். ஹரி, கீழே விழுந்து விட்ட ஒரு மாம்பழத்தை எடுத்துத் தரும்படி பாலாஜி யானைக்கு உத்தரவிடுகிறான். பாலாஜி மறுக்க, ஹரி மாவுத்தன் தன் கையில் இருந்த பிரம்பால் அவன் துதிக்கையில் அடிக்க, ஆத்திரம் கொண்ட பாலாஜி யானை, கதறக்கதற ஹரியை அப்படியே அலக்காகத் தூக்கி வானத்தில் சுழற்றி எறிய....

அதற்கு மேல் கனவு காண மனவலிமை இல்லாது பாலாஜி வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தான். அவனுக்கருகே உண்மையாகவே ஓர் அரசமரக் கிளை விழுந்து கிடந்தது. மரத்தின் மேலிருந்து ஒருவன் கையில் வெட்டரிவாளுடன் இறங்கினான்.

''பயந்துட்டியா தம்பி? பீர்க்கங் கொடிக்குப் பந்தல் போட கணக்குப் பிள்ளைதான் ஒரு அரசுக் கிளை வெட்டி வரச் சொன்னாரு'' - சொல்லிக் கொண்டே அந்த ஆள் துண்டை விரித்துப் படுத்தான். உறங்கிப் போனான்.

மனதுக்கு ஓய்வு கிடைத்திருந்ததால் பாலாஜி நல்ல மனநிலையில் இருந்தான். அறிவு தெளிந்து நன்கு சிந்திக்கக் கூடிய நிலையில் அவன் இருந்தான். கீழே வெட்டப்பட்டுக் கிடந்த கிளையையும் துண்டை விரித்து மர நிழலில் தூங்கிக் கொண்டிருந்த அந்த ஆளையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் அறிவில் ஏதோ ஒரு மின்னல்.

"எங்க வீட்டு மாடியிலே இருந்து பார்த்தா ரயில் போறது தெரியுமே...!"

"இதென்ன பிரமாதம்! எங்க வீட்டு மாடியிலிருந்து பார்த்தா 'ஏரோப்ளேன்' போறதே தெரியுமே...!"

- அன்புராகவி கோசலா,
கடையம்.



மரம் ஓர் ஓரறிவு உயிர். அது தன்னை வெட்டியவனுக்கும் கூட நிழல் தருகிறது. பழிக்குப் பழி வாங்கவில்லை. ஆறறிவு படைத்த தான் மட்டும் அண்ணனைப் பழிவாங்க எண்ணுவது எத்தனை கீழ்த்தரமான எண்ணம்!

''பாலாஜி...'' என்று யாரோ அழைக்கும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். ஹரிதான். கையில் ஒரு டிபன் பாக்ஸ்ஸோடு.

''மாமி வீட்டுக்கு சாப்பிடப் போகலையா? காலையில் இருந்து பட்டினியா? நான்தான் முன்கோபக்காரன்னு உனக்குத் தெரியுமோன்னோ? என்மேல் கோபப்பட்டுக்கிட்டு பட்டினி கிடக்கலாமா? உன்னைப் பேயறை அறைந்த பிறகுதான் எனக்கு மனம் கலங்கியது. நீ ஓடிப் போகாம இருந்திருந்தா, நானே உன்னிடம் மன்னிப்புக் கேட்டிருப்பேன்டா. எனக்குத் தண்டனையா நானே சூடு வைச்சுக்கிட்டேன். இதோ பார்...''

ஹரியின் இடது கணுக்காலில் சூடு கோல் கொப்பளித்திருந்தது. பாலாஜி பதறினான்.

''மாமி வீட்டுக்குப் போனப்போ, நீ அங்கே சாப்பிட வரலைன்னாங்க. எனக்கும் சாப்பிடப் பிடிக்கலே. இப்போ பரீட்சை முடிந்து வந்து கேட்டா இன்னமும் வரலேன்னாங்க. உன் டிபன் பாக்சை எடுத்துக்கிட்டு உன் வகுப்புக்குப் போய் விசாரித்தேன். உன் நண்பன் சங்கரப்பன்தான் சொன்னான். வந்தேன்.''

ஹரி டிபன் பாக்சைத் திறந்தான். ''பாலாஜி என்னை மன்னிச்சிடுடா. என் முன்கோபம் உனக்குப் புதுசு இல்லையே'' - சொல்லிக் கொண்டே சாதத்தை எடுத்துத் தம்பியின் வாயில் ஊட்டினான் அண்ணன்.

பாலாஜி நெகிழ்ந்து போனான்! இப்படிப்பட்ட அண்ணனையா அவன் தண்டிக்க வழி தேடினான்! ஆத்திரத்தில் எத்தனை பெரிய தவறு செய்ய இருந்திருக்கிறான் அவன்!

''ஒரு தவறைத் திருத்த இன்னொரு தவறு செய்வது சரியல்ல. அது இரண்டு தவறாகி விடும்'' என்று சங்கரப்பன் சொன்னது எத்தனை உண்மை என்று எண்ணி வியந்தான் பாலாஜி.

பணம்தான் வேண்டும்



ஓர் ஊரில் சரவணன், அறவணன் என்று இரண்டு நண்பர்கள் வாழ்ந்து வந்தனர். இருவரும் ஒருநாள் பாழடைந்த கோவிலில் சென்று அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது கோவிலின் உட்புறத்திலிருந்து ''நண்பர்களே, நண்பர்களே!'' என்று மர்மக் குரல் ஒன்று எழுந்தது. குரலுக்குச் சொந்தமான ஆள் யாரும் தென்படவில்லை. இது பேயின் சேட்டையாக இருக்கக்கூடும் என அஞ்சி சரவணன் ஒரே ஓட்டமாகக் கோவிலை விட்டிறங்கி ஓடி விட்டான். அறவணன் சற்றுத் துணிச்சலானவன். குரலைக் கண்டு அஞ்சாமல் இருந்த இடத்திலேயே இருந்தான்.

''நண்பனே, நண்பனே'' என்று மீண்டும் குரல் எழுந்தது.

''நண்பன் என்று என்னை உரிமையோடு அழைப்பது யாரோ?'' என்று எதிர்க்குரல் கொடுத்தான் அறவணன்.

''நான் இந்தக் கோவிலில் குடியிருக்கும் தேவதை. உனக்கு என்ன வேண்டும் கேள். அதைத் தவறாமல் கிடைக்கச் செய்கிறேன்'' என்று குரல் கூறிற்று.

என்ன கேட்பது என்று அறவணன் யோசித்தான்.

''பொன்னா? பொருளா? கல்வியா, அறிவா? எது உனக்கு வேண்டும்?'' என்று தேவதையின் குரல் மீண்டும் கேட்டது.

''தேவதையே! ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் செல்வத்தால் மனிதனுக்கு ஒரு பயனும் இருப்பதில்லை. அதனால், செல்வத்தைக் குவித்துக் கொண்டு சோம்பேறி வாழ்க்கை நடத்த நான் விரும்பவில்லை. கல்வியும் அறிவும் வளர வளர அது மனிதனுடைய ஆத்மா, நிம்மதி பெற உதவுகிறது. கல்விக்கு எல்லையே இல்லை. அதனால், நான் கல்வியும் அறிவும் பெறுவதற்கே உதவுவாய்'' என்று அறவணன் வேண்டினான்.

''இந்த மோதிரத்தை வாரத்திற்கு ஒரு தடவை பூஜை செய்து உள்ளங்கையில் வைத்துத் தேய்த்தால் நீ விரும்புவது கிடைக்கும்'' என்று தேவதையின் குரல் கூறிற்று.

தொடர்ந்து, ''ஒரே நிபந்தனை மட்டும் உண்டு. இந்த மோதிரத்தின் உதவியால் என்ன பெற்றாலும், அதில் பாதிக்கு மேல் தருமம் செய்து விட வேண்டும். தவறினால் மோதிரத்தின்



சக்தி மறைந்து விடும்'' என்று தேவதை எச்சரித்தது.

அறவணன் மோதிரத்துடன் வீடு திரும்பினான்.

அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சரவணன், பாழடைந்த கோவிலில் நடந்த விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

மறுநாள் சரவணன் தனியாக அந்தப் பாழடைந்த கோவிலுக்குச் சென்றான்.

''நண்பனே, நண்பனே!'' என்று தேவதை அழைப்பது கேட்டது.

சரவணன் பதில் குரல் கொடுத்தான்.

''உனக்கு என்ன வேண்டும்? பொன்னா? பொருளா? கல்வியா? அறிவா?'' என்று தேவதை கேட்டது.

''கல்வியாலும், அறிவாலும் மனிதனுக்கு என்ன பிரயோசனம்? வாழ்க்கையை அனுபவிக்க, பொன்னும் பொருளும்தான் தேவை. அதையே எனக்குக் கொடு'' என்று சரவணன் கேட்டான்.

அறவணனுக்கு எச்சரித்தது போல, எச்சரித்து விட்டு தேவதை ஒரு மோதிரத்தை அவன் மடியில் போட்டது.

சரவணன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் வீடு வந்து சேர்ந்தான்.

அறவணன் அடிக்கடி மோதிரத்தின் உதவியால் பல மொழிகளையும், கலைகளையும் கற்று வல்லவன் ஆனான். கல்விச் சிறப்பின் காரணமாக அவனுக்கு உலகப் புகழ் ஏற்பட்டது.

தேவதையின் நிபந்தனைப்படி அறவணன் தான் கற்றுக் கொண்ட கல்வியையும், கலைகளையும் மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்தான். இதனால் அவன் அறிவு மேலும் விருத்தியாயிற்று.

சரவணன் நினைத்தபோதெல்லாம் பொன்னும் பொருளுமாகக் குவித்துக் கொண்டிருந்தான். ஆனால், கிடைத்ததில் பாதியைப் பிறருக்குக் கொடுக்க வேண்டியிருந்ததுதான் அவனுக்கு மனச் சங்கடத்தைக் கொடுத்தது!

மிகக் குறுகிய காலத்தில் சரவணன் கோடீஸ்வரனாகி விட்டான். மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் கட்டினான். வண்டி, வாகனங்களும் அவனிடம் பெருகின.

செல்வம் பெருகப் பெருக அவனுக்குப் பேராசையும் பெருகியது. தான் அடையும் செல்வத்தில் பாதியைப் பிறருக்குத் தருமம் செய்ய அவன் மனம் ஒப்பவில்லை.

''மோதிரத்தின் உதவியால் பெறுகின்ற செல்வத்தில் பாதியைப் பிறருக்கு தராது இருந்து விட்டால், தேவதைக்கு எப்படித் தெரிந்து விடப் போகிறது?'' என்று அசட்டுத்தனமாக எண்ணினான்.

ஒரு தடவை மோதிரத்தின் உதவியால் பெருஞ்செல்வத்தைப் பெற்ற சமயம் வேண்டுமென்றே அதில் பாதியை தானம் செய்யாமல் இருந்து விட்டான்.

அடுத்த வினாடியே அவன் கையில் அணிந்திருந்த மோதிரம் மாயமாக மறைந்து விட்டது. இவ்வளவு காலமாகச் சேர்த்துக் குவித்து வைத்திருந்த செல்வமும் மாயமாக மறைந்து விட்டது.

''ஐயோ, மதிமோசம் போய் விட்டோமே!'' என்று அடித்துக் கொண்டு பாழடைந்த கோவிலுக்கு ஓடினான். ''தேவதையே...! தேவதையே...! என்று அலறினான். அவன் குரல்தான் திரும்பத் திரும்ப ஒலித்ததே தவிர தேவதை பதிலளிக்கவில்லை!

அத்தனை காலமாகச் சேர்த்து வைத்திருந்த பெருஞ் செல்வம் ஒரே நொடியில் மறைந்து விட்ட அதிர்ச்சியில் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது.

– ஏ. முகமது அப்துல்காதர்

வாழ்வோமே!

இன்று செய்து முடித்திட
எண்ணு கின்ற கடமையை
இன்றே செய்து முடித்திட
எண்ண வேண்டும் யாவரும்

நாளை நாளை என்றுநாம்
நாளை உந்தித் தள்ளினால்
நாளை செய்யும் கடமையும்
நமக்கு விட்டுப் போகலாம்

போட்டி போட்டுக் கடமையை
பூர்த்தி செய்யத் தவறினால்
ஊட்டச் சக்தி மிக்கவர்
உயர்வை தட்டிச் செல்லலாம்

சுறுசு றுப்பின் உச்சியை
தொடு வதற்கு எண்ணினால்
விறுவி றுப்பாய் வாழ்விலே
விளங்க வேண்டும் என்றுமே

சோம்பல் என்ற பீடையைத்
துடைப்ப தற்குப் பழகினால்
நாம்உ யர்ந்து வாழ்விலே
நாடு போற்ற வாழலாம்!

-அழகனார்





பிருந்தாவனக்

கதையரங்கம்

பயமே எதிரி

முத்துசாமி அதிகாலையில் தன் வழக்கப்படி, ஊருக்கு முன்பாக இருந்த சோலையில் நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு புதிய மனிதர் ஊருக்குள் நுழைவதைக் கண்டான்.

''யார் நீ?'' என முத்துசாமி கேட்டதற்கு ''நான் துஷ்ட தேவ தூதன்...'' இந்தக் கிராமத்து மக்களில் நூறு பேருக்குக் காலரா நோயைத் தரவே வந்திருக்கிறேன்'' என்றார் புதியவன்.

உடனே முத்துசாமி துஷ்ட தேவ விடம் கெஞ்சிக் கூத்தாடினான்.



''என் கிராமத்து மக்களுக்கு தயவு செய்து எந்தத் தீமையும் செய்யாது போய் விடு'' என்று கைகூப்பி வேண்டினான்.

துஷ்ட தேவன், ''நீ இவ்வளவு வற்புறுத்திக் கேட்பதால் ஒரு சலுகை தருகிறேன். ஆனால், நான் என் கடமையைச் செய்ய வேண்டுமே? உனக்காக வேண்டி பத்து பேருக்கு மட்டும் காலரா தருகிறேன்!'' என்றபடி மறைந்து போனார். ஆனால் அந்த கிராமத்தில் காலரா தாக்கி நூறு பேர் மடிந்து போனார்கள்.

குழப்பமடைந்த முத்துசாமி அடுத்த நாள் அதிகாலையில் துஷ்ட தேவனைக் காத்திருந்து சந்தித்தான்.

''பத்து பேரை மட்டும் தாக்குவேன் என்று சொல்லி விட்டுப் போன நீங்கள் நூறு பேர் உயிரை எடுத்துக் கொண்டு விட்டீர்களே! இது நியாயமா?'' எனக் கேட்டான் முத்துசாமி.

''நான் வார்த்தை மீறவில்லை. பத்து பேருக்கு மட்டுமேதான் காலரா நோயைக் கொடுத்தேன். ஆனால், மீதி தொண்ணூறு பேரும் பயத்தினாலேயே இறந்து போய் விட்டார்கள். நான் என்ன செய்வேன்?'' என்று கேட்டார் துஷ்ட தேவன்.

நோய் வந்து இறப்பவர்களை விட, பயம் காரணமாய் இறப்பவர்களே அதிகம்.

- ஜெயஸ்ரீ ராஜகுமார், மதுரை.

பாசம்

நூறு வயதுக் கிழவரான தந்தையும், அவருடைய எண்பத்திரண்டு வயது மகனும் வயலில் உழுது கொண்டிருந்தனர்.

மகன் வேகமாக உழுத போது, 'கலப்பை' கையோடு வந்து விட்டது. மகாமுன்கோபக்காரரான தந்தை, மகனைக் கீழே தள்ளினார். ஒரு அறை ஓங்கி விட்டார்!

மகன் உடனே, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். தந்தைக்கு ஆச்சரியம்



தாளவில்லை.

''மகனே! நான் அடித்தது மிகவும் வலிக்கிறதா? முன்கோபக்காரனான நான், பலமுறை உன்னைச் சிறு வயதிலிருந்தே அடித்து வந்திருக்கிறேன். நீ ஒருதரம் கூட அழுது நான் பார்த்ததில்லையே!'' என்று வியப்போடு மகனிடம் கேட்டார்.

உடனே, மகன், ''என் அன்புத் தந்தையே! சிறு வயதிலிருந்தே பல முறை என்னை நீங்கள் அடித்திருக்கிறீர்கள். உங்கள் அடி புதிதல்ல. ஒவ்வொரு முறை அடி வாங்கும் போதும் என் உயிரே போவது போல் இதுவரை வலிக்கும். ஆனால், சற்று முன் நீங்கள் அடித்த போது எனக்கு வலியே இல்லையே! உங்கள் உடல்நலம் குறைந்து, அடிக்கக்கூட முடியாது ஆகி விட்டீர்களே என்பதை நினைத்தே நான் அழுதேன்'' என்றான்.

இவனல்லவா உண்மையான மகன் என்று அந்த எண்பத்திரண்டு வயது மகனை அணைத்துக் கொண்டு கண்ணீர் சிந்தினார் நூறு வயதுத் தந்தை!

- ஆர். ஹாஜிராபானு, திடீர்.

தலைகனம்

ஒரு பெரிய ஆஸ்பத்திரியைக் கட்டினார் தருமவான் ஒருவர். யாராவது ஒரு பெரிய பிரமுகரைக் கூப்பிட்டுக் கட்டடத்தைத் திறக்கச் சொல்ல வேண்டும் என்று விரும்பினார். கூப்பிடவும் செய்தார்.

ஆஸ்பத்திரித் திறப்பு விழா பிரமாதமாக நடந்தது. பிரமுகர் தலைக்கனம் அதிகம் உடையவர். அவருக்கு ஆஸ்பத்திரியின் ஒவ்வொரு இடமாகக் காட்டிக் கொண்டே வந்தார் தருமவான். 'இது தான் ஹார்ட் ஆபரேஷன் தியேட்டர்', 'இதுதான் நோயாளிகள் அறை' என்று காட்டி வந்தார். பிரமுகரைச் சுற்றி ஏராளக் கூட்டம். பிரமுகர் பணக்காரராயிற்றே.

மகிழ்ச்சி தாங்கவில்லை பணக்காரருக்கு. அதே சமயம் தலைகனம் வேறு ஏறிற்று. ''எல்லாம் சரிதான்! சவக் கிடங்கு எங்கே கட்டியிருக்கிறீர்கள்'' என்று தானும் எதையாவது கேட்க



வேண்டும் என்கிற மாதிரி பாணியில் கேட்டார்.

தருமவானுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பணக்காரரின் செருக்கை அவர் உணர்ந்து கொண்டார். அவர் அப்படிக் கேட்டதை அபசகுனமாகக் கருதினார். அவருடைய செருக்குக்கு சரியாக மண்டையில் அடிக்க முடிவு செய்தார்.

''ஆமாமாம்! இதுவரை கட்டவில்லை. அதனால் என்ன? நீங்கள் நிற்கும் இடத்திலேயே கட்டினால் ஆயிற்று'' என்றாரே பார்க்கலாம்.

சுற்றியுள்ளவர்கள் சிரிக்க, பிரமுகர் முகம் அசடு வழிந்தது.

- சரோஜா ரங்கநாதன்,
சென்னை - 85.

உதவி

கோடைக் காலத்தில் ஒருநாள் கடுமையான வெயில் காய்ந்தது. வாடிய செடியில் மலர் ஒன்று வதங்கிக் கொண்டிருந்தது.

வானத்தில் ஒரு மேகக்கூட்டம் சென்றது. அதில் ஒரு பகுதி கருத்திருந்தது. மழை தரக்கூடிய கருமேகம் அது.

''மேகமே! மேகமே! நான் மிகவும் துன்பப்படுகிறேன். சில மழைத் துளி



களை எனக்குக் கொடு. அவை எனக்கு நலத்தையும் உயிரையும் தரும்'' என்று கெஞ்சிக் கேட்டது மலர்.

மேகம் அதன் வேண்டுகோளை நிறைவேற்றவில்லை. ''எனக்கு முக்கியமான வேலைகள் இருக்கின்றன. திரும்பி வரும் போது பார்க்கலாம்'' என்று சொல்லி விட்டுப் போனது.

சில மணி நேரத்துக்குப் பின் மேகம் திரும்பி வந்தது. நீர் கேட்ட மலர் வாடி விழுந்து மடிந்து கிடந்தது. ''நேரம் கிடைக்கும்போதே நாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதை அலட்சியப்படுத்தக் கூடாது. பின்னால் பார்க்கலாம் என்று ஒத்திப் போடக் கூடாது'' என்பதை மேகம் உணர்ந்து கொண்டது.

- ஆறுபாதி புகழேந்தி.

இதயம் போல் இருக்கிறது!

சிற்றரசன் ஒருவன் வேட்டையாடி விட்டுத் திரும்புகையில் ஊரில் எல்லையருகே வசித்து வந்த வயதான ஏழை மூதாட்டி ஒருவளைச் சந்திக்க நேரிட்டது. சமைத்து உண்ண விறகு கூடக் கிடைக்காது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள் அவள். காட்டில் அலைந்து சுள்ளி பொறுக்கச் செல்லவும் உடலில் வலுவின்றி துன்பப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டு மனமிரங்கிய மன்னன், அரண்மனை திரும்பியதும் நல்ல விறகாக மூதாட்டிக்கு அனுப்ப உத்தரவிட்டான். விறகு மண்டியிலிருந்து நல்ல அருமையான விறகை எடுத்துப் போன வேலையாள் அதைத் தானே வைத்துக் கொண்டு விட்டு, 'சொதசொத'வென இருந்த ஈரமான மூன்றாந்தர விறகை மூதாட்டி வீட்டில் இறக்கி விட்டுப் போய் விட்டான்.

சில நாட்கள் கழித்து அரசன் மீண்டும் அம் மூதாட்டியைச் சந்தித்தான். 'இப்போது எப்படி இருக்கிறீர்கள்? நான் அனுப்பிய விறகு எப்படி இருந்தது?' என்று ஆவலாகக் கேட்டான் அரசன். ''உங்கள் விறகும் உங்கள் இதயத்தைப் போலவே இருந்ததால் அது எனக்குப் பயன்படவில்லை அரசே!'' என்று மறைமுகமாக மூதாட்டி கூற, அதைச் சரியாகப் புரிந்து கொள்



ளாத அரசன் 'என் இதயமும் விறகைப் போல கரடு முரடானது என்று இந்தப் பொல்லாத திமிர் பிடித்த கிழவி கூறுகிறாள்' என எண்ணிக் கோபம் கொண்டு அவளைச் சிறையிலடைக்க உத்தரவிட்டான். மூதாட்டி சிறையில் வாடலானாள்!

ஊரிலிருந்து திரும்பிய அமைச்சரிடம் இந்தச் சம்பவம் பற்றிக் கூறி பெரிதும் ஆத்திரமடைந்தான் அரசன். 'அரசே, தவறிழைத்து விட்டீர்களே! உங்கள் இதயத்தில் உள்ள ஈரம் விறகிலும் உள்ளது என்று மறைமுகமாக மூதாட்டி உம்மைப் பாராட்டியே கூறியிருக்கிறாள். இடையில் ஏதோ குழப்பம் நடந்திருக்கிறது!' என்று கூறி விளக்கி விசாரணை நடத்தினார் அமைச்சர். உண்மை வெளிவந்தது. தன் தவறுக்கு வருந்தி, மூதாட்டியை விடுதலை செய்து மன்னிப்புக் கேட்டு அவளை அரண்மனையிலேயே வசிக்கச் செய்து போற்றினான் அரசன்!

- ஆர். ரகோத்தமன்,
சென்னை - 33.

பேசாதவர்கள்

ஓர் ஊரில் நான்கு இளைஞர்கள் நண்பர்களாக இருந்தனர். நால்வரும் எப்பொழுதும் தொணதொணவென்று ஓயாமல் பேசிக் கொண்டே இருப்பார்கள். அந்த ஊருக்கு துறவி ஒருவர் வந்தார். நான்கு பேரும் சென்று அவரை வணங்கினார்கள்.

அவர்களில் ஒருவன், ''ஐயா! எங்கள் நான்கு பேரையும் உங்கள் சீடராக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று வேண்டினான்.

''சீடனாக ஆக வேண்டுமென்றால் பொறுமை வேண்டும். உங்களில் எத்தனை பேர் ஒரு வாரம் வரை பேசாமல் இருக்கிறீர்களோ, அவர்களைச் சீடராக ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார் துறவி.

எப்படியும் பேசாமல் அமைதி காப்பது என்ற முடிவில் நான்கு பேரும் ஒரு குடிசையில் அமர்ந்தனர். முதல் நாள் முழுமையும் கழிந்தது. ஒருவரும் பேசவில்லை.

இரவு நேரம், அங்கிருந்த விளக்கில் எண்ணெய் தீரும் நேரம். வெளிச்சம் மங்கலாகிக் கொண்டே வந்தது.



பொறுமை இழந்த முதலாமவன், ''யாராவது எண்ணெய் ஊற்றுங்க, இல்லாவிட்டால் விளக்கு அணைந்து விடும்'' என்றான்.

உடனே இரண்டாமவன், ''ஒரு வாரம் நாம் வாயைத் திறந்து எதுவும் பேசக் கூடாது என்பதற்காகத்தானே இங்கே இருக்கிறோம். அதை மறந்து நீ பேசலாமா?'' என்று கேட்டான்.

''இரண்டு பேரும் முட்டாளாக இருந்து பேசித் தொலைத்து விட்டீர்கள்'' என்றான் மூன்றாமவன்.

''அப்பாடா! நாலு பேர்ல நான் மட்டும்தான் வாயைத் திறக்கலே'' என்றான் நான்காமவன்.

பிறகென்ன, அவர்களை சீடராக ஏற்றுக் கொள்ளாமல் துறவி சென்று விட்டார்.

- ஆ. புகழேந்தி, மயிலாடுதுறை.



தலைவலிக்கு மருந்து தயாரிக்கப் பயன்படும் ''யூகலிப்டஸ்'' மரம், உலக விஞ்ஞானிகளுக்கு தலைவலி உண்டாக்கக்கூடிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது வியப்பான உண்மை யாகும்!

ஆஸ்திரேலிய நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த யூகலிப்டஸ் மரமானது 600 வகைகளாகப் பிரிந்து உலகிலுள்ள 80 - க்கும் மேற்பட்ட நாடுகளில் விண்ணைத் தொடும் வண்ணம் வானுயர வளர்ந்து நிற்கின்றது.. இம் மரங்கள் கிடு.... கிடு... வென மிக வேகமாக வளரக் கூடியவை. நன்கு வளர்ந்த மரங்கள் தைலம் தயாரிக்கவும் விறகுத் தட்டுப்பாட்டைப் போக்கவும் நன்கு பயன்படுகின்றன. ஒரு வகையில் பார்த்தால் இவை தங்களுடைய உயிரைத் 'தீ'க்கு தியாகம் செய்து மற்ற மரங்களைக் காக்கின்றன என்றும் கூறலாம்.

இருந்தும் உலகம் முழுவதிலும் யூகலிப்டஸ் மரங்களுக்கு எதிர்ப்பு வலுத்துக் கொண்டு வருகிறது.

ஸ்பெயின் நாட்டில் இந்த எதிர்ப்பு மிக அதிகம் 'யூகலிப்டஸ் ஒழிக' எனும் தனி இயக்கமே அங்கே உருவாகி இம்மரங்களை அழித்துக் கொண்டிருக்கிறது! இதற்கு இவர்கள் அருமையான நோர் தந்திரத்தைக் கண்டு பிடித்துள்ளார்கள். கோடாலி எடுத்து வெட்ட ஆரம்பித்தால் இவற்றை அழிக்க அதிக நாள் பிடிக்கும் என்று ஃபோரோகென்தா எனும் மரப்பட்டைகளை நீரில் ஊர வைத்து அதன் நீரை யூகலிப்டஸ் மரங்களுக்கு ஊற்றுகிறார்கள். மரம் விரைவில் பட்டுப் போய் விடுகிறது!

இந்த அளவிற்கு இம்மரங்களின் மீது வெறுப்பு வந்ததற்கு என்ன காரணம்? யூகலிப்டஸ் மரங்கள் தாங்கள் வளருவதற்காக, அக்கம் பக்கத்திலுள்ள தாவரங்களுக்குச் செல்லும் நீர்ச் சத்து மற்றும் பிற உயிர்ச்சத்துக்களைத் திருடிக் கொண்டு மற்ற தாவர இனங்களின் வளர்ச்சியைக் குன்றச் செய்து விடுகின்றன என்று ஒரு சாரரும், யூகலிப்டஸ் மரங்கள் வெளிப்படுத்தும் காற்றில் கசப்பு மிகுந்த நச்சுத்தன்மை உள்ளது என்று ஒரு சில நாட்டவரும், இம் மரங்கள் வளரும் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் கீழிறங்கி விடுகிறது என்றும், தான் வளரும் நிலப்பரப்பையே யூகலிப்டஸ் விஷமாக்கி விடுகிறது என்றும் பல்வேறு குற்றச்சாட்டுகள் இதன் மேல் சுமத்தப்படுகின்றன. 'இவையெல்லாம் நியாயமான குற்றச் சாட்டுகள்தானா? இதில் உண்மை உள்ளதா?' என்பதை ஆராய உலகம் முழுவதிலும் விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள். நம் நாட்டில் கூட கர்னாடகாவில் ஒரு பரிசோதனை சாலை துவங்கப்பட்டுள்ளது. யூகலிப்டஸ் தான் நிரபராதி என்பதை நிரூபிக்குமா? பொறுத்துப் பார்ப்போம்.

- அப்துல்.



அடி வாங்கும் சுகம்!

நாகரத்தினம்

பேருந்து வந்து நின்று பெருமூச்சு விட்டது.

அதிலிருந்து முத்து அவசர அவசரமாக இறங்க முனைந்தான். அவனுக்கு முன்னால் வயதான ஒருவர் மெல்ல இறங்கிக் கொண்டிருந்தார்.

புத்தகப் பையை நன்கு தோளில் மாட்டிக் கொண்டு, வயதானவர் மெல்ல இறங்கியதும் அவர் மீது இடித்து விடாமல் இறங்கினான் முத்து.

கீழே இறங்கியதும் முத்துவைப் பார்த்தார் அந்த வயோதிகர்.

''தம்பி.... பாரதியார் தெரு எங்கே இருக்குன்னு தெரியுமா?'' அன்புடன் கேட்டார் அந்த வயதானவர். அவர் ஊருக்குப் புதியவர் என்பது புரிந்தது. பேச்சிலும் நடையிலும் நடுக்கம் தெரிந்தது. பார்வைக் குறைவும் இருக்கிறது என்பது நன்கு தெரிந்தது.

''இந்தப் பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்குங்க'' - முத்து வழியை விளக்கினான்.

''அவ்வளவு தூரமா?'' - தயக்கமும், தடுமாற்றமும் அப் பெரியவரிடம் தென்பட்டது.

முத்து சற்று நேரம் அவரை நோக்கினான், ''ஐயா... நான் கொண்டு போய் விடுகிறேன்'' என்றவாறு அவர் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டான்.

பெரியவர் முகத்தில் வெளிச்சம்.

''தம்பி... உன் பெயர் என்னப்பா?''

''முத்து.''

'முத்தான பையன்' - மனதுக்குள் பாராட்டினார்.

முத்துவைப் பின்தொடர்ந்தார் பெரியவர்.

''முத்து... நீ எந்தப் பள்ளியில் படிக்கிறாய்?'' - அன்புடன் கேட்டார்.

''இந்த ஊர் அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளியில். பக்கத்து ஊரான கரம்பயம்தான் எங்க ஊரு.''

''அப்படியா! அரசு ஆண்கள் பள்ளியிலா?'' - வியப்போடு கேட்டார்.

''ஆமாம்! ஏன் கேட்கறீங்க?'' புரியாது கேட்டான் முத்து.

''உங்க பள்ளியில் கப்பையன் ஆசிரியரை உனக்குத் தெரியுமா? போன ஆண்டுதான் இந்த ஊருக்கு மாற்றலாகி

வந்தார்'' என்றார் பெரியவர்.

''தெரியுமே! அவர்தான் என் வகுப் பாசிரியர். அவரை உங்களுக்குத் தெரி யுமா?''

வயோதிகர் சிரித்தார்.

''முத்து... அந்தச் சுப்பையன் என் மகன்தான். சுப்பையன் வீட்டிற்குதான் நான் இப்போ போய்க் கொண்டிருக் கேன்.''

முத்து மகிழ்ந்தான்.

ஆசிரியரின் தந்தைக்கல்லவா உதவி செய்கிறான். பெருமைப்பட்டான்.

அவர் வீடே எனக்குத் தெரியும். வாங்க நானே அழைத்துப் போகிறேன் என்ற முத்து, பெரியவரை அழைத்துக் கொண்டு ஆசிரியர் வீட்டருகே வந் தான். ''அந்த வேப்பமரத்து வீடுதான் அவர் வீடு.''

''ரொம்ப நன்றி தம்பி. உங்க ஆசிரியர் எப்படி?''

''ரொம்பக் கண்டிப்பானவர். ரொம்ப நல்லாப் பாடம் நடத்துவார். எல்லோ ருக்கும் தெளிவாகப் புரியும்படி நடத்து வார். வகுப்பிற்கு வர ஒரு சில நிமி டங்கள் தாமதமானாலும் கண்டிப்பா தண்டனை வழங்கிடுவார். அந்தக் கண்



டிப்பினால் பள்ளிக்கு யாருமே தாமத மாக வருவதில்லை'' - முத்து தன் ஆசிரி யரைப் பற்றிப் பெருமையாகச் சொன் னான்.

பெரியவர் முகத்திலும் பெருமை தெரிந்தது. ஆனால் உடனேயே அவர் முகம் மாறுபட்டது.

''தம்பி... என்னை அழைத்து வந்து விட்டதால் உனக்குத் தாமதமாகி விட் டதே! சுப்பையன் அடிப்பானே?'' பதற் றம் தெரிந்தது குரலில். தன்னால் முத்து அடிவாங்க நேரிடுமே என்ற கவலையும் அவர் முகத்தில் இருந்தது.



''சரியான நேரத்திற்குப் பள்ளி செல்வது மாணவர்களின் கடமை; அதே நேரத்தில் தங்களைப் போன்றவர் களுக்கு உதவி புரிவதும் கூடக் கடமை தான்'' என்றான் முத்து.

பெரியவர் முத்துவைப் பார்த்தார்.

''தம்பி நான் ஒன்று சொல்றேன். தவறாக நினைக்காதே. ஏன் தாமதமாக வந்தேன்னு என் பையன் கேட்டால், என்னை அழைத்து வந்து, வீட்டிற்குக் கொண்டு போய் விட்டதாகச் சொல். ஆசிரியர் அடிக்க மாட்டார்'' என்றார்.

பெரியவர். ''வேண்டாங்க! செய் யும் உதவிக்கு மறு உதவி எதிர்பார்க்கக் கூடாதுன்னு ஆசிரியரே அடிக்கடி சொல் வார்.''

''அதற்காக நல்லதைச் செய்து விட்டு தண்டனை வாங்கலாமா?''

''வாங்கக் கூடாதுதான். ஆனாலும் அப்படி வாங்கினாலும் அதிலும் கூட ஒரு சுகம் உண்டுங்க.''

''தம்பி! நீ என்னப்பா சொல்றே?'' - புரியாது கேட்டார் பெரியவர்.

''ஐயா... நான் சற்றுத் தாமதமாகப் போனாலும் பரவாயில்லை. என் தாம தத்திற்காக ஆசிரியரிடம் நான் தங்க ளுக்கு உதவி செய்ததைச் சொன்னால் அவர் என்னை மன்னித்து வகுப்புக்குள் அனுமதிக்கலாம். அப்படி அவர் செய் தால் அவர் கடமையில் 'சுயநலம்' இருப்பதாக மற்ற மாணவர்கள் நினைக்க நேரிடும். நான் காரணத்தைச் சொன்ன பிறகும் அவர் அடித்து உரிய தண்டனை கொடுத்தால் அதுவும் அவ ருடைய மனதை 'உறுத்தும்'. ஆகவே நான் எதுவுமே சொல்லப் போவ தில்லை. கொடுக்கும் தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப் போகிறேன். வருகிறேன் ஐயா'' என்ற முத்து அவரிடம் அவசர, அவசரமாக விடைபெற்றான்.

பெரியவர் வியப்போடு, வெகு நேரம் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார். ■

உலகின் மிகச் சிறிய போட்டோகிராபர்



போபாவில் உள்ள செயின் ஜோசப் கான்வென்டில் இரண்டாவது வகுப்பில் படித்து வரும் சிறுமி ஸ்ருஷ்டிக்கு 'ஐஸ்கிரீம்' மிகவும் பிடிக்கும். இதென்ன பிரமாதம்! ஐஸ்கிரீம் என்றால் எல்லாச் சிறுவர் சிறுமிகளுக்கும்தான் பிடிக்குமே... என்கிறீர்களா? அப்படியென்றால் எல்லாச் சிறுவர் சிறுமிகளுக்கும் போட்டோ பிடித்து, அதுவும் தொழில் நுட்ப நுணுக்கம் வாய்ந்த ஜப்பானிய கேமிராவில் படம்பிடித்து பரிசு வாங்கத் தெரியுமா? என்ன முழிக்கிறீர்கள்? உண்மைதான்...! இரண்டாம் வகுப்பில் படிக்கும் ஏழு வயதுச் சிறுமி ஸ்ருஷ்டி தனது ஆறாவது வயதிலிருந்தே போட்டோ பிடிக்க ஆரம்பித்து, பாரதப் பிரதமரின் நிகழ்ச்சிகளைப் படம் எடுக்கும் 'பிரதம' போட்டோகிராபர் அளவுக்கு உயர்ந்திருக்கிறாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் அவளது திறமையை!

சாதனைச் சிறுமியின் தந்தை டாக்டர் சுரேஷ் கூறுகிறார்... 'எங்கள் வீட்டிலிருந்த கேமிராவை நான் இயக்கும் போது அதை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டேயிருப்பாள் என் மகள் ஸ்ருஷ்டி. ஒருநாள் திடீரென அதைத் தன் கையில் எடுத்துக் கொண்டவள் ''நானும் படம்பிடிப்பேன்'' - என அடம்பிடித்து அழ ஆரம்பித்து விட்டாள். அவளது தொல்லையைத் தாங்க மாட்டாமல் சில படங்களை எடுக்க அனுமதித்தேன். பின்னர் அவைகளைக் கழுவிப் பார்த்த பொழுது, என்னை விட நேர்த்தியாக அவள் 'கவர்' செய்திருப்பதைக் கண்டு திகைப்படைந்தேன்! பிறகு தான் அவளைப் படம் எடுக்க நான் அனுமதித்தேன். அதன் பிறகு படிப்படியாக உயர்ந்து இன்று பல உயர்ரக கேமிராக்களை ஃபோகஸ் செய்து படம் எடுத்தல், பிலிம்ரோலைத் தானே போடுதல் என வெளுத்துக் கட்டுகிறாள்.

ஸ்ருஷ்டியின் திறமையை முதலில் போபாலில் இருந்து வெளிவரும் தினசரி நாளிதழ் ஒன்று வெளிப்படுத்தியது. பின்னர் நேஷனல் ஹெரால்டு பத்திரிகை இவளைப் பாராட்டி போட்டோவுடன் கட்டுரை வெளியிட்டது.

1990-ல் பிரதமராக இருந்த வி.பி. சிங் அவர்கள், ஸ்ருஷ்டியின் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்டு விசேஷமாக அவளை அழைத்து வரச் சொல்லி, நேரில் திறமையைப் பார்த்தார். பரிசளித்து கௌரவித்தார். டீ.வி.யிலும் இவளது பேட்டி ஒளிபரப்பாகியது. சந்திரசேகர் அவர்கள் பிரதமராக இருக்கையில் பிரதமரின் நிகழ்ச்சிகளில் படம் எடுக்க ஸ்ருஷ்டிக்கு விசேஷ அனுமதி அளிக்கப்பட்டது. அதிலிருந்து அவள் திறமையை உலகமே கண்டு வியக்கிறது!

ஸ்ருஷ்டி படம் எடுப்பதில் மட்டுமல்லாது படிப்பிலும் முதல் ரேங்க் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஏ. ஜே. ஜ.

ஸைடர் ஜக்கு!

கதை: உதய்பால் சித்திரம்: ஏ.பி. தியாகராஜன்

சூன்யக் கல்!

ஸைடர் ஜக்கு சகல கலா வல்லவன். எதையும் செய்யும் சக்தி பெற்ற மாயச் சிறுவன்; மாந்துறை கிராமத்தைச் சேர்ந்தவன்; மோசக்காரர்களைத் தண்டித்து நல்லவர்களுக்கு உதவுபவன்.




எனக்கு உதவுவாயா?
நீ என்ன கேட்பேன்னு தெரியும். கண்டிப்பா உதவறேன். ராத்திரி 12 மணிக்கு ரெடியா இரு. வரேன்.
மரப் பொந்துக்குள்ளே கத்தன்! இங்கிருந்து நான் எரியப்போறீங்களா? இருக்கட்டும்!
நடு இரவு — ராமு தன் கட்டிலில் —
இன்னும் ஜக்குவைக் காணோமே!
ராமு நினைக்கவும் ஜக்கு வரவும் சரியாக இருந்தது.
என் அப்பா மந்திரவாதியைப் பார்க்கப் போறார்...
மந்திரவாதி என்ன செய்கிறார் பார்ப்போம்.
அப்ப என்னா?
நட்சத்திர சுவடிகளைப் பார்!
சரி ஜக்கு!
மந்திரவாதியின் மோசடி வெளியாகும்
மந்திரவாதியின் வீட்டில் — ராமுவின் அப்பா —
எப்படியாவது கஷ்டம் விடணும் நீக்கணும் நீங்களே கதி.
சூன்யம்தான். அதை எடுத்தா சரியாயிடும்.
என்ன பண்ணனும்? நீங்க சொல்றபடி கேட்கிறேன்.


தேவதைகளைச் சாந்தப்படுத்தப் பூஜை போடணும். அதுலதான் சூனியம் எங்கே இருக்குன்னு தெரியும்.
பூஜை போட்டதும்...
பிசாசுகளை விரட்டி சூன்யத்தை எடுக்கணும். அதுக்கு ஹோமம் பண்ணணும். பத்தாயிரம் ஆகும்!
அவ்வளவுக்கு எங்கே போவேன், ஏழையாச்சே?
பிசாசுகளை விரட்டி சூன்யம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிச்சு எடுக்கணுமே? சும்மாவா?
சரி, கடன் வாங்கியாவது தரேன்.
அவர் சென்றதும் மந்திரவாதி உதவியாளர்களை அழைத்தார்.
கலசத்தை ராமு வீட்டுக்கு எதிரே மரத்தடியில் புதையுங்க. ஆளுக்கு ஐநூறு தரேன்.
நாளையில் இருந்து ... வீட்டில் கல் எறியுங்க. நாளு விடவே வேண்டாம்.
ரொம்ப இளையாம இருந்தா சரி!
மந்திரவாதி ஹோமம் செய்தார்—
சாமுண்டி வா! பிசாசுகளே! இருங்க. இங்கே வரக்கூடாது! ஆ... பத்ரகாளி...



சாமுண்டி தெய்வ கலசம் எங்கே இருக்கு சொல்?
தெய்வம் இருக்கும் இடம் தெரிஞ்சு போச்சு. புறப்படுங்க!
இருந்தால் தானே எடுக்க? அதைத்தான் அவரை வைத்து என் னிடம் தந்து விட் டாரே?
சாமுண்டி சொன்னது இதே இடம் தான். தோண்டுங்க.
தோண்டிப் பார்த்ததில் எதுவும் கிடைக்கவில்லை.
புதைச்சது மெய்யாக இருந்தா கிடைக்கும்.
என்னடா சொல்றே?
நீங்க ஆளை வைச்சுப் புதைக்கச் சொன்ன கலசம் இதோ!
சாமுண்டி சொன்னது பொய்யா?
சாமுண்டி சொன்னதா நீ சொல்றது பொய்!
பொடியா, யாரோட விளையாடறே? சாமுண்டி சும்மா விட மாட்டா!



எல்லோரும் திகைப்புடன் கேட்டனர்.
ராமு நீ சொல்றது நிஜமா? கல்லெறிஞ்சதும், கலசம் புதைச்சதும் மகாதேவன் அவர்களா?
ஆமாம்ப்பா. ஊரையே ஏமாத்தறான் இவன்.
மகாதேவன் வேகமாக நழுவி ஓடப் பார்த்தார். முதுகில் கல் விழுந்தது!
யம்மாடி!
ஆள் யாருமில்லையே! நிஜமான பிசாசா இருக்குமோ?
ஐயோ! தொலைஞ்சேன்...
மாயமா இருக்கே! சாமுண்டி காப்பாத்து!
ஐயோ அப்பா!
கண்ணுக்குத் தெரியாத ஜந்துவின் வேலை என்று புரியாமல் மிரண்டு ஓடிய மகாதேவன் தன் வீட்டுக்கு வந்தார். ராமுவைப் பார்த்ததும் நடுங்கினார்.
ஹ ஹ
உங்களுக்கு கஷ்டமய்யா?
கண்டுபிடிங்க.



ஐயோ!
பூஜை போடலாமா?
அடி தாங்கல. ஒரு வழி சொல்லேன்!
எத்தனை பேரை ஏமாத்திப் பணம் பறிச்சே? எங்கப்பாவிடம் மன்னிப்புக் கேள்.
இதோ போறேன். பணத்தையும் தந்துடறேன்.
கல்லெறிந்ததும், பில்லி சூனியமும் பிசாசு வேலை இல்லை. உங்க வேலை ன்னு ஒப்புக்கொங்க...
பில்லியும் இல்லை, சூனியமும் இல்லை. எல்லாம் என் வேலை தான். மன்னிச்சுடுங்க!
எல்லோருக்கும் பணத்தைத் திருப்பிக் கொடுங்க. இல்லே தர்ம அடிதான்!
நன்றி ஐயா. எல்லோரும் வாழ்த்தறாங்க. நமக்கு இந்த ஊரில் நிறைய வேலை இருக்கு. வா போகலாம்!

★ ராஜாஜி அவர்களின் கதை தகுதிக்கு மீறி ஆசைப்பட்டால் துன்பமே என்பதை அழகாக உணர்த்தியது. காலத்திற்கு ஏற்ற கதை. விஜுவின் படங்கள் கண் முன்னால் நிற்கின்றன. – விசலூர், ஜி. ஜி. கிருஷ்ணன், மதுக்கூர் ரமேஷ், தா. சித்துகுமார், திருமழபாடி, ஜெ. அன்புராசன், மன்னார்குடி பா. இராம்ஜி, அங்கண கவுண்டன் புதூர் ஆர். நாகராஜன், ஆனைகல்மேடு சி. மாதேஸ்வரன், அண்ணா நகர் எஸ். காமராஜ், எஸ். சேதுபதி, ஆத்துக்கால் புதூர் ஈ. ஸ்ரீதர் மற்றும் பலர்.

★ சூரன் – அதிசூரன் படக்கதை படுஜோர்! இறுதிவரை விறுவிறுப்புக் குறையவில்லை! வடமாதிமங்கலம் வே. பூங்குன்றன், திருவொற்றியூர் ப. கோகுலப்பிரித்தன், மேலப்பாதி எஸ். நாகராஜன், அம்மையார் குப்பம் மா. வெ. கிருஷ்ணன், காவேரிப்பட்டணம் மங்களரேகா, கச்சிராய பாளையம் ஆர். சி. மதிராஜ், மற்றும் பலர்.



★ 'கிருஸ்துமஸ் தாத்தாவிடம் என்ன கேட்பாய்?'க்கு பொடிகளின் பதில்கள் சூப்பர்தான் போங்கள்! – மொரப்பூர் எஸ். எம். டி. ரஃபி, கோனாப்பட்டு சரவணன், ஜோதிநகர் கணேஷ், மொரப்பூர் நவ்ஷாத், மேலகிருஷ்ணன் புதூர் பி. இராமகிருஷ்ணன், தக்கோலம் அ. முஸ்தபா, மேட்டூர் அணை எஸ். வெங்கடேசன் மற்றும் பலர்.

★ ஆக்டோபஸ் பற்றி இத்தனை அதிசய அறிவியல் செய்திகளா! கதை நேரே பார்ப்பது போல் இருந்தது! – புன்செய் புளியம்பட்டி பி. எல். கிரிஜா, சங்க மங்கலம் எம்.ஜி.ஆர்., அகரக்கடம்பனூர் ஆர். சத்யன், மற்றும் பலர்.

★ பிராணிகளின் குளிர்கால உறக்கம் பிரமிப்பைத் தந்தது! ஆசிரியருக்குப் பாராட்டுகள்!
கீழ்வேளூர் ரஜனி,
பழனிவேல் மற்றும் பலர்.

★ பரதன் நண்பனின் தந்தையை எப்படிக் காப்பாற்றப் போகிறானோ என்பதை அறிய ஒரே கவலையாகவும், ஆவலாகவும் இருக்கிறது. – மாத்தூர் ராதா மணி, பொன்மலை பரிமளம், விருதுநகர் கோமுகி, பனையூர் சொக்கண்ணன் மற்றும் பலர்.

★ கோகுலம் அக்டோபர் இதழில் வெளியான 'பறப்பது எந்தக் கரப்பு?' பற்றி என் அறிவியல் ஆசிரியர் 'எல்லாக் கரப்புகளுமே பறக்கும்' என்கிறார். உங்கள் பதில் என்ன? நாகை சுந்தரேசன், மட்டக்களிப்பு பாலப்பன் மற்றும் பலர்.

(உங்கள் ஆசிரியரை COLLIN'S INSECTS அல்லது BRITISH MUSEUM'S NATURAL HISTORY PUBLICATION புத்தகங்களில் பார்க்கச் சொல்லவும். இவை கிடைக்கவில்லையென்றால் கலைக் கதிர் டிசம்பர் 1977, அக்டோபர் 1988 இதழ்களைப் பார்க்கும்படி கூறவும்.)

★ 'பிறந்த ஊர் இங்கே' போட்டி முடிவில் 'கனிவூருக்கு' கனியன் பூங்குன்றன், திருவையாறுக்கு தியாகராஜர்' என்றும் தரப்பட்டுள்ளது. பூங்குன்றம், திருவாரூர் என்பதே சரியான விடை. – சாட்சியக்குடி, அ.ப. பாலையன் மற்றும் பலர்.

★ காரெட் மதிப்பு ஒரு கிராம் என்பது 0.200 கிராம் ஆகும். (5 காரட் – ஒரு கிராம்) 84 ஆம் பக்கத்தில் வெளியான தகவல் சரியல்ல. – மதுக்கூர் எம். அகமது அலி மற்றும் பலர்.

★ கிருஸ்துமஸ் வாழ்த்து அட்டையை முதலில் வடிவமைத்தவர் எப்ஸி ஹார்ஸ்லி (1843ல்). ஹென்றி கோலே என்பது சரியல்ல! – சென்னை – 82, ஸ்ரீராம், மாயவரம் கு. சுந்தரபாபு மற்றும் பலர்.

(கோகுலம் வாசகர்களா கொக்கா? தங்களை எளிதில் யாரும் ஏமாற்ற முடியாது என்பதை மெய்ப்பித்து விட்டார்கள்! நன்றி! – ஆசிரியர்.)

புத்தாண்டு எப்படி இருக்க வேண்டும்




பிறக்க உள்ள 1993 புத்தாண்டு எப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள் என்று கீழச் சீவல்பட்டியைச் சேர்ந்த ஆறு சிறுவர் சிறுமியரிடம் கேட்டோம். தங்களுடைய விதம்விதமான ஆசைகளை அவர்கள் ஆர்வத்துடன் கூறினார்கள். அப்பா! எத்தனை விதமான ஆசைகள்! அவற்றைத் தொகுத்துக் கீழே தருகிறோம்! உங்கள் ஆசையும் இவற்றில் ஒன்றாகத்தான் கண்டிப்பாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை!



* போர் இல்லாத அமைதி ஆண்டா, உணவுப் பஞ்சம் இல்லாத ஆண்டா இருக்கணும் - வி. ஜுலா

வி. ஜுலா : இராக்கிலே நடந்த போர் காட்சிகளை டீவியில் காட்டினார்களே.... பார்த்தீங்களா? அப்பா! எத்தனை பயங்கரம்! 'ஆக்க அறுபது நாள்! அழிக்க ஒரு நாள்'னு சொல்வாங்களே.... அது எத்தனை உண்மை! எத்தனை கட்டடங்கள், தொழிற்சாலைகள், தளவாடங்கள் உருக்குலைந்து எரிந்தன! கடலில் கலந்த எண்ணெய்ப் படலம் எத்தனை கடல் வாழ் உயினங்களைக் கொன்று விட்டது! இதையெல்லாம் செய்யறவங்க நம்மை மாதிரிமனிதருங்கதான் என்பதை ஏத்துக்கவே முடியலே! புராணங்கள்ள வர ராட்சங்களே தேவலை போல இருக்கே! ஆப்பிரிக்க நாடுகள்ல லட்சக்கணக்கான குழந்தைங்க உண்ண உணவு கிடைக்காம தினமும் மடியற காட்சியையும் டீவில காட்டினாங்களே. நீங்க பாக்கலே? எலும்பும் தோலுமா அவங்க சாப்பாட்டுக் குவளையை ஏந்தி நின்ற அந்த காட்சியைப் பார்த்து நான் அழுதிட்டேன்.. இந்த விஞ்ஞான முன்னேற்றமெல்லாம் அவங்களை மீட்கலையா? இந்த அநியாயத்தைப் பார்த்துக்கிட்டு எப்படிப் பேசாம இருக்க முடியுது? இந்தப் புத்தாண்டிலாவது போர் பயங்கரம் இல்லாத; உணவுப் பஞ்சம் இல்லாத ஆண்டா இருக்கணும்னு நான் ஆசைப்படறேன்..



* இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் நம் நாட்டிற்குப் பெருமை தேடித் தர வேண்டும். – ஆர்.எம். ராமநாதன்

ஆர்.எம். ராமநாதன் : ஒரு காலத்தில் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா கொடி கட்டிப் பறந்தது. இந்திய அணி ஆட்டக்காரர்களுடன் ஆட வேண்டும் என்றால் கிரிக்கெட்டில் உலகப் புகழ் பெற்ற ஆட்டக்காரர்கள் கூட தயங்கிய காலம் இருந்தது. நமது அணியினரின் விதிகளை மீறாத கட்டுக்கோப்பும், திறமையும் அந்த அளவுக்கு இருந்தது. ஆனால் சமீப ஆண்டுகளில் இந்தியா தோல்வி மேல் தோல்வியாக அடைந்து வருகிறது. அதுவும் புதிதா அணி அமைத்து ஆடத்தொடங்கியிருக்கும் நாட்டினரிடம் கூட அது தோற்றுவிடுவது, என் போன்ற கோடிக் கணக்கான கிரிக்கெட் பிரியர்களுக்கு அவமானமாக இருக்கிறது. இவர்கள் ஜெயிக்காவிட்டாலும் பரவாயில்லை, தோற்றுப் போய் வராது, ''டிரா'' ஆனால் கூடப் பரவாயில்லையே என்று சாமியை வேண்டும்படி உள்ளது. இருந்தப் புது ஆண்டிலாவது நமது இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் தங்கள் முழுத் திறமையையும் காட்டி, வெற்றி பெற்று நம் நாட்டுக்குப் பெருமை தேடித் தர வேண்டும்.

இந்தப் புத்தாண்டில் இருந்தாவது எங்கள் மனம் கவர்ந்த பத்திரிகையான கோகுலம், சென்னை நகர வாசகக் குழந்தைகளோடு என் போன்ற வெளியூர் வாசகர்களின் கட்டுரைகளையும் பேட்டிகளையும் நிறைய வெளியிட வேண்டும். எங்களுக்கும் கோகுலத்தில் பங்கு தரவேண்டும்? இதுவே என் புத்தாண்டு ஆசை. இது நிறைவேறுமா?

கே. தீபா : பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறோம். ஏதோ பஸ் வருகிறது. தலையில் கூடை டிபன் பாத்திரத்துடன் காத்திருக்கும் ஒரு சிறுமி ''அக்கா, இந்த பஸ் புதுக்கோட்டை போகுமா?'' என்று கேட்கிறாள். ''இல்லேம்மா. இது காரைக்குடி பஸ். பெரிசா எழுதியிருக்காங்க இல்லே?'' என்று கேட்கிறோம். ''எனக்குப் படிக்கத் தெரியாது அக்கா. நான் பள்ளிக் கூடம் போகலே. வீட்டுல வசதி இல்லே. நிறுத்திட்டாங்க. சித்தாள் வேலை பண்றேன்.



* எழுதப் படிக்கத் தெரியாத சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள மாட்டோம்னு பெரியவங்க முடிவு எடுக்கணும். கே. தீபா

இப்பக்கூட வேலைக்குத்தான் புதுக் கோட்டை போறேன்'' என்கிறாள் அந்த கிராமத்துச் சிறுமி பரிதாபமாக. நமக்குத் தூக்கி வாரிப் போடுகிறது.

இது தினமும் கிராமங்களில் காணும் காட்சிதான். எழுதப் படிக்கத் தெரியாமல் கூட உயிர் வாழ முடியுமா என்பதை எண்ணும் போது வியப்பாக இருக்கிறது என்பதோடு, மனது என்னவோ பண்ணுகிறது. உணவும் உடையும் மனித வாழ்க்கைக்கு எத்தனை அவசியமோ, அதைவிட அவசியம் கல்வி. வசதி இன்மை காரணமாக கிராமத்துச் சிறுவர், சிறுமியர் இன்னமும் எடுபிடி வேலைகளுக்கே அனுப்பப் படுகிறார்கள். பள்ளிக்குச் சென்று படிக்க அவர்களை, அவர்கள் பெற்றோர் அனுமதிப்பதில்லை. காரணம் வீட்டு நிலை அப்படி.

எழுத்தறிவு இயக்கத்திற்காக அரசாங்கம் எத்தனையோ செய்கிறது. படிக்க வேண்டும் என்ற ஆர்வம் எல்லோருக்கும் வர வேண்டும். சிறுவர் சிறுமியரை வேலைக்கு வைத்துக் கொள்பவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவங்களை வேலைக்கு வைத்துக் கொள்ள மாட்டேன் என்று ஒரு முடிவு எடுத்தால் இந்த நிலை மாறலாம். எங்கப்பா எழுத்தறிவு இயக்கத்தில் தொண்டாற்றி வருகிறார். நான் கூட அவருக்கு உதவியா போறேன். இந்தப் புத்தாண்டிலாவது இந்தியாவில் உள்ள பத்துவயதிற்கு உட்பட்ட சிறுவர் சிறுமியர் அனைவருமே எழுதப் படிக் கத் தெரிந்தவர்கள் என்ற நிலை ஏற்பட வேண்டும்.



* ஆண்டு முழுவதும் மாணவர்களுக்கான வகுப்புகள் எல்லாம் நடையின்றி நடைபெறும் ஆண்டாக இருக்க வேண்டும். — சே. வினைதீர்த்தான்

சே. வினைதீர்த்தான் : காலையில் செய்தித்தாளைப் பார்க்கிறோம். ''சாதிக் கலவரத்தால் இரண்டு பிரிவினர்களுக்கு இடையே கடும் மோதல். இருபது பேர் பலி.. பலர் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள்'' என்ற செய்தி பெரிய எழுத்துக்களில் முன்பக்கத்தில் வெளியாகியிருக்கிறது. மன வேதனையுடன் வானொலியைத் திருப்புகிறோம். இன்னொரு ஊரைக் குறிப்பிட்டு, சாமி ஊர்வலத்தில் இரண்டு சாதியார்கள் மோதிக் கொண்டதில் ஊரே கலகலத்துப் போனது. கடைகள் சூறையாடப்பட்டன. வீடுகள் தீக்கிரையாயின. பலர் ஆஸ்பத்திரிகளில். லட்சக்கணக் கான மதிப்புடைய சொத்துகள் படு நாசம்! பள்ளிகளும் கல்லூரி களும் காலவரையின்றி மூடப்பட்டன என்ற செய்தி! நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது நமக்கே தெரியவில்லை. இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் கூட இப்படிப்பட்ட பிரச்னைகளா என்பதை அறிந்து திகைக்கிறோம். அறிவியல் வளர்ச்சியைக் கண்டு ஒரு பக்கம் பெருமிதம் அடையும் அதே நேரத்தில், இப்படிப்பட்ட சாதிக் கலவரம், வகுப்பு மோதல் செய்திகளைக் கண்டு கலங்குகிறோம். நம் நாட்டை முன்னேறச் செய்ய இருபத்தி நான்கு மணி நேர உழைப்புக் கூடப் போதாது என்றிருக்கும் நிலையில் இப்படிப் பட்ட செய்கைகளில் நாம் ஈடுபடுவது நியாயமாகுமா? முன்னேற்றப் பிரச்னைகளில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு தீர்வு கண்டு நாட்டை உயர்த்தப் பாடுபட வேண்டிய நேரத்தில், இந்த சாதிச் சண்டைகள் அவசியமா? ஒரு ஆண்டாவது குறித்த நேரத்தில் மாணவர்களால் பொதுத் தேர்வு எழுத முடிகிறதா? வகுப்புகள் ஒழுங்காக முழுசாக நடக்கின்றனவா? இந்த இழப்பால் யார் பாதிக்கப்படுகிறார்கள்? நேர்முகமாக மாணவர்களும், மறைமுகமாக நாட்டின் முன் னேற்ற மும் தானே?

வரும் புத்தாண்டாவது இந்த மாதிரி சாதிச் சண்டைகள் இல்லாத ஆண்டாக; ஆண்டு முழுவதும் மாணவர்களுக்கான வகுப்புகள் எல்லாம் நடையின்றி நடைபெறும் ஆண்டாக; மக்கள் மன வளர்ச்சி பெற்று சாதிச்சண்டை போடுவது கேவலம் என்பதை உணர்ந்து, இதற்கெல்லாம் மூட்டை கட்டும் ஆண்டாக இருக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறேன்.


எல். அபிராமி : எந்த அறிவியல் புதுமையை எடுத்துக் கொண்டாலும் சரி, அயல் நாட்டினரின் கண்டு பிடிப்பாகவே உள்ளது. நமது நாட்டினர், சர் சி.வி. ராமனைத் தவிர வேறு யாருமே அறிவியல் கண்டு பிடிப்பு எதையும் நிகழ்த்தவில்லையா? ஆராய்ச்சி வசதி



* இந்தியர்கள் உலக அரங்கில் அறிவியல் சாதனை படைக்கும் ஆண்டாக இருக்க வேண்டும்!
- எம். அபிராமி

இல்லை என்று காரணம் கூறுகிறார்கள். கடந்த நாற்பது ஆண்டுகளில் நமது நாட்டிலும் அராய்ச்சி வசதிகள் எத்தனையோ பெருகியுள்ளதே? இருந்தும் நம்மவர் களால் எந்த ஒரு புதுமையான கண்டு பிடிப்பையும் செய்ய முடியவில்லையே! ஏன்? எனக்குத் தோன்றுகிறது, இருக்கின்ற பொழுதை எல்லாம் நாம் வேண்டாத சச்சரவுகளில் கழித்து விடுகிறோம் என்று. சாதிச் சண்டை, மதக் கலவரம், ஊர்வலம், மாநாடு போன்றவைகளில் நாம் நமது சக்தியையெல்லாம் செலவழித்து விட்டு, ஆக்க பூர்வமான காரியங்களைக் கோட்டை விடுகிறோம் என்று. இந்த வேண்டாத நிகழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு ஆக்கபூர்வமான செயல்களைச் செய்ய நம்மை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தியர்களுக்கு அளவில் லாத திறமையும், பொறுமையும் உண்டு என்கிறார்கள், மற்ற நாட்டினர். இதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியமான நேரம் வந்து விட்டது. இந்தப் புத்தாண்டிலாவது சாதி, மத, மொழிக் கலவரங்கள் இல்லாத ஆண்டாக இருந்து. இந்தியா உலக அரங்கில் அறிவியல் சாதனை படைக்கும் ஆண்டாக இருக்க வேண்டும்!

தே. அங்கப்பன் : இப்போ வருகின்ற சினிமாக்கள் எல்லாமே வன்முறையைத் தூண்டும் படங்களாகவே இருக்கின்றன. இதெல்லாம் என் போன்ற சிறுவர் மனதைப் பெரிதும் பாதிக்கின்றன. இந்த மாதிரி சினிமா வைப் பார்த்துவிட்டு வரும் வீடுகளில், அடுத்த நாள் குழந்தைகள், தங்களை வில்லன்களாகவும் கதாநாயகனாகவும் எண்ணி சண்டை போடுவதைக் காணலாம். வாயால் சத்தம் போட்டுக் குத்து விட்டுக் கொள்கிறார்கள்! இது வளர்ந் தால் என்ன ஆவது? பெரியவர்கள்தான் இதையெல்லாம் பார்த்துக் கெட்டுப் போகிறார்கள் என்றால் குழந்தைகளை யுமா கெடுக்க வேண்டும். குழந்தைக்காக சட்டைகள், செருப்புகள், விளையாட்டுப் பொருள்கள் எல்லாம் தனியா இருப்பது போல, ஏன் சினிமாவும் தனி யாக



* வன்முறை சினிமாக்களைக் காண குழந்தைகளுக்கு அனுமதி மறுக்க வேண்டும். கோகுலம் மாதம் இரண்டாக வேண்டும்!
- தே. அங்கப்பன்.

இருக்கக் கூடாது? மற்ற நாடுகளில் இதில் கவனம் செலுத்தும் போது நம்மவரும் எடுக்க வேண்டியதுதானே? ஒரு வேளை இதற்கு வசதி இல்லை என்றால், 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று சில சினி மாக்களைப் போடுவது போல், 'குழந்தைகளுக்கு அல்ல' என்றாவது ஒரு நிபந்தனையுடன் இம் மாதிரி வன்முறைப் படங்களை அனுமதிக்கலாமே!

வரும் புத்தாண்டில் சிறுவர்களுக்கான சினிமாக்கள் நிறைய வர வேண்டும். குழந்தைகளை வன்முறை சினிமாக்களுக்கு அனுமதிக்க மறுக்க வேண்டும். எங்கள் மனம் கவர்ந்த கோகுலம் மாதம் இருமுறையாக வேண்டும்!

பேட்டி படங்கள் :
தேவி நாச்சியப்பன்.



தும்பி சாதனை படைக்குமா?

ரேவதி

முத்துவின் இடது உள்ளங்கை விரிந்திருந்தது. அதில் ஒரு சிறிய கல். தனது வலது கையில் அவன் ஒரு தும்பியைப் பிடித்திருந்தான்.. அது 'படபட' வென்று சிறகடித்து தப்பிப் போக முயன்றது. முத்துவிடம் சிக்கிக் கொண்டால் அவ்வளவு சீக்கிரம் தப்பிவிட முடியுமா? பட்டாம் பூச்சியோ, தட்டாரப் பூச்சியோ அவன் எதிரே பறந்து விடக் கூடாது! பள்ளியில் அவனுக்கு செல்லப் பெயரே 'பூச்சி கொல்லி முத்துதான்'!

முத்துவைச் சுற்றி சிறுவர் சிறுமியர் கூட்டம் நிறைந்திருந்தது. தும்பி துடிப்பதை சில குழந்தைகள் வேதனையோடு பார்த்தனர். சிலர் ஆவலுடன் பார்த்தனர். வேதனையோடு பார்த்தவர்களே அதிகம்.

''இதபாரு, நீ எத்தனை துடிச்சாலும் நான் விட மாட்டேன். சமத்தா, இந்தக் கல்லைக் காலில் தூக்கிக்க. உன்னை விட்டுடறேன்'' என்று தும்பியிடம் பேசிய முத்து, தும்பியைக் கல்லுக்கு அருகே கொண்டு வந்து, அதன் மெல்லிய கம்பிக் கால்களை கல்லில் பட வைத்தான்.

''தும்பி தும்பி புடிச்சுக்கோ!
தூக்கிக் கல்லை
புடிச்சுக்கோ!''


என்று முத்து பாட வேறு பாடினான்! அந்தப் பாட்டுக்குப் பயந்து தானோ என்னவோ தும்பி, தன் சிறு மயிரிழைக் கால்களால் அந்தக் கல்லைப் பிடித்துக் கொண்டது!

கூடியிருந்த குழந்தைப் பட்டாளத்திற்கு ஒரே மகிழ்ச்சி! 'ஓ' வென்று இரைந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

முத்து தான் வாக்களித்தபடி தும்பியை விட்டு விடாமல் இன்னமும் பிடித்து வைத்துக் கொண்டிருந்தான். தும்பி, இப்பொழுது கல்லைப் பற்றியபடி துடித்துக் கொண்டிருந்தது.

''முத்து, தும்பியை விட்டுடு. அதான் நீ கேட்டுக்கிட்டபடி கல்லைத் தூக்கிடுச்சே'' என்று





நினைப்பு மூட்டினான் பாபு. அந்தக் கூட்டத்தில் அவன்தான் பெரியவன். கொஞ்சம் முரடன் கூட.

''அப்படிச் சொன்னாத் தான் தும்பி கல்லைத் தூக்கும்னு சொன்னேன். அதுக்காக இதை விட்டுட முடியுமா? இன்னும் கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்துட்டு அப்புறமாத்தான் விடுவேன்,'' என்றான் முத்து.

''பின்ன ஏண்டா முதல்லெ அப்படிச் சொன்னே?''

''என் இஷ்டம். அப்படிச் சொன்னேன். இது நான் பிடிச்ச தும்பி. இதை எப்ப விடணும்கறது எனக்குத் தெரியும்.''

அடுத்த நிமிஷம் தும்பியைப் பிடித்திருந்த முத்துவின் புறங்கையில் என்னவோ 'கர்ர்' என்று குத்தியது! முத்து கையை உதறினான். பிடி பிரிய, தும்பிக்கு விடுதலை கிடைக்க, அது தூக்கிய கல்லோடு பறந்தது! குழந்தைகள் எழுப்பிய மகிழ்ச்சி ஆரவாரம் காதைப் பிளந்தது.

கண்ணாடி போன்ற விரிந்த சிறகுகளை அசைத்து 'பர்ர்' என்று ஓசையெழுப்பியபடி பறந்தது தும்பி. காலை இளம்வெயிலின் ஒளி, சிறகுகளில் பட்ட போது வானவில்லின் வர்ணங்களை அவை வாரிச் சிதற விட்டன.

எதிரே சிறகு விரித்துப் பறந்து வந்த இன்னொரு தும்பி, ''என்னது! காலில் கல்லைத் தூக்கிட்டுப் பறக்கிறே?'' என்று வியப்போடு கேட்டது.

''அந்த இராட்சசப் பயல் முத்துவிடம் சிக்கித் தவித்த தவிப்பில், எனக்கு எல்லாமே மறந்து போச்சு. நான் இனிக்குப் பிழைச்சு வருவேன்னே நினைக்கல'' என்று கல்லை நழுவ விட்டுப் பறந்தது தும்பி.

எதிரே இரண்டு சிறிய வண்டுகள் பறந்து வந்தன. ''ஆளுக்கு ஒரு வண்டைப் புடிச்சு சாப்பிடலாமா? எனக்குக் கொலைப் பசி'' என்று கேட்டது உயிர் தப்பிய தும்பி.

''இது ரொம்பச் சின்ன வண்டு. இதோ அந்த அரச மரத்தைப் பார். உச்சிக் கிளையில் இதை விடப்





பெரிய வண்டுகள் இருக்கு. ஆளுக்கு ஒன்னாப் புடிச்சுத் தின்போம்'' என்றது பெரிய தும்பி. இரண்டும் சர்ரென்று கீழே ஜெட் விமானத்தைப் போல் பாய்ந்து வண்டுகளை கால்களில் இடுக்கிக் கொண்டு பறந்தன. பறந்தபடியே வண்டுகளைக் கடித்துத் தின்றன!

ஆமாம், நீ எப்படி அந்தப் பையன் கிட்டே சிக்கினே? பூச்சிகளிலேயே நமக்குத்தான் பார்வை சக்தி அதிகம். நம்ம ரெண்டு கண்களிலும் மொத்தமா நாற்பதாயிரம் கூட்டுக் கண்கள் இருக்கு. நமது கழுத்தை வளைக்காமல் கண்களை உருட்டி, பின்னால் இருப்பதைக் கூடப் பார்க்க முடியும். அப்படி இருக்கும் போது, நீ எப்படி இவனிடம் ஏமாந்து பிடிபட்டே?'' என்று கேட்டது பெரிய தும்பி.

''நான் கொஞ்சம் அசந்து போயிட்டேன். பஜனை மடத்து நந்தவனத்துல நிறைய நந்தியாவட்டைப் பூ பூத்திருந்தது. அதுல ஒரு பொன் வண்டு உட்கார்ந்திருந்தது. அதைப் பிடித்துத் திங்கும் ஆசையில், அது மேல தாவி, அலக்கா கால்களில் இடுக்கிக் கிட்டு, கடிக்க ஆரம்பிச்சேன். வண்டு திமிறியது. நான் புடியை இறுக்கினேன். அப்போ என் சிறகை அசைச்சேன். அந்த வேகத்தல் பார்ர்ர்...ன்னு சத்தம் எழுந்திருக்கு. இந்தப் பையன் அங்கே இருந்திருக்கான் போல இருக்கு. கட்டு விரலாலும், கட்டை விரலாலும் உடனே புடிச்சிட்டான்'' என்றது தப்பிய தும்பி.

''என்னமோ பாட்டுப் பாடினான் போல இருக்கே?''

''ஆமாம். அந்த ராட்சசப் பய ஒரு சின்ன கல்லைத் தூக்கிக்கச் சொல்லி பாட்டுப் பாடி என் கால்களுக்கு இடையே வைத்தான். நம்ம பூச்சி உணவை, நாம நம்ம கால்களில் பிடித்துத்தானே கடிக்கிறோம்? பறந்தபடி தானே தின்கிறோம்? அப்படித்தான் நானும் எண்ணி, அந்தக் கல்லைப் புடிச்சுத் தூக்கினேன். அது அந்தப் பையன்களுக்கு விநோதமாக இருந்திருக்கு. பாட்டுப் பாடினதுக்காக நான்

கல்லைத் தூக்கிகினேன்னு நினைச்சுக் கிட்டாங்க'' என்று சிரித்தது தப்பிய தும்பி.

''என்னவோ, நம்ப வாழ்க்கையே விநோதம்தான் போ. பறந்தபடியே நம்ம அம்மா தண்ணியில முட்டைகளை இட்டா. முட்டைகளா நீரில் மூழ்கி, சேற்றில் புதைந்து கொண்டோம். புழுவா வெளிவந்தும்கூட மூன்று ஆண்டுகள் சேற்றிலேயே உழன்றோம். பன்னிரண்டு முறை தோலுரித்து இப்படித் தும்பியா மாறி வெளி வந்தோம். நமக்கு நாலு இறக்கை இருப்பதால் நம்மைப் பூச்சி இனத்திலும் சேர்க்க மறுக்கிறார்கள். பறவை இனத்திலும் சேர்க்க மறுக்கிறார்கள்'' என்று அலுத்துக் கொண்டது பெரிய தும்பி.

''இந்த சிறகுகள்தான் நமக்குப் பெரிய தொந்திரவு. கடைசியா நாம்ப தோலுரித்து பூச்சியானதும், நம்ப சிறகுகள் மட்டும் முழுக்க விரிய இரண்டு மணி நேரத்திற்கும் மேல் ஆச்சதே! அப்போ விரிக்கிற சிறகுகளை நாம சாகும் வரை மடக்கிறதே இல்லையே! அதுனாலதான் ஓணான், பல்லி எல்லாம் நம்மை எளிதாய் பிடித்து விடுகின்றன'' என்றது தப்பிய தும்பி.

''ஆமாமாம். ஒரு நிமிஷத்திற்கு ஆயிரம் முறைகள் நாம்ப சிறகை அசைக்கிறோமே! சத்தம் கேட்காமலா இருக்கும்? நாம சிறகை மடக்காது பறந்தபடி நிற்பதைப் பார்த்துத்தானே மனிதர்கள் ஜெட் விமானத்தைக் கண்டு பிடித்தார்கள்!'' என்றது பெரிய தும்பி.

இலேசாக மழை தூரத் தொடங்கியது. இரண்டும் ஒரு வீட்டுக்குள் ஜன்னல் வழியாக நுழைந்தன.

''அதோ மாடிப்படி கூண்டு மூலையில் உயரே ஒரு சிலந்தி கூடு கட்டியிருக்கு. நான் போய் புடிக்கப் போறேன். சிலந்தின்னா எனக்கு உயிர்'' என்று பறந்தது பெரிய தும்பி.

சிலந்தியைத் தின்றுவிட்டு, சுவரில் பறக்கும் போது, அங்கே காத்திருக்கும் பல்லிக்கு இரையாகப் போகிறோம் என்பது அதற்கு எப்படித் தெரியும்?''

அறிவியல் உண்மைகள் :

★ தும்பி பூச்சி இனம் அல்ல

★ நீரில் புழுவாக 3 ஆண்டுகள் இருந்து, 12 முறை தோலுரித்து, தும்பியாக சிறகை விரித்து வெளிவரும். சிறகுகளை இறக்கும்வரை மடக்குவது கிடையாது. பறந்தபடி நிற்கும். தூங்கும்.

★ உணவைக் கால்களில் பிடித்து பறந்தபடி உண்ணும். கால்களில் எது சிக்கினாலும் உணவு நினைப்பில் பற்றிக் கொள்ளும்.

★ எந்தப் பக்கமும் உருட்டிப் பார்க்கவல்ல இரு பெரிய கண்கள். இவை ஒவ்வொன்றும் 20,000 கூட்டுக் கண்களின் சேர்க்கையே!

★ செடிகளில் உறங்கும். ஆயுள் சில வாரங்களே!

★ பூச்சிகளில் மிக வேகமாகப் பறக்கக் கூடியது இதுவே! (மணிக்கு 100 கி.மீ.)

பரதன் அச்சகத்தில் பரத ॥ பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈகாடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-



கூடை உயரம் இல்லீங்க;
கூட உயரம் நானுங்க!

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka